www.padippakam.com

உள்ளே:

## எஸ். பொ. சொல்கிறார்:

21ஆம் நூற்றாண்டில்

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள்

தமிழிலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள்.

ஜெயமோகனின்

## அடையாளம்

ஜனவரி 1997

விலை ரூ. 10.

படிப்பகம்

www.padippakam.com

# அ∴தெப்படி அ∴தெப்படி!

அதெப்படி
தொலைத்துவிட முடிகிறது வாழ்க்கையை
ஒரு நொடியில்?

அதெப்படி
அணைத்துக் கொள்ள முடிகிறது அவமானத்தை
அரை நொடியில்?

அதெப்படி
போர்த்திக் கொள்ள முடிகிறது துயரங்களை
நினைத்த மாத்திரத்தில்?

அதெப்படி
செத்துவிட முடிகிறது
ஒரே சுருக்கில்?

அதெப்படி
வாழத் தெரியாமலே கழிந்து போகிறது
ஒரு ஆயுட்காலம் பூரா?

—ஜெயந்தன்

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

ஆண்டுச் சந்தா ரூ. 60
ஆயுள் சந்தா ரூ. 600
சந்தாவை M. O. செய்க

படைப்பிலக்கிய இதழ் ★ ஆசிரியர்: கவிதாசரண்



முகவரி:
ஆசிரியர், "கவிதாசரண்", 31, டி.கே.எஸ். நகர், சென்னை–600 019.
தொலை பேசி எண்: 54 44 99


"மனித நேயப் பார்வையோடு, தமிழின் கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப் பயணம். தமிழுக்கான பரிமாணங்கள் யாவும் இதழுக்கான திசைகளாகும்.

●

இந்த ஆண்டு சாகித்திய அகாதமி விருது பெறுகிறார்

## அசோகமித்திரன்

மரியாதைகளைத் தாமதப்படுத்தல்கூட வாழ்வின் மீதான நம்பிக்கையை வளர்க்கத்தான் போலும். நண்பர்களோடு மகிழ்ந்து போற்றுகிறோம்.

●

மரணம் பிரேமிளைத் தின்றுகொண்டிருக்கிறது. சொந்தபந்தங்களற்றவர். தன்மானம் மிக்கவர். சகமனிதர்கள் மேல் நம்பிக்கை வைத்துச் சலிக்கச்சலிக்கத் தன் அறிவைக் கூர் தீட்டிப் பார்த்தவர். உதவி கேட்டு எந்தப் படியையும் மிதிக்காதவர். எழுத்தோ, கருத்தோ– அதன் எல்லையைத் தொட்டவர். விமர்சிப்பதில்– தான் ஓர் அருநெல்லிக் கனி போலும் அரிய படைப்பாளி என்பதையும் இரண்டாம் பட்சமாக்கியவர். அவருடைய – அவரைப் போன்றவர்களுடைய 'அடக்கம்' கௌரவிக்கப்பட வேண்டும் என்பதிலாவது நம் அறிவாளிகள் ஒன்றுபட்டால் அது நமக்கான கௌரவமாயிருக்கும். செய்வோமா?

●

சென்ற (அக். '96) இதழ் பெரியார் ஆய்வாளர்களுக்கான ஆவணமாய் அமைந்துவிட்டதால் கைவசம் ஒரு படிகூட இல்லாமல தீர்ந்துபோயிற்று. படித்து முடித்த நண்பர்கள் சிலரேனும் தங்கள் படிகளைத் தந்துதவினால் நன்றி பாராட்டுவோம்.


ஜனவரி 1997 விலை ரூ. 10.


படிப்பகம்

www.padippakam.com

# எஸ். பொன்னுத்துரையுடன் ஒரு கருத்தாடல்

**—சின்ன மருது**



ஈழ - இந்திய இலக்கிய ரசிகர்களால் செல்லமாக எஸ். பொ. என்றழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை ஐம்பது ஆண்டு காலமாக நவீன தமிழ் இலக்கியத்திற்கு சேவை செய்துவருகிறார். ஈழம் அமைதியாக இருந்த நாட்களின் வாழ்க்கையை இவருடைய படைப்பில் மட்டுமே தரிசிக்க இயலும். ஈழத்தின் வலுவான எழுத்தாளர்கள் என்று இவரையும் தளையசிங்கத்தையுமே குறிப்பிட முடியும். முற்போக்கு இலக்கிய வட்டத்தினரால் இவர் ஒதுக்கப்பட்டது ஒரு துரதிர்ஷ்டமே. ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் ஆசிரியராகப் பணியாற்றி தற்போது ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார். தமிழ்நாட்டு இதழ்கள் பலவற்றோடு, ஈழத்தில் இவர் எழுதாத இதழ்களே இல்லை என்று சொல்லுமளவிற்கு கதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடகம், விமர்சனம், மொழி பெயர்ப்பு, இதழியல், பதிப்புத் துறை என அகலமாகப் பணி செய்து வருகிறார். இவர் படைப்புகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை **தீ, சடங்கு, வீ, அவா, நனவிடை தோய்தல், 'நீலாவணன்', எஸ். பொ. நினைவுகள்** என இருபதுக்கும் மேற்பட்ட நூல்களுக்குச் சொந்தக்காரர். இவரது கொள்கைகள், இவர் தமிழக மக்களுக்குச் சொல்லிய செய்திகளைப் பேட்டியில் பார்ப்போம். —

★ கேள்வி: நீங்கள் அடிக்கடி சொல்லிவரும் "ஈழத் தமிழர்கள் தான் 21 ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியத்தை முன்னெடுத்துச் செல்வார்கள்" என்பதற்கான காரணத்தை விளக்கினால் அதற்கான நியாயத்தை நாங்கள் உணர முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



● எஸ். பொ.: ஈழத் தமிழர்கள் என்பதல்லாமல் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களே 21ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள் என்று நான் சொல்லி வருகிறேன். இது உண்மை. வெறும் கோஷமல்ல. It is not a wishful thinking. இப்படித்தான் நடக்க வேண்டும் என்று ஆசைகளைப் பிரதிபலிக்கும் அரசியல் கோஷமல்ல. சில தெளிவான நியாயங்களைக்கொண்டு இவ்வாறுதான் நடக்கும் என்ற ஒரு அனுமானமே 21ஆம் நூற்றாண்டில் ஈழத்தமிழர்கள் தலைமை தாங்குவார்கள் என்பது. முதலாவது தமிழ் நாட்டில் கடந்த ஒரு கால் நூற்றாண்டிற்கு மேலாக இலக்கியம் என்பது என்ன மாதிரியாக நடக்கிறது என்பதை நாங்கள் பார்க்க வேண்டும் இலக்கியம் என்பது 'சரஸ்'. சரஸ் என்பது ஊற்று. ஊற்று என்பது ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் புதிது புதிதாக அடுத்த தலைமுறைக்கும் செல்லக்கூடிய அற்புத பொற்பமிகு கற்பனைகள், படைப்புகள் தோன்றும். அது இல்லாவிட்டால் அது தேக்கமென்றுதான் அர்த்தம். கடந்த கால் நூற்றாண்டு காலம் திராவிட ஆட்சி தமிழ் நாட்டில் உண்டு! இந்த திராவிட இயக்கங்கள் அறிமுகப்படுத்திய தமிழ் எதுகை மோனை கொண்ட தமிழ். அறிஞர் அண்ணா அவர்களாலும் கலைஞர் கருணாநிதியாலும் அறிமுகப்பட்டு, இன்று பரவலாக மேடைகளில் உபயோகிக்கப்படும் தமிழ். இந்தத் தமிழினால் கடந்த அரை நூற்றாண்டு காலமாக இதுதான் இலக்கியம் என்று சொல்லக்கூடியதாக ஒரு இலக்கியத்தை படைக்க முடிந்ததா? இல்லை! அடுத்ததாக இன்று எதற்கும் சினிமா ஆதிக்கம் உச்சம் பெறுவதற்கு அனுமதித்துவிட்டார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். மிகமிக ஏழ்மைப்பட்ட மக்களுக்கு, மிக மலிவான பொழுது போக்கு சாதனம் சினிமா. சர்வ வல்லமை பெற்றதாக அரசியல் சமூக வாழ்க்கையில் மட்டுமல்லாமல், மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்தும் இலக்கியவாதிகூட, நாளைக்கு சினிமா சான்ஸ் கிடைக்கிறதா என்பதில் மட்டும் கண்வைத்துக் கொண்டு தன்னுடைய ஆக்க இலக்கியப் படைப்பு எத்தனங்கள் முழுவதையும் அடகு வைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை தமிழ் நாட்டில் இருக்கிறது. மூன்றாவது, புதிய சங்கதிகளை, அதாவது தீம்சை சொல்வது என்ற ஒரு வாழ்க்கை சூழ்நிலை தமிழ்நாட்டில் இல்லை. புலம்பெயர்ந்தவர்கள் எதற்காகப் புலம் பெயர்ந்தார்கள்? நிர்ப்பந்த வசத்தினால்தான் ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். It was not their choice. அதுமட்டுமல்லாமல் இன்றும் அவர்கள் தங்களுடைய இனத்தினுடைய அடையாளமாகக் கொண்டிருப்பது தமிழ்மொழி! எனவே தமிழ் நேசிப்புத்தான் அவர்களுடைய இனத்தினுடைய அடையாளமாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் குடியேறிய நாடுகளில் உள்ள செழுமை பெற்ற, பொருளாதார ரீதியில்

படிப்பகம்

www.padippakam.com



மிகவும் முன்னேற்றமடைந்த நாடுகளுடைய கலாச்சாரங்களுடன் மோதும் போது ஏற்படக்கூடிய இழப்புகள் - சோகங்கள் அல்லது கணிப்புகள் இவையனைத்தும் அவர்கள் எழுதும் தமிழுக்குப் புதிதாக இருக்கும். எனவே, 21ஆம் நூற்றாண்டிற்குச் செல்லும் பொழுது 'புதிது' ஈழத்தமிழர்களுடைய வசமும், 'தேக்கம்' தமிழ்நாட்டுத் தமிழர்களிடமும் இருக்கும். இப்படி இருக்க வேண்டும் என்பது என் ஆசை இல்லை. நான் இந்தக் குரலை தமிழ்நாட்டில் ஓங்கச்செய்து, தமிழ்நாட்டு மேடையில் சொல்லித் திரிவதற்குக் காரணம்– தமிழ்நாட்டில் இலக்கியவாதிகள் மத்தியில் ஒரு புதிய வேகத்தை, புதிய விழிப்பை உண்டாக்க வேண்டும் என்ற நன்நோக்கத்திற்காகத்தானேயொழிய அவர்களைப் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் எனக்குக் கிடையாது.

★ கேள்வி: இடையீடாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு சிறு பத்திரிகை மரபுன்னு ஒண்ணு இருக்கு. திராவிட இயக்கம் ஆட்சிக் கட்டிலில் ஏறிய அதே சமயத்தில் இங்கே கட்சி சார்ந்த / சாராத இடது சாரிகள் பல இதழ்களை நடத்திக் கொண்டிருந்தனர். வேறொரு பக்கம் 'கசடதபற' என்கிற இதழ் தோன்றியது. அவ்விதழ் 'கலை கலைக்காகவே' என்ற குழுவுடையது. அந்தக் குழுவில் வந்த சா. கந்தசாமி என்ற படைப்பாளிதான் தமிழுக்கு 'சாயாவனம்' என்ற இலக்கியத்தைத் தந்தார். இதே காலகட்டத்தில் 'தாமரை' இதழுக்கு தி. க. சி. ஆசிரியராக பொறுப்பேற்று நடத்திய நூறு இதழ்களில் கிட்டத்தட்ட முப்பதிலிருந்து நாற்பது படைப்பாளிகளைக் கண்டெடுத்து உருவாக்கினார். அவர்களில் சிலரைக் குறிப்பிட்டுச்சொல்லலாம்; பூமணி, செயப்பிரகாசம், வண்ணநிலவன், தமிழவன் போன்றவர்கள். இவர்களைப் போன்றவர்கள்தான் எழுபது, எண்பது என்ற இரு தசாப்தங்களில் பல புதிய இலக்கியங்களைத் தமிழுக்குத் தந்தவர்கள். இந்த மரபில் வந்தவர்தான் தோப்பில் முகமது மீரான். இவர்கள்தான் தமிழிலக்கியத் தேரை நல்ல பாட்டையில் இழுத்து வருகிறவர்கள். இவர்கள் நீங்கள் சொல்லிய சினிமா சான்ஸ் ஆசாமிகள் அல்லர்; அதே நேரத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன்: திராவிடக் கட்சி ஆட்சிக் கட்டிலில் ஏறிய பிறகு ஒன்றும் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால், அதற்கு முன்பு அது செய்திருக்கிறது. சரி, சிறுபத்திரிகை மரபுவாதிகளைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

● எஸ். பொ.: சிறுபத்திரிகை இயக்கம் ஓரளவுக்கு இந்தத் தேக்க நிலையைச் சரி செய்வதற்கு உழைத்து வருகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். நான் பெரும் போக்காக ஈழத்தில் அல்லது வெளி நாடுகளில் உள்ள தமிழர்களைச் சென்றடையும் பத்திரிகைகளைத்

படிப்பகம்

www.padippakam.com



தான் சொன்னேன். ஆனால் இந்த சிறுபத்திரிகைகளும் கூடப் பெரிதாகச் சாதிக்க முடியாத அளவுக்குக் குறுகிய குழுநல வேற்றுமைகளில் சாம்பிக்கொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிகிறது.

★ கேள்வி: அதை நாங்களும் ஒத்துக்கிறோம். அதே நேரத்தில் இலக்கிய வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறதே?

● எஸ். பொ.: இந்தச் சிறுபத்திரிகைகளை நீங்கள் இரண்டாகப் பிரிக்கிறீர்கள். நான் 4, 5 விதமாகப் பிரிக்க விரும்புகிறேன். ஒன்று: சில பத்திரிகைகள்– கலை கலைக்காக என்று சொல்லக்கூடிய பத்திரிகையாளர்– ஒரு ஆவேசமாகச் சொன்னாலும் புதிது செய்கிறோம் என்கிற தோரணையில் இந்த ஸ்ட்ரக்சுரலிசம், போஸ்ட் மாடர்னிசம் போன்ற சில கோஷங்களை வைத்து இதன்மூலம்தான் புதிய இலக்கியத்திற்கு திறவுகோல் கிடைக்கும் என்று சாதிக்கிறார்கள். இவைகூட அவை தோற்றப்பட்ட நாடுகளிலேயே புறக்கணிக்கப்பட்ட, நீர்த்துப் போன நிலையில்தான் தமிழ்நாட்டு வாசகனுக்கு இந்தச் சிறுபத்திரிகைகள் கொண்டு வந்து சேர்க்கின்றன.

★ கேள்வி: நீர்த்துப் போச்சுன்னா சொல்றீங்க? ஆனால் கார்சியா மார்க்வெஸ் நாவல்கள் மில்லியன் கணக்கில் விற்பனை ஆகின்றன. இவருக்குப் பின்னால் வந்த கார்லோ புயண்தஸ், இசபெல் அலண்டே போன்றோர் Magical Realism என்கிற மாய யதார்த்தவாத பாணி மற்றும் Name of the Rose நாவல் பாணி நடை என்பதெல்லாம் தொடர்ந்துதானே வந்துகொண்டு இருக்கின்றன. எப்படி நீர்த்துப் போச்சுன்னு சொல்ல முடியும்?

● எஸ். பொ: நடை என்று சொல்லுகிறீர்கள்: நடை தீம் ஆகுமா? இல்லை. தமிழில் உள்ள நடை, வேறு நடையால் புதுப்பிக்கப் படுகிறதா? தமிழ் எப்போதும் வளைந்து கொடுக்கக்கூடிய ஒன்று. வளர வேண்டிய ஒன்று. இல்லாவிட்டால் dead language– Latin. அது இல்லை. புதிய தேவைகளுக்கான நடை தமிழில் உருவாக்கப்படும். அப்படி நான் சில கதைகளிலே கையாண்டிருக்கிறேன். ஆனால் இங்கே வந்து தீம்– உள்ளீடு– சங்கதி– இது சம்பந்தமாகத்தான் இவர்கள் சொல்லுகிறார்கள். இதைப் பெயர்த்து தமிழுக்குக் கொண்டு வரும்போது, தமிழ் மொழிகூட, தமிழனுடைய உணர்வுகள்கூட, அவர்களுடைய அனுபவங்கள்கூட அதனுடன் இணைந்து இருக்க வேண்டும். இல்லாவிட்டால் 'ஒட்டு' வேலை செய்வதாக இருக்கும். இரண்டாவது, முற்போக்காளர்கள் நடத்தும் சிறுபத்திரிகைகள். இவை Sectarian கருத்துக்களை மட்டுமே பிரதிபலிக்கின்றன என்பது என் அபிப்பிராயம். முற்போக்கு என்ற

படிப்பகம்

www.padippakam.com



லேபிளை ஒட்டிக்கொண்ட எழுத்தாளர்களை நான் கடந்த 35 ஆண்டுகளாக எதிர்த்து வருவதால் என்னை மார்க்சியத்தை எதிர்ப்பவன் என்றுகூட முற்போக்கு எழுத்தாளர்கள் நிறுவ முனைந்ததுண்டு. நான் மனம் திறந்து சொல்கிறேன். நான் இன்றும் ஒரு மார்க்சியவாதிதான்.

★ கேள்வி: உங்கள் படைப்புகளில் அப்படித் தெரியவில்லையே?

● எஸ். பொ.: மார்க்சியப் படைப்பைப் படைத்த மகா வல்லபனான ஒரு எழுத்தாளரை நீங்கள் காட்டுங்கள் பார்ப்போம்.

★ கேள்வி: ஏன், சிதம்பர ரகுநாதன், செல்வராஜ், முற்கால கி. ரா., ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, பின்னால் வந்த பூமணி, செயப்பிரகாசம், பாவண்ணன், தமிழ்ச்செல்வன், மேலாண்மை பொன்னுசாமி– எவ்வளவோ பேரைக் குறிப்பிட முடியும்.

● எஸ். பொ.: இதே போன்ற ஒரு குற்றத்தைத்தான் ஈழத்தில் உள்ள இலக்கிய விமர்சகர்கள் கடந்த 20, 30 ஆண்டுகளாக செய்து வந்திருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் இந்த மாதம்கூட ஒரு புத்தகம் போடுகிறேன். அதில் கா. சிவத்தம்பி முன்னுரை எழுதியுள்ளார். அவர் எழுதுகிறார்: ஈழத்திலே டொமினிக் ஜீவா, டானியல், எம்.கே. ரகுநாதன், செ. கணேசலிங்கம் ஆகிய நால்வரே இன்றளவும் சிறுகதை மேதையாளர் என்று காட்டப்படுகிறார்கள். என்னைப் பொறுத்த மட்டில் இந்த நால்வரையும் விமர்சன ரீதியாக சிறுகதை ஆசிரியர்கள் என்று நிறுவ இயலாது. நம்ம கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற பந்தபாச உணர்வினால் இங்குள்ள முற்போக்காளர்கள் தயாரித்துள்ள ஒரு பட்டியலைத்தான் நீங்கள் ஒப்பிப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனாலும் நீங்கள் குறிப்பிட்டுள்ள எழுத்தாளர்களில் சிலரேனும் தற்காலத் தமிழிலக்கியத்திற்கு நிச்சயமான பங்களிப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. சிதம்பர ரகுநாதன் அற்புதமான எழுத்தாளர். அவர்தான் முதன்முதலாக தமிழில் விமர்சன கலை பற்றிய புத்தகம் எழுதியவர். அதுமட்டுமல்லாமல் முதன் முதலில் பாரதியார், புதுமைப்பித்தனின் பங்களிப்பு 20ஆம் நூற்றாண்டிற்கு எவ்வாறு முக்கியத்துவமுடையது என்பதை எழுதியவர். அதற்காக 'பஞ்சும் பசியும்' ஒரு அற்புதமான முற்போக்கு இலக்கியம் என்று இன்றைக்கு சிதம்பர ரகுநாதன் ஒப்புக் கொள்கிறாரா? இல்லை. அவர் ஒத்துக்கொள்ளாத ஒன்றை அவர் மீது நீங்கள் திணிக்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல் என்னுடைய 'தீ' நாவல் வருவதற்கு ஒரு தசாப்தத்திற்கு முன்னால் 'முதலிரவு' எழுதினார்.

www.padippakam.com



அந்த இலக்கியத்தை இன்று முற்போக்குக்காரர்கள் இது சிதம்பர ரகுநாதனுடைய இலக்கிய ஆற்று ஓட்டத்தில் முக்கியக் கட்டமாக வந்தது என்று சொல்கிறார்களா? இல்லை. அதுபோன்று ஜெயகாந்தனுடைய முற்காலப் படைப்புகள், சுந்தரராமசாமியினுடைய முற்காலப் படைப்புகள் என்று கி.பி., கி.மு. என்பதுபோல நீங்கள் சொல்ல வேண்டிய அவஸ்தை உங்களுக்கு ஏற்படுகிறது. காரணம்: இந்த முற்போக்கு வாதிகள் என்று சொல்பவர்கள் அரசியல் ரீதியாக மார்க்சிசத்தை ஏற்றுக் கொண்டாலும் ஒரு தனிப்பட்ட மொழியிலே நாங்கள் இலக்கியத்தைப் படைக்கும் பொழுது அந்த மொழியினுடைய தனிப்பட்ட வல்லபங்களை உள்வாங்கிக்கொண்டு தான் நாங்கள் படைக்க வேண்டும். அந்த உள்வாங்குதலை எடுக்கும் பொழுது, அந்த முழுமை வரும் பொழுது ஜெயகாந்தனோ, சுந்தரராமசாமியோ, ராஜநாராயணனோ இவர்கள் நின்று பிடிக்க முடியவில்லை. ஏனென்றால் தமிழினுடைய 'ஓர்மம்' அவர்களை இழுக்கும்பொழுது Orthodox MarxIsmதிற்கு அவர்கள் பணிய மறுக்கிறார்கள். இதை உள்ளூர் மார்க்சியவாதிகள் உணர்வதில்லை. அதுமட்டுமல்லாமல் இன்றும் கோஷமளித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள் ஈழத்தில் தமிழினம் படுகொலை செய்யப்படும் பொழுது அதுபற்றி மனித நேயத்துடன் ஒரு பொட்டுக் கண்ணீர் வடிக்க முடியாத ஒரு கற்பனாவாத மார்க்சிசம் பேசக்கூடியவர்கள். இவர்களால் இலக்கியம் வளருமா? நிச்சயம் வளர முடியாது. அண்மையில் மணியரசன், தியாகுவினுடைய பேச்சுக்களைக் கேட்டேன். ஈழத்தமிழர் பிரச்சினையை அற்புதமாக உள்வாங்கிக் கொண்ட மார்க்சிய வாதிகளாக இவர்களை தரிசிக்கிறேன். ஒரு சில சட்டசபை உறுப்பினர் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்வதற்காக சந்தர்ப்பவாத அரசியலை பேசுவதுதான் தமிழ்நாட்டின் மார்க்சிய நிலைப்பாடு. இன்று சரிவு கண்டுவிட்ட உத்யோக ரீதியான மார்க்சியவாதிகள்– அவர்களை நான் வைதீக மார்க்சியவாதிகள் என்றழைப்பதுண்டு– இந்த இருவரையும் தங்கள் தோழர்கள் என்று உரிமை பாராட்டுகிறார்களா?

★ கேள்வி: தேர்தல் பாதையில் போகக்கூடிய வலது – இடதுகள் மட்டுமே ஈழப் பிரச்சினையில் பாராமுகமாக இருந்து வருகின்றனர். தேர்தலை மறுக்கக்கூடிய மார்க்சிய – லெனினிய கட்சியினர் இன்றும்கூட ஈழப் பிரச்சினையில் சரியான நிலையெடுத்து ஆதரித்து வருகின்றனர். அண்மையில்கூட அமெரிக்க தூதராலயம் முன்பு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியதை நீங்கள் பார்த்திருக்கலாம். ஜெயகாந்தன், சு. ரா. போன்றவர்களுடைய படைப்புகள் முற்காலம், பிற்காலம் என்று பிரிக்க வேண்டியதற்கு கார

படிப்பகம்

www.padippakam.com



ணம்கூட 1952ஆம் ஆண்டு இங்கிருந்த பொதுவுடமைக் கட்சி தேர்தல் பாதையை தேர்தெடுத்து முதலாளித்துவ சீரழிவுகளுக்கு ஆளான பிறகே ஜனநாயக முற்போக்கு படைப்பாளிகளும் தங்களது கம்யூனிச சார்பை விலக்கிக் கொண்டு சீரழிந்தனர். இவர்களும்கூட புதிய பாதையைத் தேர்வு செய்யவில்லை. எடுத்துக்காட்டாக முதிய பதிப்பாளரான முத்தைய்யா அவர்கள் 'சாரதா' பேட்டியில் அப்பட்டமாகவே தெரிவித்திருந்தார் என்பதை இந்த இடத்தில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது.

● எஸ். பொ: நன்றி. அப்படிப்பட்ட சத்தியவந்தர்களான மார்க்சியவாதிகள் அதைச் செய்வார்கள். அவர்கள் இலக்கியத்தையும் வழி நடத்தக்கூடிய தத்துவத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இங்குள்ள மார்க்சிய எழுத்தாளர் என்று சொல்லக்கூடிய மார்க்ஸ் உள்பட, தமிழவன் உள்பட, தி. க. சி. போன்ற பழம் பெரும் விமர்சகர்களும் பழைய தவறான ஏதுக்களிலோ தவறான பிரமைகளிலோ தங்களுடைய கட்டுரைகளில் லாஜிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒன்று சொல்கிறேன்: தேசீய இலக்கியம் பற்றி முற்போக்குவாதிகள் இலங்கையில் பேசுகிறார்கள். அது கம்யூனிஸ்டுகள் கண்டுபிடித்த முத்து என்று முற்போக்களர்கள் கூத்தாடுகிறார்கள். இந்தக் கூட்டத்தின் தலைவராகத் திகழ்ந்த கைலாசபதின் எழுத்துக்களை பைபிளாக சொல்லக் கூடியவர்கள் இங்கே இருக்கிறார்கள். அது வந்ததற்கான முக்கியமான காரணம் Necesity of foriegn exchange. இவர் Lake House இல் இருந்தார். லேக் ஹவுசில் இருந்தபொழுது 'இந்தத் தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு- முக்கியமாக சிதம்பர ரகுநாதன், மு. வரதராசன் போன்றவர்களுக்கு காசு அனுப்பாதே. உள்ளூருல ஆக்களப் புடி!' என்ற பொழுது உள்ளூரில உள்ளவங்களுக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டு, வெளியில் வந்து 'இது தேசிய இலக்கியம் உருவாவதற்கு நாங்கள் பாடுபட்டோம்' என்று உலகத்தை ஏமாற்றிக்கொண்டிருப்பதும், அதுதான் சத்தியமான வாக்கு என்று சொல்வதும் எவ்வளவு ஒரு பேதமை. அதேபோலத்தான் டானியல் தலித் இலக்கியம் வளர்த்ததே கிடையாது. அவருடைய 'பஞ்சமர்' கதையே யாழ்ப்பாணத்தில் ஜாதியத்திற்கு எதிராக நடந்த போராட்டத்தை மிகவும் கொச்சைப்படுத்துவது–Distortion of History. அதுதான் அந்தப் படைப்பு.

★ கேள்வி: அது எப்படின்னு சொல்லுங்க.

● எஸ். பொ.: உதாரணமா பஞ்சமரிலே ஒரு பாத்திரம் வருகிறது. அந்தப் பாத்திரம் ஒரு கோவியப் பாத்திரம். அவன்தான் பஞ்சமருடைய போராட்டத்தை வழி நடத்துகிறான் என்று சொல்

படிப்பகம்

www.padippakam.com



லுகிறார். ஆனால் யாழ்ப்பாணத்திலே உண்மையிலேயே ஜாதியத்தை விடாப்பிடியாக நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக, இரு மரபும் துய்யவந்த வேளாளர்கள் பக்கத்தில் நின்று அவர்களுடைய அடியாட்களாகப் போராடியவர்கள்தான் இந்தக் கோவியர்கள். ஆனால் டேனியல் என்ன செய்கிறார்? இந்தக் கோவியர்கள்தான் ஜாதியத்திற்கெதிராகப் போராடினார்கள் என்று முழு வரலாற்றின் சாரத்தையும், உள்ளொளியையும் கொச்சைப்படுத்தி விட்டதை இங்கே உள்ள இலக்கிய விமர்சகர்கள் ‘ஆஹா! இதுவல்லவா தலித் இலக்கியம்’ என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஜாதியத்திற்கு எதிராக ஈழத்தில் முன்னின்றது டானியலின் ஜாதியாரோ டொமினிக்கின் ஜாதியாரோ அல்ல! நளவர்களே! இந்த நளவர்கள் யார்? இங்குள்ள நாடார் சாதிக்குச் சமமானவர்கள். நாடார் சாதி பிரச்சினைகளை முன் வைக்கும் இங்குள்ள மார்க்சிசவாதிகளை தலித் இலக்கியவாதிகள் என ஏற்றுக்கொள்கிறார்களா? How can such an intellectual hypocracy survive for such a long period! எனக்கு வலு வேதனையாக இருக்கிறது. இது அறிவு மோசடி. இந்த அறிவு மோசடிதான் உண்மையின் பிரகாசம் என்று சொல்லக் கூடியவர்கள்தான் சிறுபத்திரிகைகளையும் சிறு குழுக்களையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு விமோசனமே கிடையாது. நான் சொல்வதுதான் சரி என்று சொல்லவில்லை. எல்லோரும் சேர்ந்து ஒரு பெரிய விவாதத்தை நடத்துவோம். அதில் உள்ள நன்மை தீமைகளைப் பார்ப்போம். ஒரு கோஷம் அதற்கெதிரான இன்னொரு கோஷத்துடன் மோதி, இறக்க வேண்டியவை இறந்து, ஒரு புதுத்துவமான கருத்துவம் 21ஆம் நூற்றாண்டில் தோன்றட்டும். அதை விட்டுவிட்டு ஏன் இவர்கள் ஒளிந்து கொண்டு கல்லெறிகிறவன் போல தங்களுடைய வித்துவங்களை இந்த சிறுபத்திரிகைகளின் பக்கங்களில் வைத்துக் கொண்டு பிதற்றுகிறார்கள் என்று தெரியவில்லை.

★ கேள்வி: நாம் மீண்டும் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்திற்கு வருவோம். அதிலிருந்து மாறி வந்துட்டோம்னு நினைக்கிறேன். இப்போது தமிழர்கள் இல்லாத நாடுகளே கிடையாது என்கிற அளவு புலம் பெயர்ந்திருக்கிறார்கள். புலம் பெயர்ந்தாலும்கூட அவர்களுடைய இலக்கியத்தில் இன்னும் யாழ்ப்பாணத்தை வைத்தே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்படி எழுதக் கூடாது என்று சொல்லவில்லை. புலம் பெயர்ந்தோர் இலக்கியத்திற்கு அந்தந்த நாட்டு சூழல் முக்கியம். இதைத்தான் வாசகர்களாகிய நாங்கள் எதிர்பார்க்கிறோம். அது புலம் பெயர்ந்த இலக்கியங்களில் வந்திருக்கிறதா என்று சொல்லுங்கள்?

படிப்பகம்

www.padippakam.com



● எஸ். பொ.: இதில் இரண்டு விஷயங்களை நீங்கள் குழப்பி இருக்கிறீர்கள். ஒன்று புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஈழநாட்டு வாழ்க்கை பற்றி யோசித்து எழுதுவது. என்னுடைய 'நனவிடை தோய்தல்' அதுதான். ஏன் அதை எழுதுகிறோம் என்றால் நான் 'நனவிடை தோய்தலில்' எழுதியுள்ள யாழ்ப்பாண வாழ்க்கையை இன்றுள்ள தமிழர்கள் என்றென்றுக்கும் இழந்துவிட்டார்கள். அந்த வாழ்க்கையினுடைய கோலங்களையும், உயிர்ப்புகளையும், அழகை யும், அன்பையும் நாங்கள் வேறு எந்த நூற்களிலும் பதிந்து வைக்க வில்லை. இந்தப் பதிவுகளைச் செய்துவிட வேண்டும் என்கிற ஆவே சத்திலும், அவசரத்திலும் எழுதப்படுவது ஒரு பகுதி இலக்கியம். இரண்டாவதாக, புதிய நாடுகளில் வாழும் அனுபவத்தை வைத்துக் கொண்டு எழுதும் இலக்கியம். அந்த இலக்கியம்தான் 'பனியும் பனையும்' என்ற 39 கதைகளில் 37 கதைகளாவது புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள ஈழத் தமிழர்களுடைய அவலங்களை, ஓலங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அந்தக் கதைகளிலுள்ள நடை பற்றி நண்பர் சுஜாதா குறிப்பிடும் பொழுது "இவர்கள் ஏன் யாழ்ப்பாணத் தமிழில் எழுதுகிறார்கள். அது ஒரு சர்வதேச Credi bil,tyயை இழக்கிறதே" என்று சொல்லுகிறார். இந்த புலம்பெயர்ந்த தமிழன் அனைவரும் தமிழ் பண்டிதனல்ல. முறையாக தமிழ் படித் தவனல்ல. அவன் புதிய சூழலில், வேற்று மொழிச்சூழலில் தனது பதிவுகளை அவன் கற்ற அந்த மண்ணின் மொழியிலேயேதான் பரிமாறுகிறான். It is sincere language. அதனாலேதான் அவன் சொல்லுகிறான். நீங்கள் மொழியினுடைய வித்துவத்தையும் இலக் கியப் படைப்பினுடைய ஓர்மத்தையும் சமப்படுத்த வேண்டும். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஓர்மம் இருக்கிறது. அதனால் தான் அவர்கள் வழி நடத்துவார்கள் என்ற கோஷத்தை நான் சொல்லி வருகிறேன்.

★ கேள்வி: புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் பலர் படிப் பைத் துறந்து வெளியேறிய இளைஞர்கள். புலம் பெயர்ந்த நாடு களில் முதலில் அகதி அட்டை பெறவேண்டும். பிறகு வேலை செய் வதற்கான அனுமதி. கிடைக்கும் வேலையோ சாதாரணமானது. அப்படி இருக்கும் சூழலில்கூட இரண்டு விதமான படைப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. காசு கூட கிடைக்கும் எழுத்தாளர்கள் படைப்புகளில் சொகுசு வாழ்க்கையும், அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்கே அல்லல்படும் எழுத்தாளர்கள் படைப்புகளில் அவலச் சுவையையும் பார்க்க முடிகிறது. இது பற்றி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்?

● எஸ். பொ.: தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்குப் பல பிரச்சினை

படிப்பகம்

www.padippakam.com



கள் சரியாக சொல்லப்படவில்லை. நீங்கள் முந்தி இருந்த ஜெயகாந்தன், முந்தி இருந்த சுந்தரராமசாமி என்பது போல, புலம் பெயர்ந்த தமிழர்களையும் அ.மு. அ.பி. என்று பிரிக்க வேண்டும். அ.மு. என்றால் அடிக்கு முந்தியவர்கள்; அ. பி. என்றால் அடிக்கு பிந்தியவர்கள். 1983ஆம் ஆண்டு இன சங்காரத்தைத்தான் 'அடி' என்று சொல்லுகின்றேன். அடிக்கு முந்தி சென்றவர்கள் டாக்டர்கள், எஞ்சினியர்கள், அக்கௌன்டண்டுகளாக நல்ல உத்தியோகம் பார்த்தவர்கள் மண்ணைத் துறந்து தங்களுடைய தமிழ் கலாச்சாரத்தைத் துறக்கவும் தயாராகி, 'டாலர்' ஒன்றை மட்டும் நேசித்து புலம் பெயர்ந்தவர்கள். அடிக்குப் பிந்தியவர்கள் தங்களுடைய மானத்தை, தங்களுடைய உயிரை, தங்களுக்கு உரிய இனத்துவ அடையாளத்தை எங்கே சென்றாலும் கொண்டு சென்று தக்கவைக்க வேண்டும் என்ற அவதியில் ஓடியவர்கள். அப்படி ஓடியவர்கள் அதிகம் படித்தவர்களல்ல. நிர்ப்பந்தத்தினால் புலம் பெயர்ந்தவர்கள். இவர்கள்தான் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் வாழவும், வளரவும் சேவிக்கவும் தயாராக இருக்கும் கூட்டம். இவர்கள் மூலம்தான் தமிழ் 21ஆம் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. ஏனென்றால் டாலரை நேசிப்பவர்கள் தங்கள் பிள்ளைகளை 'வெள்ளைக்காரர்'களாக மாற்ற உறுதி கொண்டு போனவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் தமிழுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. சில சமயம் தங்களுடைய நகைகளையும், சாரிகளையும் ஒருகா காட்ட வேண்டும் என்பதற்காக இந்து கலாச்சார விழாக்களை– சரஸ்வதி பூசை– அதைப் போன்றவைகளைச் செய்து இந்து சமய வைதீகத்தை காப்பாற்றுவது போல தங்களையும் ஏமாற்றி, எங்களையும் ஏமாற்றி வருகின்றனர். இந்த பின்னவர்கள் பெரிய உத்தியோகம் பார்க்கவில்லை என்பது உண்மை. அவர்கள் கீழ்நிலை உத்தியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. இந்த நேரங்களில்கூட அவர்கள் தியானம் முழுவதும் ஈழ நாட்டிற்கு திரும்பிப் போக முடியுமா என்பதுதான். ஈழ நாட்டிற்குத் திரும்பி தங்கள் பிள்ளையைப் படிப்பிக்க முடியுமா? ஏனென்றால் நார்வேயில் உள்ள குளிர் நிலையிலும், ஹாலந்து, ஜெர்மனி போன்ற மற்றும் பிற நாடுகளில் பிரஜா உரிமை இல்லாமலும் இருப்பவர்கள் இன்னும் நேசித்துக் கொண்டிருப்பது 'தமிழ்'.

இரண்டாவதாக, அண்மையில் நடந்த வ. அ. இராசரத்தினம் புத்தக வெளியீட்டு விழாவில் ஈழத்தமிழ் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு. நித்திரை செய்யறவனை எழுப்பலாம் தம்பி. நித்திரை செய்யறது போல நடிக்கிறவனை எழுப்ப முடியுமா? இது ஒரு மேல் ஆதிக்க மனோநிலை. It is a complex.

படிப்பகம்

www.padippakam.com



அது inferiority complex ஆக இருந்தாலும் சரி, superiority complex ஆக இருந்தாலும் சரி. Complex is a complex. அது ஒரு நோய். அந்த நோயிலிருந்து தமிழ் நாட்டு இலக்கியவாதிகள் விழிப்படைய வேண்டும். எங்களுக்குப் புரியவில்லை. அடிக் குறிப்பு வேண்டும் என்கிறதெல்லாம் சரியா? இது கி. வா. ஜ. காலத்திலிருந்து வரும் வெற்றுக் கோஷம். தோப்பில் முகமது மீரானை தூக்கி கடலுக்குள் எறிந்து விட்டீர்களா? நாஞ்சில் தமிழ் வேண்டாம் என்று சொல்லி விட்டீர்களா? திருநெல்வேலி தமிழ் புரியாது எண்டுட்டீங்களா? அக்ரகாரத் தமிழை நிராகரித்துவிட்டீர்களா? கோவைத் தமிழ் வேண்டாமா? இது எல்லாம் சேர்ந்து உங்களுக்கு 'தேசியம்'. அது எல்லாம் சேர்ந்து தமிழ்நாட்டு இலக்கியம். ஆனால் இந்த 14 மைல் தூரமுள்ள கடலுக்கு அப்பால் பிரிக்கப்பட்டுள்வர்கள் பேசக்கூடிய இனிய தமிழைப் புரிந்துகொள்ளவும் அங்கீகரிக்கவும் இவ்வளவு பஞ்சிப்பட்டுக் கொண்டிருப்பது மகா மகா தமிழ்த் துரோகம் என்றுதான் நான் சொல்லுவேன்.

★ கேள்வி; மொழிக் கொள்கைக்குப் போவோம். இன்று புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் தங்கள் வயிற்றுப்பாட்டிற்காக அந்தந்த நாட்டு மொழியைப் பேசி, பிழைத்து வருகிறார்கள். இது அவர்களுடைய வாழ்நிலை நிர்ப்பந்தம். தாங்கள் அறிந்தோ, அறியாமலோ அந்தந்த நாட்டு மொழியை அவர்கள் கற்றாக வேண்டி உள்ளது. தமிழர்களுடைய இயல்பே எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்த நாட்டு மக்களாகி விடுவதுதான். பிறகு தமது தாய் மொழி மறந்து இரண்டாந்தர மக்களாக இருப்பது. எடுத்துக்காட்டு தென் ஆப்ரிக்கா, மடகாஸ்கர், மொரிசியஸ் முதலிய ஆங்கில-பிரஞ்சு காலனி நாடுகளில் மொழி மறந்து சமய சடங்குகளில் மட்டும் இனங் காணக்கூடியவர்களாக மாறியுள்ளவர்கள் இவர்களைப் போலவே ஈழத்துப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களும் ஆகமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

● எஸ். பொ.: இது உண்மையாக நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி. பிஜி தீவுக்கு, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் அந்தந்த நாட்டு மொழிகளிலே வல்லபம் பெற்று அந்த மொழியினராகவே மாறிவிட்டனர். இவர்கள் யார்? தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்கள்! ஏன் சென்றார்கள்? வயிற்றுப் பிழைப்புக்கு; வயிற்றுப் பிழைப்புக்கு அப்பாற்பட்ட சிந்தனைகள் இல்லை. அவர்கள் Indenture Labourer ஆக அல்லது கூலிகளாக ஆங்கிலேயே- பிரஞ்சு காலனி ஆதிக்கக்காரர்களால் கொண்டுசெல்லப்பட்டவர்கள் என்ற விவகாரம் வேண்டாம். அவர்கள் மானத்திற்காக, மொழிக்காக, உரிமைகளுக்காக போராடிச் சென்றவர்கள் அல்லர்.

படிப்பகம்

www.padippakam.com



அந்த வித்தியாசம் உங்களுக்கு தெரிய வேண்டும். இரண்டாவதாக 2000 ஆண்டுகளுக்கு முன்பு யூதர்கள் ஹீப்ரூ தேசத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். அவர்கள் தங்களுடைய நம்பிக்கைகளை நெஞ்சிலே சுமந்து கொண்டு பல்வேறு நாடுகளுக்கும் சென்றார்கள். போலந்தில் உள்ளவன் போலந்து மொழியிலேயே எழுதினான். உங்கள் மார்க்ஸ் ஜெர்மன் மொழியிலே எழுதினார். இஸ்ரேல் நாடு ஸ்தாபிக்கப்பட்டவுடன், அந்த நாட்டு மொழி ஹீப்ரு என்று பிரகடனப்படுத்தப்பட்ட பொழுது அந்தப் பல்கலைக் கழகங்களிலே பேராசிரியராக வந்தவர்கள் எல்லாம் யார்? ஜெர்மனியிலிருந்து, போலந்திலிருந்து, ரஷ்யாவிலிருந்து வந்த அவர்கள் ஹீப்ரு மொழியிலேதான் பேராசிரியராகக் கடமையாற்றினார்கள். இந்த ஹீப்ரு மொழியும், அந்த ஹீப்ரூத்துவமும் அவன் உள்ளத்திலே சாகாமல் இருந்ததற்கான காரணம்: Persecution. அந்த Persecutionஐ அவர்கள் சுமந்து கொண்டு திரிந்தார்கள். இப்போது ஈழத் தமிழர்கள் இந்த Persecutionஐச் சுமந்துகொண்டு திரிகிறார்கள். எனவேதான் இந்த ஈழத் தமிழர்கள் தொழிலுக்காக ஒரு மொழியைக் கற்று வாழ்ந்து கொண்டிருந்தாலும்கூட, அவர்கள் நாளை இந்த இனிய தமிழைப் பேசி, தங்கள் காரியங்கள் யாவற்றையும் செய்ய வேண்டும் என்று இருக்கிற, வாழ்கிற அநேக தமிழர்களை நான் புலம் பெயர்ந்த நாடுகளிலே பார்த்திருக்கிறேன். அதை வைராக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

★ கேள்வி: மீண்டும் அதே கேள்வி. வைராக்கியம் என்று சொல்கிறீர்கள். இதையும் மீறி வாழ்க்கை மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட கஷ்டத்தில் இவர்கள் மொழியை எப்படி காப்பாற்றப்போகிறார்கள் என்பது பெரிய கேள்விக்குறி. சில நாடுகளில், குறிப்பாக நார்வேயில் சிறிய தமிழ்ப்பள்ளி இருக்கிறது. லண்டனில் பெரிய பள்ளி பல ஆண்டுகளாக நடந்து வருவதாக அறிகிறோம். இதுபோல சிறு சிறு பள்ளிக்கூடங்கள் துவக்கி தமிழ் கற்றுக் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. எப்படி இருந்தாலும் வாழ்நிலைக்கு ஏற்ற மொழியில் அந்தந்த நாட்டு மொழி இருப்பதால், தாய் மொழியைவிட அந்த நாட்டு மொழியைத்தான் பிரதானமாக எடுக்க வேண்டிய சூழல் வரும். அப்போது எப்படி புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் தாய்மொழியைக் காப்பாற்றிக் கொள்ளப் போறாங்க என்பதை மீண்டும் கேள்வியாக வைக்கிறேன்?

● எஸ். பொ.: ஆஸ்திரேலியாவில் நான் வாழுகிறேன். அந்த நிலையை நான் சொல்கிறேன். ஆஸ்திரேலியாவில் சில சில பாடசாலைகள் தமிழ் கற்றுக் கொடுப்பதற்காக ஆரம்பிக்சப்பட்டனவ.

படிப்பகம்

www.padippakam.com



அதில் தமிழ் சிறார்களுக்கு தமிழ் எழுதவும், பேசவும் தமிழை விளங்கிக் கொள்ளவும் ஆன அறிவாற்றலை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. அதன் பின்னர் இந்தப் பாடசாலைகள் அனைத்தையும் ஒரு ஒன்றியமாக இணைத்து ஒரே பாடத்திட்டத்தின் கீழ் இவர்களுக்குத் தமிழைப் போதிப்பதினால் ஒரு Coordination ஏற்படுத்தலாம் என்றொரு எண்ணம் ஏற்பட்டது. தமிழ் படிப்பிக்கிறதுக்கு ஈழநாட்டிலிருந்து, தமிழ் நாட்டிலிருந்து, சிங்கப்பூரிலிருந்து தமிழ் கற்பிக்கும் பாட போதினிகளைக் கொண்டு வந்து படிப்பிக்கிறார்கள். இவை ஆஸ்திரேலியாவிலுள்ள பிள்ளைகளுக்கு ஒரு மாறுபட்ட சூழலை உண்டாக்குகிறது. அப்பொழுது பாட நூல் சபைகளில் வேலை செய்து கொண்டிருந்த என் போன்றோர்கள் ஒரு ஆலோசனை வைத்தோம்– ஆஸ்திரேலிய சூழ்நிலையில் வாழும் பிள்ளைகள் அந்த சூழலை உள்வாங்கிக் கொண்ட சூழ்நிலையில் தமிழ் கற்க வேண்டும் என்று. அதற்காக அந்த நாட்டிலே உள்ள நியூ வேல்ஸ் அரசாங்கத்திடம் இருந்து நிதி உதவி பெற்று புதிதாக ஆஸ்திரேலிய தமிழ் பிள்ளைகளுக்கான பாட நூற்களை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது முதலாவது பாடநூல் வந்துள்ளது. இரண்டாவது அச்சிலிருக்கிறது. மூன்றாவது பாடநூல் வேலைகளுக்கு நான் அங்குச் செல்ல இருக்கிறேன். இதன் மூலம் நாங்கள் என்ன சாதிக்கப் போகிறோம்? பிள்ளைகளைப் பள்ளிக்கூடச் சூழ்நிலையிலிருந்து விலக்கி தமிழ் கற்பிக்காமல் இதன் மூலம் கற்று, தமிழ் ஒரு மொழியாக– அதாவது தமிழ் ஒரு பாடமாக உயர்நிலை பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்டு இன்னும் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கிடையில் பல்கலைக் கழகத்திலும் தமிழ் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்படும். எனவே தமிழ்க் குடும்பங்களிலிருந்து– 1000 தமிழ்க் குடுபங்களிலிருந்து 2,3 பேராவது பல்கலைக்கழக மட்டத்தில்கூட தமிழ் படிக்கக்கூடிய சூழலை நாங்கள் உருவாக்குகிறோம். அது உருவாகும். அப்போது 21ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ் பேசுபவர்கள் அங்கு இருப்பார்களா என்று மாலன் போன்றவர்கள் கேட்கும் கேள்விகள் வராது. அங்கும் தமிழ்ப் படிப்பிக்கும் பேராசிரியர்கள் வருவார்கள். அடிக்கு பிந்திய தமிழர்கள் இதைச் செய்து வருகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

★ கேள்வி: ஆஸ்திரேலியா, ஆப்ரிக்காவில் எல்லாம் பணியாற்றி இருக்கிறீர்கள். அந்த சிறப்பான அனுபவத்தைக் கூறுங்கள்?

● எஸ்' பொ.: நீங்கள் நம்ப மாட்டீர்கள். நான் ஆப்ரிக்காவில் தமிழ் படிப்பிக்கப் போனவனோ என்று சொல்லித்தான் எங்கட

படிப்பகம்

www.padippakam.com



ஊரில் அதிகமானவங்கள் கேட்டவங்கள். என் மனைவியைப்பார்த்து 'நீங்க ஈஸ்வரம், ஆப்ரிக்காவில தமிழ் படிப்பிக்கிறாங்களோ— இல்லை; உங்களுடையவர் போயிருக்கிறாரே ஆப்ரிக்காவில் என்ன படிப்பிக்கிறார்,' என்று கேட்டார்கள். உண்மையில் நான் ஆப்ரிக்காவில் படிப்பிச்சது ஆங்கில இலக்கியம். அதிலும் ஆப்ரிக்க இலக்கியத்தை உட்படுத்திய இலக்கியம். Not English Literature. Literatrue in English. அங்கு ஆசிரிய கலாசாலையில் கற்பித்த போது எத்தனையோ அனுபவங்கள் இருந்தன. அவர்களிடமிருந்து தமிழ்நாட்டுக்காரர் சில உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். கலைஞர்– கவிஞர் கருணாநிதியும், அவர் தமிழ் அமைச்சுக்கு ஒருத்தர் இருக்கிறாரே தமிழ்க்குடிமகன் இவர்கள் தமிழை அவசர அவசரமாக வளர்க்க ஆசைப்படுகிறார்கள். 'சென்னை' வந்துவிட்டது. நல்லது. ஆனால் இங்கு தமிழ் நூல்கள் வெளியிடுவதும், அது நூல் நிலையங்களுக்குச் சென்றடைவதற்கும் ஏதாவது செய்கிறார்களா? நாடார் கடையில் பேப்பர் வாங்கறது போல பாரங்களை எண்ணிப் பார்த்து ஒரு Library Distribution! கண் துடைப்பு. 17 வருஷங்களுக்கு முந்தின அதே ரேட்டை வைத்துக் கொண்டு இவர்கள் செய்கிறார்கள். எவ்வளவு தூரம் தமிழை உதட்டளவில் நேசிக்கிறார்களே ஒழிய, உண்மையான தமிழ் வல்லபங்களும், உண்மையான தமிழ் இலக்கியங்களும் வாழவும் வளரவும் வசதி செய்து கொடுக்கிறார்கள் இல்லை. நைஜீரிய நாட்டில் உள்ள ஒரு அனுபவத்தைச் சொல்கிறேன். ஒரு நைஜீரிய எழுத்தாளர் ஒரு இலக்கியத்தைப் படைத்து விட்டால்— 'வோலே சொயிங்கர்' 'சினுவா அச்சுபே' இவங்களுடைய நூல் வந்தால் ஒவ்வொரு மாநிலமும் 5000 பிரதிகள் வாங்குகின்றன. அங்கே 24 மாநிலங்கள் இருக்கின்றன. 24 மாநிலங்கள் ×5 00. இவ்வளவு பிரதிகளையும் வாங்கி அவர்கள் நூல் நிலையங்களுக்கு மட்டும் அல்லாமல் ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பி வைக்கிறார்கள். எனவே ஒரு பிரதி First Editionலேயே பிரதிக்கு ஆசிரியர்களுக்கு ஒரு ரூபாய் ராயல்டி வந்தால்கூட ஒரு இலட்சத்துக்கு மேலே ஒரு புஸ்தகத்துக்கு ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்தத் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் நேசர்களால் தமிழ் எவ்வாறு வளர்க்கப்படுகிறது என்பதை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

★ கேள்வி: மேலும் உங்களுடைய சிறப்பான அனுபவங்களைக் கூறுங்கள்.

● எஸ். பொ.: ஆப்ரிக்கர்களுடைய உணவுப் பழக்க வழக்கங்கள், சம்பிரதாய பழக்க வழக்கங்கள், அவர்களின் நம்பிக்கையின் பழக்க வழக்கங்கள்– அவற்றைப் பற்றி ஏராளமாகச் சொல்லலாம். நான்

படிப்பகம்

www.padippakam.com



ஆசிரியனாக இருந்த பொழுது ஆப்ரிக்காவில் உள்ள இலக்கியத்தை 3 வகையாகப் பிரித்து விளங்கிக் கொண்டேன். 1. Frankaphone Literature என்றால் முந்திய பிரஞ்சு குடியேற்றத்திற்கு உட்பட்ட நாடுகளில் உள்ளவர்கள் பிரஞ்சு மொழியில் எழுதுகிறார்கள். மற்றது 2. Anglophone Literature இங்கிலாந்துக்காரன் குடியேற்ற நாடுகளில் ஆங்கிலத்தில் எழுதப்படும் இலக்கியம். 3. வட ஆப்ரிக்காவில் அராபிய மொழி பேசுபவர்கள், அராபிய மொழி மரபு பற்றி எழுதப்படும் இலக்கியங்கள். இந்த 3 வகையான இலக்கிய வகைகளும் ஆப்ரிக்க கண்டத்தில் இருக்கிறது. ஆனால் இந்த ஒவ்வொரு வகை இலக்கியத்திலும் அந்த உள்ளூர் ஆட்களுடைய மரபுச் சொற்றொடர்களைக்கூட கொண்டு வருகிறார்கள். சினுவா அச்சுபே நாவல்களில் பார்த்தீர்களென்றால் இந்த இபொ காரர்களுடைய இபொ மொழியிலுள்ள மரபுச் சொற்றொடர்களை எல்லாம் ஆங்கிலப்படுத்தி, அதே ஒரு புதிய ஆங்கிலம் போன்று he has enriched English language. அதை ஆங்கிலேயன் ஏற்றுக் கொள்கிறான். ஆனால் இங்குள்ள தமிழன் இன்னும் ஈழத் தமிழ் புரியதில்லே என்று சொல்லிக் கொண்டிருக்கின்றான். அடுத்தது இந்த ஆப்ரிக்கர்கள் தங்கள் இலக்கியத்தை வளர்க்கும் பொழுது நோபல் பரிசு பெற்ற வோலே சொயிங்காவுடைய நாடகங்கள் புதிதாக இருந்தது உலக இலக்கியத்தில் என்பதற்கு காரணம்: அவர் யொருபா இனத்தினுடைய கலாச்சார விழுமியங்கள் அனைத்தையும் உள்வாங்கி அதற்கொரு சிறப்புடன் கொடுக்கிறார். அவர்களுடைய கலாச்சாரத்திலேயே The Talking Drum என்று ஒன்று இருக்கிறது. பேசும் முரசு. இந்த முரசிலே ஓசை எழுப்பும் பொழுது சில நிச்சயமான செய்திகளை மக்களுக்குள் பதிய வைக்கிறது. அதைக் கொண்டு வந்து ஆங்கில மேடையிலே ஏற்றினார். இவ்வாறாக இந்த புதிய தலைமுறையைச் சேர்ந்த ஆப்ரிக்க இலக்கியவாதிகள் தங்கள் மண்ணின் நேசிப்பை பிரதானமாகக் கொணடுவந்து சேர்க்கிறார்கள்.

★ கேள்வி: ஆப்ரிக்க எழுத்தாளர்கள் யாருடனாவது உங்களுக்கு பரிச்சயம் இருந்ததா?

● எஸ். பொ.: (சொன்னா) அது புளுகுறது போல இருக்கும். ஹௌசா நாட்டினுடைய எழுத்தாளன் எக்கூம்சி நல்லதொரு நண்பன். வோலே சொயிங்கா நண்பன் என்று சொல்ல முடியாவிட்டாலும் பழகி இருக்கிறேன். சினுவா அச்சுபேதான் உண்மையிலேயே ஆப்ரிக்க இலக்கியத்தை சிறப்பாக, முக்கியமாக மேற்கு ஆப்ரிக்க இலக்கியங்களுக்கு வடிவம் கொடுத்தார். வடிவம் கொடுத்தது மட்டுமல்லாமல், அங்கீகாரம் செய்வதற்காக Best African Literature Publishing House க்கு அவர்தான் முழுமூச்சாக உழைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com



சில வருடங்களுக்கு முன் பெங்களூரிலே நடந்த Writers' Work shop-க்கு அவர் வந்திருந்தார் என்று கேள்வி. மற்றது ஆப்ரிக்க கண்டமென்பது பெரிய கண்டம். அவர்களுடைய இலக்கியங்களை கட்டாயம் நாம் வாசிக்க வேண்டும். ‘இன்று ஒரு தப்பான அபிப் பிராயம் Made in Americaதான் Best என்று ஒரு கூட்டத்தாரும் இன்றும் Made in Russia கார்க்கி தொடக்கம் என்ற மற்றொரு கூட்டத்தாருமாக நாங்கள் வாழ்ந்து வருகிறோம். ஆனால் கலாச் சார ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் மேலைநாட்டினரின் ஆதிக் கத்தின்கீழ் 2, 3 தலைமுறைகளை நாங்கள் இழந்துவிட்டோம்’ என் கிற ஆவேசத்துடன் ‘இழந்து போன மரபு, கலாச்சார விழுமியங் களை மீட்டெடுக்க வேண்டும்’ என்ற ஒரு ஆவேசத்துடன் கலை இலக்கியம் படைக்கும் படைப்பாளியை நாம் ஆப்ரிக்காவில்தான் பார்க்கலாம். எனவேதான் ஆப்ரிக்க இலக்கியங்கள் அனைத்தும் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இந்திரன் சில செய்திருப்பதாக கேள்வி. நான் ஆசிரியனாக இருந்தபொழுது ஆப்ரிக்க இலக்கியங் கள் அத்தனையையும் எடுத்து வைத்துக்கொண்டு எகிப்து, கானா, ஜாம்பியா, கினியா, செனகல், கெமரூன், நைஜீரியா, தென் ஆப்ரிக்கா போன்ற ஒவ்வொரு நாட்டினுடைய அவர்கள் படைத்த சிறந்த இலக்கியம், நாவல் இதுதான் என்பதை தேர்ந்தெடுத்து—அப்படி தேர்ந்தெடுத்தது எனது தனிப்பட்ட ரசனையின் அடிப்படையில் அல்ல. அந்தந்த நாடுகளில் நிலவக்கூடிய விமர்சன அபிப்பிராய அடிப்படையிலும் ஆகும்— சிறந்த நாவல்களையெல்லாம் மொழி பெயர்க்க வேண்டும் என்று நினைத்து 4, 5 நாவல்களை மொழி பெயர்த்திருக்கிறேன். சென்ற தடவை வந்த போது ஹாலா ( Zhala ) என்றொரு நாவல்— அதை இங்கு கொடுக்க, அது ஆபாச இலக்கியம் என்றார்கள். நாங்கள் எங்களுடைய கலாச்சார அளவு கோல்களைக் கொண்டு மற்ற நாட்டாரின் உணர்வுகளையும் கலாச் சாரத்தையும் அளக்கக்கூடாது. இந்தப் பண்பை எப்போது விடப் போகிறோம். அப்போதுதான் விடிவு ஏற்படும். அதுபோல கென்யா. அந்த நாட்டிலே உள்ள Weep not Child. அந்த நாவல் எனக்குப் பிடித்ததற்குக் காரணம் அது எங்கட நாட்டு இன்றைய சூழலுடன் ஒத்துப் போவதால்தான். It is true today even in Cylon. தென்னாப்ரிக்கக் கவிஞன் மிட்சாலி. அவனொரு Post Peon. ஒரு சாதாரண ஆள். ஆனால் உலக மகா கவிஞன் போன்று சில கவி தைகள் எழுதியிருக்கிறான். இதை முழுவதையும் கொண்டு வந்து தமிழ் நாட்டில் நாங்கள் சேர்க்க வேண்டும். அதனால்தான் நான் சொல்லி வருகிறேன்: “21ஆம் நூற்றாண்டில் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தமிழிலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள்” என்று. இதற்கு இன்னொரு காரணத்தை சொல்கிறேன். பாரிசில் இருக்கும் எனது மாணவன் கலாமோகன் ஒரு ஆப்ரிக்காரியைத்

படிப்பகம்

www.padippakam.com



கல்யாணம் கட்டி இருக்கிறான். பிரஞ்சு மொழியில் அவன் கவிதைகள் இயற்றுகிறான். பிரஞ்சு விமர்சகர்கள் அவனது கவிதைகள் தரமானவை என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் தமிழர்கள் அந்த மொழியில் வல்லபம் பெற்று தமிழுக்குக் கொண்டு வருவதில் முனைப்பாக இருக்கிறார்கள். அப்படியான தொகுதிதான் 'தாய்' என்ற கதை. இது நாள்வரை அண்டர்சன் என்று டேனிஷ் இலக்கிய மேதையை நினைத்துக் கொண்டிருந்தோம். அனசன் என்பதுதான் சரி. அதே போல டேனிஷ் மொழியில் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு செல்ல, பிரஞ்சு மொழியில் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு செல்ல, ஆங்கில மொழியில் தமிழிலக்கியங்களைக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு இயக்கத்தை புலம் பெயர்ந்த தமிழர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதற்கு முன்னோடியாகத்தான் அந்தந்த நாடுகளிலும், அந்த மொழியிலும் உள்ள இலக்கிய வல்லபங்களை தமிழ் மொழியில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். இது இரண்டு வழி பாதையாக இருக்கிறது. திருவேணி சங்கமம் என்று சொல்வார்கள். கங்கையும் யமுனையும் அதில் ஒரு பாதாள நதியாக சரஸ்வதியும் வந்து கலப்பதாகச் சொல்லுவார்கள். இது தான் திரிவேணி சங்கமம். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் கங்கையும் யமுனையும் கலப்பது போன்று தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள இரு வேறுபட்ட கலாச்சாரத்தை: ஒன்று அங்குள்ள கலாச்சாரம். மற்றொன்று இவர்கள் எடுத்துச்சென்ற தமிழ்க் கலாச்சாரம் - நான் அடிக்கடி இங்கு தமிழ் நாட்டிற்கு வந்து செல்வதின் பிரதான காரணம்: அந்த இரண்டு சங்கமத்துடன் பாதான கங்கையாக சரஸ்வதியும் சேர்ந்து உருவாகத்தான். 21 ஆம் நூற்றாண்டிலே வளமான, ஆரோக்கியமான இலக்கியம் படைப்பதற்கான இந்த பாதாள கங்கை அல்லது சரஸ்வதியாக நான் சொல்வது தமிழ் நாட்டிலுள்ள வாசகர், இலக்கிய ரசிகர்கள். என்ன இருந்தாலும் தமிழ்நாடுதான் என்றும் ஒரு கலாச்சார தலைநகராகவும் கலாச்சார கூடமாகவும் இருக்கும். அதை மறந்து நாங்கள் வாழவில்லை. அதற்கு தயாராக தமிழ்நாட்டு இலக்கியவாதிகள் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ●

படிப்பகம்

www.padippakam.com



என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏட்டுக்கு வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் புத்திருப்பேன்.

# அடையாளம்

அண்மையில் படைப்பாளி ஜெயமோகனின் ஒரு கட்டுரையையும் ('மூன்றாவது புது வெள்ளம்'- தினமணி, 6-11-1996) ஒரு நேர்காணலையும் ('தமிழ்தான் என் மனதோட மொழி'- புதியபார்வை, -15, நவம்பர் 1996) படிக்க நேர்ந்தது. தமிழ்த் தளத்தின் அனுசரணையான ஒரு வார்ப்பைக் குலைத்துப் பார்ப்பதற்கான வெடித் தூளும் கரித் தூளும் அவரிடம் கணிசமாகவே உள்ளன.

ஒரு மனிதனை 'அடையாளமற்றவ'னாகக் குறிப்பதற்கான சொல் 'ஆள்'. தமிழ் மரபில் அதன் பயன்பாடு அப்படித்தான். ஜெயமோகன் அந்தச் சொல்லைப் படைப்பாளிகள் போன்ற முத்திரை பதித்த மனிதர்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்துகிறார். அவருடைய மொழி மரபுப்படி அது மரியாதையான சுட்டல் என்று தெரிகிறது. அதாவது, அவர் தமிழில் எழுதினாலும் தன் மரபான அடையாளத்தை ஒரு தீவிரத்தோடு தக்க வைத்துக் கொள்கிறார். அதே தீவிரத்தோடு அவர் ஒரு 'மெய்காண்' வேள்வியாளராகவும் தன்னைத் தக்க வைத்துக் கொண்டவர். ஆகவே, சமூகத் தளத்தில் பெயர் பெற்றவர்களின் ஒழுக்கங்களை அவர்களின் விந்துச் சீழில் தொடங்கி, தேடித்துருவும் அழகியல் வாதியாகவும் அறியப்படுகிறார். (26-10-9 தினமணியில் அவர் எழுதிய கட்டுரை, 'கார்ல் மார்க்ஸ், மாசேதுங், பெரியார், அம்பேத்கர், ராம் விலாஸ் பாஸ்வான் ஆகியோர் தம் அந்தரங்க இருட்டை மூடிமறைத்த ஒழுக்கங்கெட்டவர்கள். இவர்களும் இவர்களது சீடர்களும்— மலம் கழிப்பது வரை திறந்த புத்தகமாயிருந்த 'மகாத்மா'வை விமர்சிக்க அருகதை இல்லாதவர்கள்' என்று மெய்காண்கிறது ) இந்தப் பின் புலத்தில்தான் ஆணவமான, அகந்தையான, ஆரவாரமான, அலட்சியமான, போக்கிரித்

படிப்பகம்

www.padippakam.com



தனமான எல்லா விளிப்புகளும் ஜெயமோகனைப் பொறுத்த வரை மேன்மையான, நேர்மையான, மேதைமையான 'படைப்பு மனத்'தின் அவதூறும் வசைகளுமற்ற கண்ணிய மான வெளிப்பாடுகள் ஆகின்றன. இப்படியான புரிதல் பற்றிய ஞானக் குறைவால்தான் ஜெயமோகனின் இரைச்சல் தி. க. சி.க்குப் 'புற்று நோயின் சின்ன'மாகவும், எஸ். வி. ஆர்.க்கு 'தனக்குத்தானே குத்திக் கொண்ட இன்டலெக்சுவல் ஆக்மார்க் முத்திரை'யாகவும் தென்படுகிறது.

ஜெயமோகன் மலையாளத்தில் எழுதுவதை, "தமிழோட சிந்தனையை மலையாளத்துல மொழி பெயர்த்த மாதிரி" என்று சொன்னாலும், அவருக்கும் தமிழுக்கும் உள்ள இடை வெளியை நன்றாகவே அறிந்தவர். அவருடைய அறிவகந்தை விளையாடி மகிழவென்று அவரால் பிடிவாதமாக நீட்டிக்கப் படும் இடைவெளி அது. இச்சூழலில் "தமிழ்தான் என் மனதோட மொழி" என்ற அவரின் கூற்று, தமிழால் புனை வுறும் அவரது அறிவகந்தை மனத்தின் உருவகமாகி குரங்காட் டம் போடுவதாகவே தெரிகிறது.

ஜெயமோகன் தன்னைத் தமிழ் நாட்டிலுள்ள மொழி சார்ந்த சிறுபான்மையினருள் ஒருவராகவே அடையாளப் படுத்திக் கொள்கிறார். தமிழகத்தில் இயங்கிவரும் மொழிச் சிறுபான்மைப் படைப்பாளிகள் பெரும்பாலோர் தாங்கள் சிறு பான்மையினர் என்பதையே மறந்து போனவர்கள். தமி ழைத் தவிர வேறு மொழியில் எழுதத் தெரியாதவர்கள். தமிழ் மரபறிந்து அதுவாகவே ஆனவர்கள். வேற்றிடங்களில் வேர் களற்றவர்கள். இவர்களைப் போலவே தமிழிலிருந்து கன்ன டம், தெலுங்கு போன்ற பிறமொழிகளுக்குச் சென்று, அங்கு பெரும் படைப்பாளிகளாய்ப் புகழ் பெற்றவர்களும் அந்தந்த மொழி மரபினர்களாகவே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள்.

ஜெயமோகன் அப்படியல்ல. அவர் அடையாளச் சிக்கல் உள்ளவர். உள்ளுறை மொழி சார்ந்த, இனக்குழு மரபு சார்ந்த, கற்பிதக் கலாச்சாரம் சார்ந்த அடையாளச் சிக்கல் அது. ஜெயமோகனை தி. ஜானகிராமன் கவராமல் போனது சுந்தர ராமசாமி சிக்கென ஆட்கொண்டதும் அந்தச் சிக் கலின் எளிமையான வெளிப்பாடுகள்தாம். அது நம்மைவிட அவருக்கு நன்றாகவே தெரியும். தெரிந்ததோடு, தன் அடை

படிப்பகம்

www.padippakam.com



யாளச் சிக்கலையே தனக்கு வாய்த்த உயர் தகுதியாகவும், தமிழ்த்தளத்தில் தன்னை ஒரு கொம்பனாகக் காட்டிக் கொள்ளும் கவசமாகவும் பாவித்து வருகிறார். மலையாளம் வழியாகத்தான் தமிழில் நவீன இலக்கியம், நாவல், நாவலுக்குரிய Vision, நுட்பமான விமசர்சனம் ஏதும் இல்லை என்பது அவருக்குத் தெரியவருகிறது. "சாதாரண யுனிவர்சிடியில மொழியியல்ல ஒரு சில்லறை பிஎச்டி வாங்குனவுங்கல்லாம் தமிழ்ல பெரிய அறிஞரா ஆயிடறாங்க," என்ற சில்லறைத் தனமான 'உண்மை'கூட, 'குரு நித்ய சைதன்ய யதி' என்னும் மலையாளப் 'பேரறிஞரைப்' பார்த்ததும்தான் அவருக்குப் புரிகிறது.

அனைத்துக்கும் மேலாக, தமிழின் போதாமைகளை நிறைவு செய்வதற்குத் தான்மட்டுமே நேர்ந்துவிடப்பட்டிருப்பதாக அவருக்குள் ஒரு Vision விரைத்துக் கொண்டு நிற்கிறது. அதாவது, தமிழை மலையாளத்தின் மேன்மையால் அளந்து அதன் பதிலியாய் உருவகிக்கும் spiritual vision. "அதையும் நான்தானே செய்ய வேண்டியிருக்கிறது," என்று வக்கரிப் போடு அரற்றுவதில் அவருக்கு ஒரு ஆனந்தம் வருகிறது.

"எது தன்னுடைய பலவீனமாக இருக்கிறதோ அதையே தன்னுடைய பலமாக நினைத்துக் கொள்கிற மனோபாவம் தமிழில் இருக்கு" என்பதை அறிந்து வைத்திருக்கிறார் ஜெயமோகன். வேற்றாளை நம்மாளாய் ஆக்கிக்கொள்ளும் குணம்-அதுவும் தன்னை ஆள்கிறவனாகவே ஆக்கிப் பூரிக்கிற உலகிலேயே முதல் மனிதன் இந்தத் தமிழன்தான் என்பது அவருக்குப் பலமாகிறது. ஆகவே தமிழ்த் தளத்தில் இயங்குகிறவர்களை ஈனப்படுத்தும் அவரின் அரிப்பை அவரது ஞானம் என்று ஏற்றுக் கொள்ளும் தமிழ் மனோபாவமே அவர் பிரகடனங்களுக்கான பலமாகிறது.

எம். கோவிந்தன் என்னும் மலையாளத் தோழர் ஓர் இயக்கம் தொடங்கினார். மலையாளத்தில் கலக்கப்படும் சமஸ்கிருதச் சொற்களைக் களைந்து, அவ்விடத்தில் 'பச்ச மலயாளத்த'- 'துய மலையாளச் சொற்களைப் பயன்படுத்தும் இயக்கம் அது. அது மாதிரி இயக்கத்தை நம்பூதிரிகளும் நாயர்களுமே ஒரு காலத்தில் திட்டமிட்டவர்கள்தாம். ஆனால் அதன் எதிர்வினை தங்கள் மேலாண்மையைக் கேள்விக்குள்ளாக்கிவிடும் என்று அறிந்ததும் உடனடியாக ஏறக்கட்டிவிட்டனர். பச்ச மலயாளம் அந்த மொழியைத் தமிழுக்கு மிக

படிப்பகம்

www.padippakam.com



நெருக்கமாகக் கொண்டு வந்துவிடும் சாத்தியமுள்ளது சில நூற்றாண்டுகளுக்கு முன்னான மலையாளச் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் ஒரு சராசரித் தமிழனால் மொழிபெயர்ப்பில் லாமல் படித்துப் புரிந்துகொள்ளும்படிதான் உள்ளன. கோவிந் தனின் இயக்கம் வெற்றி பெற்றிருக்குமானால் மலையாளத் துக்கும் தமிழுக்குமிடையே மொழிபெயர்ப்புச் சுவர் தகர்ந்து போயிருக்கும். தமிழ் மரபின் நீட்சியாக மலையாள மரபும் தன் இருப்பிடத்தில் நிலைப்பட்டிருக்கும். ஆனால் இது சமஸ்கிருதமயமாக்கலுக்கு விழும் மரண அடி. ஆகவே கோவிந் தன் 'மலையாளிகளுக்கு எதிரானவர்' என்று முத்திரை குத் தப்பட்டு அவர் இயக்கம் கடுமையாக எதிர்க்கப்பட்டது. ஜெய மோகன் தனக்கு உடன்பாடான கருத்துகளை வெளிப்படுத் துவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்குவதிலும் கேள்விகளைப் புனைவதிலும் தேர்ச்சி பெற்றவர். மலையாளக் கவி சச்சி தானந்தனுடனான நேர்காணலில் அவர் பதிலாக, 'கோவிந்த னின் இயக்கம் பரபரப்பு ஏற்படுத்தும் கோமாளித்தனமா னது' என்னும் கருத்தைப் பெற்று, அதுபற்றி மேற்கேள்வி இல்லாமல் முடிக்கிறார். இதில் ஜெயமோகன் நிற்கும் இடம் தான் நமக்கு முக்கியம். கோவிந்தன் தோற்றுவிட்ட ஒன்றில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவு— தங்கள் மொழியை மணிப்பிரவாளத்திலிருந்து மீட்டுத் தமிழ்ப்படுத்தியதில் வெற்றி பெற்றுள்ளார்கள். இந்த வெற்றிக்குத் தனித் தமிழ் இயக்கங் களும் திராவிட இயக்கங்களும் பெரும் பங்காற்றின என்னும் உண்மையோடு, தமிழ்ச் சமூகத்தின் தகவமைப்பும் அதை ஏற்றுக் கொள்ளும் தன்மையிலேயே உள்ளதும் இணையான காரணம். இதுதான் மலையாளக் கற்பிதக் கலாச்சாரமும் தமிழின் தகவமை கலாச்சாரமும் கிளை பிரியும் இடம். ஜெயமோகனின் அடையாளச் சிக்கல் பிறக்குமிடம்.

'ஜெயமோகன் தமிழர்களுக்கு எதிரானவர்' என்னும் கருத்தின் மேல் "எம் கோவிந்தனுக்கு எதிராக மலையாளத் துல உருவான பெரிய அலை" போல தமிழகத்தில் இல்லை என்பது அவருக்கான அதிர்ஷ்டம்தானே தவிர, மற்றபடி அவரின் செவிப்பறை கிழிக்கும்படியான எழுத்துகளின் கட்டு டைப்பாக, 'ஜெயமோகன் தமிழ் மரபுக்கு அந்நியமான ஆள்' என்பதை நாம் சொல்லித்தான் ஆகவேண்டும். அவருடைய கலாச்சாரம் "நம்பூதிரிகள் முண்டெல்லாம் கொடுப்பாங் கல்ல" அதை ஓர் இலக்கியப் பரிசைவிடப் பெரிய விஷயமாகப்

படிப்பகம்

www.padippakam.com



பாவிக்கும் கலாச்சாரம். அவரின் ஆன்மீகம் மதத்தின் அடிநாதமாக விளங்கும் ஆன்மீகம். அந்த மதம் ஆசையின் எல்லைவரை கடவுளர்களைப் புனைவதிலும் மனிதர்களைப் படிநிலைப் படுத்துவதிலும் உயிர் தரிக்கும் மதம். அதன் இயக்கம் பயம் - பக்தி என்னும் வன்முறை நாண்களால் இழுத்துக் கட்டப்பட்ட பறையின் முழக்கம். அதன் தேடல் தனிமனிதக் கடைத்தேற்றத்துக்கான சூனியத்தின் தேடல். ஒரு சராசரி மனிதனுக்கு இதன் ஒவ்வொரு கட்டமும் அர்த்தப்பட்டு உடைபடாமலிருக்க அதன் திரண்ட போதமாக ஒரு மௌடிக மனோபாவத்தின் கேள்விகளற்ற உருவேற்றல் ஓர் இயக்கம் போல இடையறாமல் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த மதம் சார்ந்த ஆன்மிகப் பாசாங்கு நீரில் இன்று தமிழ்ச் சமூகம் முற்றாகவே முழுகி நிற்கிறதுதான்— ஒரு தங்கக் கட்டியை கிணற்று நீரில் முழுக்கினாற்போல. நீர்ப் பாசி ஏறி பாறாங்கல் மாதிரி கிடந்தாலும், அதனை எடுத்துத் துலக்கிப் புதுக்கினால் மீண்டும் தங்கமாய்த் தகிக்கக்கூடியது தான். திராவிடத்தின் பிற மாநிலங்கள் சமஸ்கிருதக் கலாச்சாரத்தோடு பிணக்கற்று ரசாயனக் கலவை புரியத் தொடங்கி விட்ட நிலையிலும், (ஏற்றாற்போல் அவை தம் மொழிகளின் வரிவடிவங்களைத் தகவமைத்துக் கொண்டுவிட்டன) தமிழ் மட்டும் அதனுடனான பௌதிகக் கலவையோடே நிற்கிறது. வேண்டும் போது பிரித்தெடுத்து விடலாம்.

இதன் காரணம், தமிழின் வேர்கள் சித்தர் மரபைச் சார்ந்தவை என்பதுதான். சங்க இலக்கியம் அந்த மரபின் யதார்த்தக் கருவூலம். குறைந்த பட்சம் 'ஆன்மிகம்' என்ற சொல்கூட அந்தக் கருவூலத்தில் இல்லை என்பது அதன் இயற் பண்புக்குச் சான்று. சமஸ்கிருதக் கலாச்சாரத்தின் இடைவிடாத தாக்குதலில் 'பரிபாடல்' காலத்துக்கப்பால் மத மரபுத் தாக்கம் கட்டற்றுப் போன போது, 'சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ. நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்'' என்று தன் மத மறுப்புக் குரலெடுத்து முழங்கியது. சித்தர் மரபு என்பது அறிவு மரபு. கேள்விகளை அனுமதிக்கும் அறிவு மரபு. கேள்விகள் அடங்கல் என்பது பம்பரம் தூங்கல் மாதிரி—அடங்கலும் தூங்கலும் அறிதுயில் தோற்றங்கள். உயிரின் சாட்டைச் சொடுக்கலில் தூங்கும் பம்பரங்கள். ஆன்மா என்பது உயிரின் அலங்காரம்

படிப்பகம்

www.padippakam.com



தான். அலங்காரம் எப்போதும் மூலத்தைப் பின்தள்ளிப் புனைவுகளைப் பிடித்துக் கொள்ளும். புனைவுகள் எப்போதும் வேற்றுமைகளைப் போற்றும். இந்தப் போற்றிகள்தாம் வேதங்கள்.

வேத மத மரபின் மூர்க்கத் தாக்குதலில் இந்தச் சித்தர் மரபு ஒரு கிளர்ச்சி மரபாகப் பரிணாமம் கொள்ளும்படியாயிற்று. வேத மரபைக் கேள்விக்குள்ளாக்கியவர்கள் யாவரும் தமிழர்களுக்கு உவப்பானவர்களாயினர். வேத மரபுக்கெதிராக இயக்கம் கட்டிய புத்தரையும் அவரோடு அருகரையும் இந்த மண் முழுமையாக ஏற்றுக்கொண்ட காலம் ஒன்றிருந்தது. பின்னர் வள்ளுவர் வந்தார். சித்தர்கள் வந்தார்கள். கடைசியில் பெரியார் வந்தார்.

மறைந்துவிட்ட பெரியாருக்கு உத்தரப் பிரதேசத்தில் இன்றும்கூட ஒரு சிலை வைக்க முடியவில்லை. ஆனால் இந்தத் தமிழகம் "கடவுள் இல்லை. இல்லவே இல்லை. கடவுளை நம்புகிறவன் முட்டாள்" என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே முழக்கமிட்டவரைப் 'பெரியார்' என்று பெயர் சூட்டி ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, அவரை 94 ஆண்டு காலம் பாதுகாத்தும் வைத்தது. இந்தக் கடவுள் மறுப்பு முழக்கங்களைக் காஞ்சி சங்கர மடத்துக்கெதிரே பொறித்து வைக்கும் நெஞ்சுறுதியையும் பெற்றது. இதுதான் தமிழ்க் கலாச்சாரம்.

இது பற்றியெல்லாம் ஜெயமோகன் மதிப்பிடத் தேவையில்லை என்று நினைக்கிறார். விமர்சகனின் இந்தப் பார்வைக் கோளாறுக்குப் பிறகு பெறப்படுவதென்ன?

ஜெயமோகன் முன்னர் ஒரு மத அடிப்படைவாத அமைப்பில் உறுப்பினராயிருந்தவர். இப்போது அவர்கள் இவரை 'துரோகி' என்றழைக்கிறார்கள் எனில், அதிலிருந்து விலகி விட்டார் என்றாகிறது. அதனாலேயே இவர் மார்க்சியம்-பெரியாரியம் பேசத் தொடங்கிவிட்டார் என்று பொருளல்ல. ஒரு படைப்பாளி என்கிற வகையில் தனக்கான சுதந்திரத்தைத் தக்கவைத்துக் கொள்ளத்தான் வெளியேறியிருப்பார். இவர் மதிக்கும் மகாத்மாவின் ஒழுக்கத்தைக் கொச்சைப் படுத்தும் பால் தாக்கரேயை இப்போது இவரால் கண்டிக்க முடியும். இவர் அந்த இயக்கங்களைப் பற்றிக் கடுமையாக விமர்சித்திருக்கலாம். அவை யாவும் நடைமுறை வெளிப்பாடுகள் பற்றிய

—இதன் தொடர்ச்சி 74ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# இழப்புப் பாடல்களில் எதிர்க் குரல்

—கழனியூரன்

'இழப்புப் பாடல்கள்' என்ற சொல்லாட்சி இங்கு ஒப்பாரிப் பாடல்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப் படுகிறது. தமிழில் 'கையறு நிலைப் பாடல்'களையும் இழப்புப் பாடல்கள் வகையில் சேர்க்கலாம்.

அரசியல் தலைவர்கள் மறைந்த போது கண்ணதாசன் முதலிய கவிஞர்கள் பாடிய பாடல்களையும் 'இழப்புப் பாடல்கள்' என்ற தலைப்பின்கீழ்க் கொண்டு வரலாம்.

தம் செல்வத்தை இழந்து வறுமையுற்று கண்ணீர் வடித்த நாட்டுப்புற மக்களின் பாடல்களும் ஒருவித இழப்புப் பாடல்கள்தாம்.

இக்கட்டுரையில் அவை தவிர்த்து, நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல்கடீள மட்டும், குறிப்பாக கணவனை இழந்த பெண்களின் கண்ணீர்க் குரலை மட்டும் பதிவு செய்ய முயன்றுள்ளேன்.

தமிழ்ச் சமூகத்துப் 'பெண்'ணும் மற்ற பெண்களைப் போலவே ஆண்களைச் சார்ந்தே வாழ்ந்து வருகிறாள். குடும்பம் என்ற நிறுவனத்தில் 'பெண்' ஒரு பாசமுள்ள வேலைக்காரியாகவே எதார்த்த வாழ்வில் காணப்படுகிறாள்.

கணவன் – தந்தை – சகோதரன் என்ற ஆணின் துணை அவளுக்கு ஒரு ஊன்று கோலாகத் தாங்கும் வகையில் அவள் முடமாக்கப்பட்ருடிக்கிறாள். இந்த ஊன்று கோல் இன்றி அவள் பாதுகாப்பாக வாழ்தல் சாத்தியம் இல்லை. எனவே குடும்பத்தின் உறுப்பினரான ஒரு ஆண் இறக்கும்போது தன் பாதுகாப்பை இழந்து விட்டதாக உணர்ந்த அவலக்குரலாகவே பல ஒப்பாரிப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஆணாதிக்க சமூகத்தில் வாழ்ந்த பெண்ணின் எதிர்க் குரலாகவே பல பாடல்கள் பதிவாகி உள்ளன.

குடும்பம் என்ற நிறுவனத்தில் 'பெண்' இரண்டாந்தரக் குடிமகளாக நடத்தப்படும் ஒருசமூகத்தில் விதவையானவளுக்கு எத்தகைய மதிப்பீடு இருக்கும்?

விதவையை மற்றப் பெண்களிலிருந்து தனிமைப் படுத்தும் 'சதி'தான் விதவைக் கோலம். 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்ற சிலம்பின் ஒலியும் இச்சமூகத்தின் பெண்ணடிமைக் குரலே.

படிப்பகம்

www.padippakam.com



ஆண்கள், பெண்களுக்கு மதிப்பு, மரியாதை என்ற போர்வையில் 'மங்கலம்' என்னும் கிரீடத்தைக் கொடுத்ததும் ஒருவித வசியத்துக்காட்படுத்தும் உணர்வு பூர்வமான ஏமாற்று வேலைதான்.

பின்னர், அந்த மங்கலத்தைக் கணவனை இழந்தவளிடமிருந்து பறித்துக்கொண்டு, அவளைப் பின்னுக்குத் தள்ளி, சமூகத்தில் ஒதுக்கி வைத்து நசுக்கும் நச்சுத்தனம் பெரிய கொடுமையாகும்.

'வெள்ளச் சீலக்காரி, கைம்பெண், மூளி, அறுதலி' போன்ற சொல்லாட்சிகள் யாவும் பெண்களை மறைமுகமாக இழிவு செய்து முடக்குவதற்கே.

'கைம்பெண்கள், மங்கலச் சடங்குகளில் கலந்து கொள்ளக் கூடாது' என்ற எழுதாத சட்டம் இன்றும் சமூகத்தில் அமுலில் உள்ளது.

'கைம்பெண் கைப்பட்ட, கண்பட்ட மங்கலக் காரியங்கள் சிதைந்துவிடும்'– என்ற மூடநம்பிக்கையை ஆணாதிக்க சமூகம் ஏற்படுத்தி வைத்தது. இந்த நம்பிக்கை 'கைம்பெண்களை' இருளுக்குள் தள்ளுகிறது.

கணவனை இழந்த பெண்களின் பாடுதான் இங்கு மிகக் கேவலமானது. பெண்ணுக்குத் 'தாலி' ஒரு பெரும் சொத்தாக, பாதுகாப்பு அரணாக உணர்த்தப்பட்டுள்ளது.

'தாலி' என்ற குறியீடு இல்லாத சமூகத்தில் இத்தகைய பாடல்கள் தோன்றுவதற்கு சாத்தியக்கூறுகளே இல்லை.

பல ஒப்பாரிப் பாடல்கள் தாலியை மையமாக வைத்தே பாடப்பட்டுள்ளன. எதை இழந்தாலும் ஒரு தமிழச்சி, தாலியை இழக்க சம்மதிப்பதில்லை. தாலியின் மகிமையை அவள்,

> "தாலிப் பெருஞ் சரடு
> தாழம்பூ நற் சரடு
> தாலி மேல் கை வச்சா
> தாளாதய்யா என் மனது"

என்று பாடுகின்றாள்.

சம்பிரதாயங்கள், சடங்குகள் போன்ற விலங்குகளால் தான் முடக்கப்பட்டிருக்கிறோம் என்பதை சிந்திக்கும் ஆற்றலோ திறனோ நாட்டுப்புறப் பெண்ணுக்கு இல்லைதான். ஆனாலும் ஒரு பெரும் இழப்பு என்று வந்து, அதை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் வந்தபின் அந்தக் கிராமத்துப் பெண் 'இது எப்படி வந்தது?' என்று சிந்தித்திருக்கிறாள்.

படிப்பகம்

www.padippakam.com



இளம் வயதில் கணவனை இழந்த ஒரு பெண் இந்தச் சமூகத்தைக் கோபமாய்ப் பார்க்கிறாள். "ஏன் இந்த நிலை?" என்று கேள்வி கேட்கிறாள். சக பெண்களும் ஆண்களும் அதற்கு 'ரெடிமேடாக' கையில் வைத்திருக்கும் பதில் 'விதி'.

இப்போது கணவனை இழந்த அந்தக் கிராமத்துப் பெண் 'விதி'யை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. விதியின் உள் முடிச்சுகள் எவை எவை என்று சிந்திக்கிறாள். ஜோதிடம், சடங்கு, சாத்திரம் எல்லாம் வரிசையாக அவள் நினைவுக்கு வருகின்றன. "அவைகளும் பொய்தானோ...?" என்று சந்தேகிக்கின்றாள். சந்தேகம் வசவாக வெளிவருகிறது. 'வசவு' (திட்டுதல்) என்பது கோபத்தின் வெளிப்பாடுதான்!

முதலில் 'தட்டானை' ஒரு போடு போடுகிறாள்.

'பொன் உருக்குதல்' - என்று ஒரு சம்பிரதாயம் இன்றும் தமிழ்ச் சமூகத்தில் உள்ளது. திருமணம் பேசி முடித்த பின்பு ஒரு நல்ல நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து, தட்டான் தாலிக்குப் பொன் உருக்குவான்.

'எனக்கும் அந்த தட்டான் நல்ல நேரம் பார்த்துத்தானே தாலிக்குப் பொன் உருக்கினான். அந்தத் தட்டானுக்கு என்ன கண் குருடா...?' என்று கேட்கிறாள். அவள் கேள்வி பாடல் வரிகளாகிறது.

தாலிக்கு அரும்பெடுத்த
தட்டானும் கண் குருடோ...?

அடுத்து கூரைப்புடவை நெய்த சேனியனை ஒரு பிடி பிடிக்கின்றாள். கூரைப்புடவை நெய்ய ஆரம்பிக்கும் சேணியனும் நாள் நட்சத்திரம் பார்த்துத்தான் நெய்ய ஆரம்பிப்பான். "அவன் என்ன தவறாக நாள் நட்சத்திரம் பார்த்துவிட்டானோ?" என்று நினைக்கிறாள்.

சேலைக்கு நூலெடுத்த
சேனியனும் கண் குருடோ...?

அடுத்து அவள் கோபம் சுபமுகூர்த்தத்திற்கு நாள் நட்சத்திரம் பார்த்துச் சொன்ன பார்ப்பானின் மேல் திரும்புகிறது.

பஞ்சாங்கம் பார்த்துச் சொன்ன
பார்ப்பானும் கண் குருடோ...?

முதலில் மேலோட்டமாகச் சிந்தித்தவள், கடைசியில், இந்த 'விதி' என்ற 'செட்டப்பே' பொய்தானோ... என்று சந்தேகிக்கி

படிப்பகம்

www.padippakam.com



றாள். பின்னர் அதன் 'மூல புருஷன்' யார் என்று கூர்ந்து கவனிக்கின்றாள். அங்கே 'கடவுள்' உட்கார்ந்துகொண்டிருக்கி றார். கடவுளையும் ஒரு போடு போடுகிறாள்.

எழுத்தாணி கூர் இல்லையோ
எழுதியவன் தான் குருடோ..?

இன்றும், தாளமுடியாத சோகத்தில் கிராமத்துப் பெண்கள் "கடவுளே உனக்கு கண் இல்லையா...?" என்று கேட்பதை நாம் பார்க்கலாம்.

இங்கே அந்தப் பெண் கடவுளை மறுக்கவில்லை. கடவுளை ஏற்றுக்கொண்டு, உரிமையோடு, கோபத்தில் திட்டுகிறாள்.

கடவுள், விதி, சடங்கு, சம்பிரதாயம் போன்றவற்றிற்கு எதி ரான ஒரு கோபக்குரலை இந்த ஒப்பாரிப் பாடலில் நாம் கேட்க முடிகிறது.

இளம் வயதில் கணவனை இழந்த பெண்—மறுமணம் மறுக் கப்பட்ட சமூக அமைப்பில் வாழ்கின்ற பெண் தன் காதல் சுகத் திற்கு என்ன செய்வாள்?

இது பற்றி ஒரு பெண் பேசுவதோ, சிந்திப்பதோ 'பாவம்' என்று கருதப்பட்ட காலக்கட்டத்தில் வாழ்ந்த ஒரு நாட்டுப்புறத் துப் பெண் அந்தக் காம சுகம் குறித்தும் பேசுகிறாள்.

'விதவை என்று என்னை மூலையில் வைத்து விட்டீர்களே. வெள்ளைச் சேலை உடுத்தச் சொல்லி, வீட்டுக்குள்ளே பூட்டி வைத்து விட்டீர்களே. என் காம உணர்ச்சிக்கு வடிகாலாக என்ன ஏற் பாடு உள்ளது? மறுமணமும் தடை செய்யப்பட்டுள்ளதே! என் உணர்ச்சிகளோடு இனி நான், என் இளமைக் காலம் முழுவதும் போராட வேண்டியதுதானா?' என்று நினைக்கிறாள். மிக சூச கமாக, நாகரிகமாக, நளினமாக, கவித்துவமாக தன் மெல்லிய 'நீராவிக்குரலை' இந்தச் சமூகத்தின் முன் வைக்கிறாள்.

இனி பாடலைக் கவனியுங்கள்.

"தச்சன் உலை நெருப்பு
தணியும் ஒரு சாமம் – என்
தங்க மடி நெருப்பு
தணிவது எக்காலம்...?
கொல்லன் உலை நெருப்பு
குளிரும் ஒரு காலம் – என்
கொடிய மடி நெருப்பு
குளிருவது எக்காலம்...?

படிப்பகம்

www.padippakam.com



கற்பு பற்றிக் கதைக்கும் நாம் இந்தக் கேள்விக்கு இதுவரை பதில் சொல்லி இருக்கின்றோமா?

காமத்தை 'நெருப்பு' என்று உருவகித்து இருக்கும் நேர்த்தியும் தன் காம உணர்வை 'என் தங்க மடி நெருப்பு' என்று சொல்லுகின்ற உள்ளுரையின் 'அழகும்' கவனிக்கத்தக்கது.

தச்சன் உலை நெருப்பு தணியும் ஒரு சாமம் என்கிறாள் – 'சாமம்' என்ற சொல்லாட்சி 'காமம்' என்ற இணையான சொல்லை நம் நினைவுக்கு மறைமுகமாகக் கொண்டு வந்து நிறுத்துகிறது.

பாடல் வரிகளின் 'கவித்துவம்' கிடக்கட்டும். கருத்தை, எதிர்க் குரலைக் கவனியுங்கள். எத்தனை கூர்மையாக இந்தப் பாடல் வரிகள் நம்மைச் சீண்டுகின்றன!

எழுதப் படிக்கத் தெரியாத, ஒரு நாட்டுப்புறத்துப் பெண், சித்தாந்த பூர்வமாக அறிவியல் அடிப்படையில் சிந்திக்கத் தெரியாத ஒரு கிராமத்துப் பெண் இந்த அளவில் 'எதிர்க்குரலை' எழுப்பியதே பெரிய காரியம்தான்! ●

---

## நீயும் நானும்

**—ஆதவன் சேதுராயன்**

என்னைத்
தனியுடைமை சிறையிலிடும்!
தத்தளிக்கத்
தெருவில் விடும்!
உனக்கோ
அதனாலே
விடுதலைதான்!
உழைத்தாலும்
பணம் எனக்கு
எட்டாத இமயமலை!
அது
மலைபோல குவிந்தாலும்
உனக்கு அது
தொட்டாலே
கூடவரும்
கால் செருப்பு!
உழைத்தாலும்
சிறை நிலைமை
எனக்கு!
உழைக்காது
போனாலும்
பணம் பண்ணும்
பணத்தாலே
விடுதலைதான்
உனக்கு!
நீ மனிதன்!
நானும்தான்!
இருந்தாலும்
பணவழியில்
அதன்மூலம் விடுதலையில்
இருதுருவம்!
அதனால் நீ
முதலாளி!
ஆமாம்,
நான் உனது
தொழிலாளி! ●

படிப்பகம்

www.padippakam.com



(28-10-96 கோமலின் முதல் நினைவு நாள்)

## இரண்டாவது அதிசயம்

கிழித்து எறியப்பட்டன மனங்கள்
கிழிக்கப்படாத ஒரு தாளால்...
கோமல்
இந்நூற்றாண்டின் இரண்டாவது அதிசயம்!

இன்னொரு மணிக்கொடியை ஏற்றினாய்
மற்றொரு வ. ரா. வை இழந்தோம்
நடிக்க வைத்தாய் பலரை
நடித்துப் பிழைப்பவர் நடுவில்
நாடகம் நடத்தத் தெரியாதவன்...

அக்கம் பக்கம் பார்த்து
அக்கரகார நடை நடந்து
அவாளைப் பற்றி எழுதாது
விளிம்பு மனிதரை எழுதி
வெல்லும் மானிடத்தின் நடு
கல்லாய் திளைத்தாய்

தண்ணீர் தண்ணீர் என
தவித்த கலைத் தாயின் தாகம் தீர்த்தாய்
நவீனத்துவத்தின் பெயரால்
இரண்டுங் கெட்டானாய் அவதரித்த கூத்தை
அடியோடு மறுத்து
மூன்றாம் நாடகத்தை முகம் மலர வரவேற்றாய்

ஒவ்வொரு எழுத்தின் பின்னும்
வருணநலம் வரையப்படுவதால்
சுபமங்களாவை
வான்வில்லாக்கி வையம் அளந்தாய்

கதராடைக்குள் காவி ஒளிவதே வாடிக்கை
நீயோ
சிவப்புச் சிந்தனையை ஒளிர வைத்தாய்

படிப்பகம்

www.padippakam.com



பழமலையும் புத்தருவியுமாய் குளித்தோம்
பேதம் கற்காத அருவி நம் தேகம் நனைக்கையில்
தெரிந்தது உன்னிடம்...
இழப்பதற்குப் பூணூல்கூட இல்லை என்பது...

அயோத்தியில் இந்தியா இடிந்த போது
உன் தலையங்கம்
தமிழகத்தின் குரலைத் தனியே ஒலித்தது.

குறுங்குழுவாத நோயால்
சிற்றிதழ்கள் நவகிரகங்களாய் சிதறுகையில்
நடுவிலே வந்த நீ,
நூறு நிறங்களும் மலர இடமளித்த இதயசாரி!
கருத்துலக நாகரிகம் கற்றதால்—
இலக்கிய நாயகத்தை ஈடேற்றினாய்.

ஆண்டுதோறும் நீ நடத்திய விழாவால்
முத்தமிழ் இங்கு முடமாகாமல் தப்பியது.

கடைசிவரை உன் 'இந்தியக் கனவு'
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்
மண்மூடும் என்பதாலோ கண்மூடிக்கொண்டாய்!

**—கனல் மைந்தன்**

## கள்ளழகர் கவிதைகள்

### வளர்ச்சி

விதை ஊன்றிய மண்
நிரம்பிய நீர்
அதனைப் பொறுத்து
செடியின் வளர்ச்சி.

எதுவும் தானாய் ஆவது இல்லை.
கேட்டால் பொறுக்காது உனக்கு.
அது உன் அறிவு.

படிப்பகம்

www.padippakam.com



கேட்காமல் முடியாது எனக்கு
அது என் வளர்ச்சி.

## தேடல்

இல்லாதவனுக்கு வயிறு
நிரம்பியவனுக்கு மூளை
கனத்தவனுக்கு ஆன்மா
தேடும் இடம்
மனிதனுக்கு மனிதன் மாறும்!

## விழிப்பு

சாவதற்காகவா வாழ்கிறோம்?
வாழ்வதற்காக வாழ்கிறோம்,
வாழ்கின்றோமோ வாழ்கின்றபோது?

செத்த வாழ்க்கை வாழ்ந்தது போதும்
வாழும் வாழ்க்கை வாழ — இனித்
தலைப்படவேண்டும்.

## சரசுவதி

கோடுகளைக்
கோடிகளாக்கும்
தாடிக்காரன்.

அந்தக் கிறுக்கன்
கிறுக்கலில்
ஊருக்கெல்லாம்
கிறுகிறுப்பு

அந்த மாஜி ஏழையின்
கைவண்ணம்

படிப்பகம்

www.padippakam.com



இன்று
மாளிகைகளின் சுவர் அலங்காரம்.

சீலையில்லாத அவன்
சித்திரம் மீது
வேலை இல்லாத சிலர்
வேல் எறிகிறார்கள்.

சீலைமீதுதான்
சித்திரம்.
சித்திரம் மீது ஏன்
சீலை?

கலை என்பது
இயங்கும்போது
போராட்ட ஆயுதம்.
ஓய்வெடுக்கையில்
இன்பக் கருவி.
அங்கு
முக்காட்டுக்கு
என்ன வேலை?

நீ கண் என்றால்
உனக்கு ஏன் திரை?

சட்டம் போட்ட உன்
படம் மட்டுமே
எளியவர் குடில்களில்.
நீ கட்டிப்போடப்பட்டுள்ளதோ
மாடி வீட்டுத் தெர்முவங்களில்.

வெண்தாமரையைத்
தொடமுடியாதபடி
பணமுதலைகள் வாய்பிளந்த
நீர் அரண்.

ஓவியங்களில்
வீணை மீட்டினாலும்
உண்மையில் நீ
கரன்சி எண்ணுகிறாய்.

படிப்பகம்

www.padippakam.com



செல்வ அந்தப்புர அன்னம் உனக்குத்
தெய்வமரியாதை எப்படிக் கிடைக்கிறது?

நம் ஊர்களில்
உண்டியல் நிரப்புவோர்க்குத்தானே?
வரம் கிடைக்கிறது!

ஆடை இல்லாத குளிர் தீரவோ
தீ மூட்டப்பட்டது
ஓவியங்களுக்கு?

இந்தியாவில்
வெளிச்சம் தெரிவது
இப்படித்
தீவட்டிகளால்தான்.

இலவச சேலை
எடுத்தோடி வருவோரே
பதற வேண்டாம்.
அவள்
ரூபாய் நோட்டுகளை
உடுத்திக் கொள்ளட்டும்.

நூலும் சேலையும்
அண்மைப் படைப்புகள்
அனாதிக் கடவுளுக்கு
அவை என்ன அவசியம்?

கோடுகளுக்குக்
கூடுதேடும் இந்தக்
கோமாளிகள்
குளிரில் மரிக்கும்
கோவணாண்டிகள் குறித்து
நினைத்ததுண்டா?

மூடுவிழாவுக்கு
முந்துகிறவர்களே—
காசு கொடுத்தவிழ்க்கும்
காமாட்டிபுரத்தில்
இருப்பவரெல்லாம்
சரஸ்வதிகளில்லையா?

—நீலமணி

படிப்பகம்

www.padippakam.com

ஒரு மதத்துவக் குறிப்பு

# இலக்கியச் சிந்தனையும் உசேனும்

21-10-96ஆம் நாள் இலக்கியச் சிந்தனை கூட்டத்தில் ஓவியர் புகழேந்தி 'நவீன இலக்கியமும் ஓவியமும்' என்ற தலைப்பில் பேச அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேச்சைத் தொடங்கு முன் ஓவியர் உசேனின் ஓவியங்கள் 'பஜ்ரங்தள்' கும்பலால் வெறித்தனமாகச் சிதைக்கப்பட்டதைக் கண்டித்தும் கருத்துரிமைக்குத் தாழ்ப்பாள் போடுவதை எதர்த்தும் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

அவர் உரை முடிந்தவுடன் பேசிய இலக்கியச் சிந்தனை பாரதி "ருஷ்டியின் 'சாத்தானின் கவிதைகள்' இந்தியாவில் விற்பதற்குத் தடை வந்தபோது பேசாமல் இருந்தவர்கள் இப்போதும் பேசக் கூடாது'' என்று ஒரு மதத்துவ முடிச்சு போட்டார்.

அடுத்துப் பேச வந்த ஓவியர் விஸ்வம்: "நான் சமீபத்தில் பம்பாயில் ஓவியக் கண்காட்சி வைத்திருந்தேன். அங்கு யாரும் உசேனுக்கு ஆதரவாக இல்லை. ஏனென்றால் அவர் பத்திரிகைகாரர்களை அழைத்துவந்து வெற்று அறையைக் காண்பித்து 'இதுதான் என் ஓவியம்' என்று ஏமாற்றியவர்,'' என்று பேசித் தன் உசேன் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டார். தான் ஒரு ஓவியராக இருந்தும்கூட கருத்துரிமைக்கு ஆதரவு தெரிவிக்க அவருக்கு மனம் வரவில்லை. இவர் பம்பாயில் இருந்ததாகச் சொன்ன நேரத்தில் பம்பாய் பத்திரிகைகளில் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் உள்ள இதழ்களில் உசேனுக்கு ஆதரவாக அறிவுஜீவிகளும், முற்போக்குவாதிகளும், மதநல்லிணக்கத்தை விரும்புவோரும் அறிக்கைவிட்டிருந்தனர். கண்ணை மூடிக்கொள்வது பூனைகளின் சாகசம்.

அடுத்துப் பேசவந்த ஓவியர் மாரிமுத்து சம்பந்தம் இல்லாமல் பேசி, அவர் ஒரு நிலைப்பாட்டில் இல்லை என்பதைத் தெளிவாக்கினார். சென்னையின் பல இடங்களில் மிகப்பெரிய கட் அவுட்களில் உசேனை நிர்வாணமாக வரைந்து Artist or Nudist? என்று கேள்வி கேட்டு ஹுசைனி போன்ற முஸ்லிம் மத அடிப்படைவாதிகள் தங்கள் எதிர்ப்பைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தனர். உசேனை எதிர்த்து அருண்சௌரி பட்டிமன்றமே நடத்திவிட்டார். இந்த மண்ணில் இந்துக்களாகக் கட்டமைக்கப்படுகிறவர்களில் 75 சதவீத மக்களின் கல்வி போதனைக்கெதிராக அவர்கள் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற அனுமதிக்கும் 'சரஸ்வதி'யை 'எங்கள் தெய்வம்' என்று ஏற்றுக்கொள்வது அருண்சௌரிகளுக்கும் 'சோ'ராமசாமிகளுக்குமான 'இந்து' அறிவுஜீவித்தனமாகலாம். இந்திய அறிவுஜீவித்தனமும் அந்தப் புதைசேற்றில் வீழ்ந்தாயிற்றா? அறிவுஜீவிகள் இந்துத்துவத்திற்கு வக்காலத்து வாங்குவது பச்சைத் துரோகம்.

—கண்டெமுதுவோன்

படிப்பகம்

www.padippakam.com



## சுதந்திரம் —சூரியதீபன்

நாடெங்கும் ஊர்கள்,
ஊர்களிலெலாம் வீதிகள்,
வீதிகளில் இல்லை சேரி.

'மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசும்'
பழமைக்கும் பழமையாம்
பஞ்சாங்க நம்பிக்கைக்கு
விஞ்ஞானக் கலவை பூசும்
வேதவித்து சொல்வார்:

"நாற்புறமும் காற்று வீச— நடுவில்,
ஊர்ப் புறத்தே சேரி வைத்தார்.
சுத்தக் காற்று இதுபோல் எங்கேனும்
சுற்றி வருமோ? சுகம் தருமோ?"

நல்லது,
சுதந்திரக் காற்று உங்களுக்கு,
சுத்தக் காற்று எங்களுக்கு.

'மானங்கெட்டவன்
ஊருக்குப் பெரியவன்'
—பாட்டி சொன்ன சொலகம்
இன்னும் கனமாய் இருக்கிறது நெஞ்சில்.

எங்கள் ஊர்ப் பெரிசு,
சொந்த ஊர் (சிவலோகம்) போய்ச்சேர,
வீடு முதல் வீதிவழி
ஊர்வலம் போனது பாடை.
ஊர் எல்லையில் காத்திருந்து
குலவைச் சத்தமிட்டு
காடுவரை தொடர்ந்தார்
தாலியில் பூச்சூடிய பெண்டிர்.
கூந்தலில் பூச்சூட
சுதந்திரம் இல்லை அவர்க்கு.

படிப்பகம்

www.padippakam.com



நல்லது,
சுதந்திரம் உங்களுக்கு,
தாலிப்பூ எங்களுக்கு.

கொட்டடிப்பான் பறையன்
குழிவெட்டுவான் கோலன்
பிணம் எரிப்பான் சக்கிலி
கோடித்துணி, வாய்க்கரசி,
கொள்ளிக் கலயம், சடங்கு
குறைவின்றிச் செய்வான் நாவிதன்.

தோல் வெந்து, நிணம் கருகி,
மூங்கில் கங்குகளாய் வெள்ளெலும்பு வெடித்து,
அண்டம்வரை பறக்கும் பிணநாற்றத்தில்
கபாலம் முதல் கால்நகக் கண்வரை
சாராயம் இறக்குவான் சக்கிலி.
தென்திசைத் தண்காற்று
செல்லமாய் அவன் வேர்வை துடைக்கும்.

நல்லது,
சுதந்திரக் காற்று உங்களுக்கு
'சில்'லென்ற சிறுகாற்று எங்களுக்கு!

சுடுகாட்டுக் கொட்டகையில்,
வேட்டி வீசி விரித்தான் ஏகாலி.
நாற்புறமும் பெரிய மனிதர் அமர,
நடுவில் வேட்டியில் நாணயம், நோட்டு, தாள்.

"சுதந்திரம் வாங்குறவங்க எல்லாம்
வாங்கப்பா"— என்றொரு அறிவிப்பு.

"கொட்டுக்காரன் யாருடா?
உரியதை வாங்கிக்கோ."

"குழிவெட்டுக் கோலா, வாடா
போதும் வச்சுக்கோ."

"பிணம் எரிக்கும் சக்கிலி,
பேச்சுக்கால் மீறாதே, பிடி."

"குலவைக் காசு எங்கே சாமீ?"

படிப்பகம்

www.padippakam.com



நனைந்த பனை கெணக்காய், மூலையில்
அணைந்த பெண்டிரின் குரல்.

"ஆள்தான் தெரியுது;
குலவைச் சத்தம் கேட்கலை"—என
தொழில் சுத்தம் பார்த்து,
வீசி எறிந்த துட்டு விழும்
விரித்து ஏந்திய முந்தாணையில்.

அப்பன்மார் காலிடையே
ஆத்தாமார் கவுட்டுக்கு ஊடே,
'எங்களுக்கும் சுதந்திரம் சாமீ,' என்று
பிஞ்சுக் கரங்கள் நீளும்.

சுதந்திரம் என்றால் என்ன?"
கேட்டேன் நான்.

"சுதந்திரம் என்றால் கட்டு
அது ஊர்க் கட்டு."
மனுசன் கருகும் மாமிச வாசனையில்,
பொருள் சொன்னான் பொய்லான்.

'இன்னின்னாருக்கு இன்னது என
இறைவன் எழுதி வைத்த கட்டு;
அவரவர் தொழிலை அவரவர் செய்ய
ஆக்கி வைத்த ஊர்க் கட்டு.'
சுதந்திரம் என்றொரு சொல்லுக்கு
சுத்தமான பொருள் சொன்னான்
என் சேரித் திருவள்ளுவன்.

பூமி பிளந்தன ஆயிரம் இடிகள்;
சாட்டை வீசின கோடி மின்னல்கள்.
இடிமண்ணாய்க் குவிந்தது கோபுரம்.
தலைகீழாய்ப் பிடுங்கி எறிந்து
நட்டிற்று ஊழிப் புயல்.

பாட்டி சொன்ன பழமொழி
பலமாய் இன்னும் உள்ளிறங்கும்:
"மானங்கெட்ட சொல்
நாட்டுக்குப் பெரிய சொல்."

படிப்பகம்

www.padippakam.com



## ஒத்திசைவு

டவுன்லேர்ந்து வந்து கட்டிக்கிட்ட பொண்ணு
ஆரம்பத்துல
குளிச்சிட்டு குளிச்சிட்டு
பவுடர் அடிச்சிக்கும்.

அப்பறம்
கொஞ்ச நாளா
மூஞ்சியமட்டும் கழுவிட்டு
அடிச்சிக்கும்.

மறுபடி
துணியால மட்டும்
தொடச்சி தொடச்சி
அடிச்சிப் பாத்துட்டு
சுத்தமா உட்டுப் போச்சி.

இப்பலாம் —
“வா. . . யெக்கா
முந்திரியப் பக்கம் போய்ட்டுவருலாம்.
நாலு குச்சி ஒடிச்சாந்தாலும்
அடுப்புக்கு ஆவும்.”

அந்தப்பக்கமும்
இப்பிடித்தான் இருக்குது.

டவுனுக்கு வாக்கப்பட்டுப் போன
முந்திரி சருவு அடிச்ச தங்கச்சி
இப்பலாம்—
“மம்மி”யாயிட்டுது.

**—கண்மணி குணசேகரன்**

படிப்பகம்

www.padippakam.com



## கல்

நான் கல்லு மாதிரி கிடப்பதாக
அப்பா சொல்லிக்கொண்டிருந்தார்
அவர் நண்பரிடம்.

நடிகர் நடிகைகளின்
கட்-அவுட்களுக்கு மாலையிடும்
ரசிகனாய் இருப்பதைக காட்டிலும்

யாருடைய பிறந்த நாளுக்கோ
இரவில் சுவரொட்டி ஒட்டித் திரியும்
தொண்டனாய் இருப்பதைக் காட்டிலும்

உள்ளூர் தலைவனின் கீழ்
பேட்டை ரவுடியாய் இருப்பதைக் காட்டிலும்
மேலுக்கு மதம் பூசிக்கொண்டு
பெண்களை மோகிக்கும்
சாமியாராய் இருப்பதைக் காட்டிலும்

மனிதர்கள் ஏற உதவும்
கல்லாய் இருப்பதில் என்ன தவறு.
இதை அப்பாவிடம்
யார் சொல்வது.

—கோ. இராஜேந்திரன்

## புறக்கணிப்பு

மலையாள மூலம்:
**கே.ஜி.சங்கரப் பிள்ளை**

தமிழில்:
**வத்சல குமாரன்**

ஒருக்கால் ஒரு மகரிஷி
கோழிக்குஞ்சையும் காக்கைக் குஞ்சையும்
அருகழைத்து உபதேசித்தார்:

படிப்பகம்

www.padippakam.com



அறிவே சிறகுகள்
சிறகு உரம் பெறாமல் பறக்கலாகாது
ஆழம் இருள்கிற தடாகங்களுக்கு மேலே
கவண் கைகளிருக்கிற சந்தைகளுக்கு மேலே
துப்பாக்கியில் கண்களிருக்கிற
நகரங்களுக்கு மேலே
முதிர்ச்சி வராமல் பறக்கக்கூடாது.

கோழிக்குஞ்சு
வருக்கைப் பலாவின் நிழல் வட்டத்தில்
நெல்லும் பதரும் கிளறியது
முதிர்ச்சி வந்தபிறகு பறக்கலாம்.

மகரிஷியின் ஓரோரு வாக்குக்கும்
ஓரோரு சவப்பெட்டியின் வடிவம் என்று சொல்லிக்
காக்கைக் குஞ்சு பறந்து போயிற்று.

கனிகளின் புதுமை நாடி
குழந்தைதளின் உணர்வோடும்
எச்சிலின் பழமை நாடி
பிச்சைக்காரியுடைய நாவோடும்
ஈரக்கை தட்டும் சிரார்த்த முற்றம் நாடி
மூதாதையர்களின் கண்களோடும்
மழையின் ஆழம் நாடி
மீனுடைய மதத்தோடும்
வெயிலின் தொலைவு நாடி
அம்பினுடைய இலக்கோடும்
அது பறந்தது.

மயிலோடும்
குயிலோடும்
அன்னத்தோடும் தோற்று,
குழுநெறியில் வென்று,
வெளிச்சத்தில் விசுவாசித்து
கருகருத்து வளர்ந்து
ஒரு வலிய காக்கையாயிற்று.
பூமியிலும் ஆகாயத்திலும்
அதற்கு வழிகள் அற்று விடவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



வருக்கைப் பலாவின் நிழல் வட்டத்தில்
கோழிக்குஞ்சு வனப்புகள் அணிந்தது.
முற்றத்திலும் இறவாரத்திலும்
இடைநடையிலும் அறைகளிலும் ஏறியிறங்கி
வீட்டின் இலக்கணத்தை ரசித்தது.
நினைவும் மோகமும் அச்சமும் கிளறியது.
நாணியும் சோம்பியும் தளுக்கியும்
தடித்துக் கொழுத்தது.

படித்து முதிர்ச்சி பெற்றவர்கள்
புத்தியுள்ள பசியோடு வந்தார்கள்.
பிடித்து
வனப்புகள் அழித்தெறிந்து
தின்றார்கள்.

## உயிர்க் கொல்லி

நண்ப
நீ என்னைத் திட்டு

என் அம்மாவை
உன் இஷ்டம் போல்
எவனெவனோடோ தொடர்புபடுத்தி
வசைகள் கோடி பொழிந்து தள்ளு

குடித்துவிட்டு
நடுரோட்டில் வலுச்சண்டைக்கிழுத்து
பந்துபோல எனை உதைத்துதைத்துப்
பாதாளச் சாக்கடைக்குள் உருட்டி விடு

பெருங்கோபம் என்மீது பொங்கினால்
மெல்லக் கொல்லும்
நஞ்சு தடவிய கத்தியெடுத்து
முன்புறமிருந்தோ பின்புறமிருந்தோ
என் மார்பிலோ முதுகிலோ குத்து

படிப்பகம்

www.padippakam.com



தப்பிப் பிழைத்து விட்டால்
இன்னொரு வாய்ப்பு தானே வரும்வரை
ஏமாற்றிக் கழுத்தறு
இரட்டை வேடமிட்டு வஞ்சி

தாங்குவேன் இவையாவும்
தாங்கி நிமிர்ந்தும் விடுவேன் முன்போல

ஆனால் பார் தோழா
உன் முன் மண்டியிட்டு
என்னிரு கரமும் கூப்பித் தொழுகிறேன்

மகுடமேயானாலும்
தயவுசெய்து சூட்டிவிடாதே
என் சாதிப்பெயர் சொல்லி

**—கல்யாணராமன்**

## காத்திருப்பு

இலையுதிர் காலம் முடிந்து
ஒரு வழியாக உதயசூரியன்
உதித்துவிட்டது
இனிக் கவலையில்லை
அண்ணாவும் பெரியாரும்
அடிக்கடி வருவார்கள்
மூவேந்தர் உலா
மூலை முடுக்கெல்லாம்
நடக்கும்
காணும் இடமெல்லாம்
கருப்பு சிவப்புக்கொடி
பறக்கும்
கரை வேட்டிகளின் விற்பனை
அதிகரிக்கும்
அடுக்குமொழி அரசியல் மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com



அரங்கேறும்
தமிழ் - தமிழ்நாடு என்று
அவ்வப்போது வார்த்தைகள்
அடிபடும்
இந்தி ஆதிக்கம் பற்றி
எப்போதாவது பேசப்படும்
ஆட்சிக்கு ஆபத்து
என்றால் மட்டுமே
ஈழத்தமிழர் பற்றி
ஏதாவது சொல்லப்படும்
இப்படியே
அடுத்த ஐந்தாண்டுகள் வரை
இருந்துவிட்டால் போதும்
கடற்கரையின் சமாதிக்
கனவுகளோடும்
பீரங்கி வண்டிப்
பெருமைகளோடும்
நிம்மதியாகப் போய்ச்
சேர்ந்துவிடலாம்
இத்தனை ஆண்டுகள்
காத்திருந்தது
பின் எதற்காக.::?

**—பாரதி வசந்தன்**

**யோகம்:**

சென்ற ஆட்சியின்
ஊழல் வெள்ளத்தில்
அண்டக் கருப்பும்
வெளுக்கும் என்பது
காத்திருப்புக்கான
கூடுதல் யோகந்தான்

படிப்பகம்

www.padippakam.com

## வேரறல் —ப்ரியம்

நிலத்தினடி வெப்பத்தில் வாழும்
தவளைகளுக்காகவும், தன் வாசனையை
நுகர்ந்து விளக்குகளை நாடி மடிந்த
ஈசல்களுக்காவும் பெய்கிறது
பலத்த காற்றுடன் மழை.
விரிந்த தென்னை ஒருபுறமாய் முகந்
திருப்ப முருங்கை வாழையும்
சாமந்திச் செடியும் முதுகொடிந்தன.
நீரை உறியும் தைல மரங்கள்
வீட்டின் மீது சாய்ந்து உயிரைவிட்டன.
மழைநீர் வடியும் சாலைத் தொட்டியின்
அடியில் மின் இணைப்பு வெடிக்க
"நீரில் மின்சாரம் பாயும்" என்ற
பயத்தில் அலுவலகத்திற்கு ஓடி
நிறுத்தச் சொல்லி, பழங்கால இருட்டு
பழக்கத்திற்கு வந்ததும் வீட்டில்
நங்கூரமிட்ட கப்பலைப் போல
நிற்கும் கட்டிலின் மேல் சிறு
விளக்கை ஏற்றிச் சொல்கிறேன்
மகனுக்கு ஏ..பி..சி..டி.

## கிறுத்த நாய்கள் —கொம்ப மாடசாமி

மொசல் பிடிக்கத் தெரிந்தவையாயினும்
நாட்டுநாய்கள் இழிவானவை
இரவெல்லாம் ஆகாயம் பார்த்துக்
குலைக்கும்
கீழத்தெரு நாய்களைக்
கல்லெறிந்து காலொடிக்கலாம்
'த்தோத்தோ'வென
வீசும் உன் பொய்ச்சொல் அறியாது
வாசல் வருமவற்றைக்

படிப்பகம்

www.padippakam.com



கயிறுவீசி கழுத்துச் சுருக்கலாம்
சாத்தாவின் கைவாரில்
வாகனமாயவை நிற்பதென்ற போதிலும்
மைபோட்டு வாய்கட்டி
காதறுத்து இரத்தம் குடிக்கலாம்
ஈனனின் பெயருக்கு
வசையாய் உவமிக்கலாம்
கேட்பாரில்லை —போலவே
மேலத் தெருக்களில்
காலுயர்த்தி நீர் பீய்ச்சும் நாய்களைப்
பேண்டழிக்கும் சிறுபிள்ளைகளின்
பீ நக்கித் துடைக்க
வீட்டிற்குள் அழைப்பதில்லை
ஒருபோதும்

## நிழல்

### நல்ல சினிமாவை அறிமுகப்படுத்தும் தளம்

திரைப்பட விரும்பிகளுக்கு, வணக்கம். 1967க்குப் பிறகு நாம் விரும்பியோ விரும்பாமலோ தமிழ்நாட்டு முதலமைச்சர் பதவிக்கு 5 பெயர்களைத் தந்திருக்கிறது தமிழ்த் திரைப்படத் துறை. எனினும் சர்வதேசத் தரத்துக்கு ஒரு தமிழ்ப் படம்கூட இதுவரை எடுக்க முடியவில்லை. அண்டையிலுள்ள கேரளாவில் இருந்து வரும் படங்களைப் பற்றி பிரெஞ்சு திரைப்பட விமர்சன இதழ்கள் திறனாய்வு செய்கின்றன! நாங்கள், 'திரைப்படம் என்றால் என்ன? நாடகத்திலிருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது? கதை, ஒளி, ஒலிப்பதிவு, எடிட்டிங், இசை ஆகியவை எவ்வாறு ஒரு திரைப்படத்திற்கு உறுதுணை செய்கின்றன?' என்பதை விளக்கி திரைப்படம் காண்பிக்க இருக்கிறோம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஞாயிறோ அல்லது விடுமுறை நாளோ ஒன்றை எங்களுக்கு 2 வாரத்திற்கு முன்பு ஏற்பாடு செய்துவிட்டு எழுதுங்கள். 25 பேர் உட்கார்ந்து பார்க்கக் கூடிய அறை; தொலைக்காட்சிப் பெட்டி, டெக் ஏற்பாடு செய்தால் போதும். ஒரு நாளைக்கு 2 படங்கள் காண்பித்து விளக்குவதற்கு எங்களுக்குக் கொஞ்சம் நேரம். உங்கள் அழைப்பை எதிர்பார்த்து,

ப. திருநாவுக்காசு, ரியாஸ் அக்மது, ஜார்ஜ்

தொடர்புக்கு: ப. திருநாவுக்கரசு, 31/48, இராணி அண்ணா நகர், சென்னை—600 078.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாட்டில் கல்வி, நூல் வெளியீடு, நூலகம்

—ப. கோழநாடன்

## 1947க்குப் பின் முறைசார் கல்வி:

"1950 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப் பட்ட இந்திய அரசியல் சட்டத்தின் 45 ஆம் பிரிவு, 1960க்குள் 6 முதல் 14 வயது வரை யுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படும் என்று உறுதி கூறியது. ஆனால் 1960க்குள் நிறைவேற்றப் படாததோடு 1985 வரைகூட நிறைவேற்றா மல் அதுபற்றி அரசு தன் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துள்ளது. எனவே, இலவசக் கட்டா யத் தொடக்கக் கல்வி இங்கே நடைமுறைப் படுத்தப்படவில்லை. இலவசமாகப் படித்தவர் கள் கட்டாயம் தொடர்ந்து படிக்கவும் முடிய வில்லை. கட்டாயமாகத் தொடர்ந்து படித்த வர்கள் இலவசமாகவும் படிக்கவில்லை.

தொடக்கக் கல்விக்கு அரசு பொறுப்பேற் றுள்ளது. தொடக்கப் பள்ளிகள் பெரும்பா லும் உள்ளாட்சி நிறுவனங்கள் சார்பானவை ஆகும். தமிழகத்திலுள்ள 35,000 தொடக்கப் பள்ளிகளில் 31,600 பள்ளிகளை உள்ளாட்சி நிறுவனங்களே நடத்துகின்றன. மீதி 3,400 பள்ளிகளே தனியார் வசம் உள்ளன. அதாவது 90 சதவீதம் அரசின் வசமும் 10 சத வீதம் தனியார் வசமும் உள்ளன. எனினும் இத்தகைய பள்ளிகள் போதவில்லை என்பதை அரசின் புள்ளி விவரங்களே காண்பிக்கின் றன. இந்தியநாடு முழுமைக்குமான கணக்கெடுப்பின்படி,

- 20 சதவீதம் கிராமங்களில் அதாவது 1.2 லட்சம் கிராமங்க ளில் பள்ளிக்கூடங்களே இல்லை.
- 40 சதவீதப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடமே இல்லை. கரும்பலகையும் இல்லை.
- 60 சதவீதப் பள்ளிக்கூடங்களில் குடிநீர் வசதி இல்லை.
- 35 சதவீதப் பள்ளிக்கூடங்களில் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை ஓராசிரியர் மட்டுமே உள்ளனர்.

1947க்குப்பின் 40 ஆண்டுகள் ஆன பின்னும் நூற்றுக்கு 66 பேர்களுக்கு அரசால் தொடக்கக் கல்வி கொடுக்க இயலவில்லை. கி. பி. 2000 இல் உலகில் உள்ள படிப்பறிவற்றோர் 54 சதவீதம்

படிப்பகம்

www.padippakam.com



பேர் இருப்பார்களாம்! அதாவது 21 ஆம் நூற்றாண்டுக்குள் இந்தியா நுழையும் போது 50 கோடி இந்திய மக்கள் எழுத்தறிவின்றி இருப்பார்கள். ”

—“புதிய கல்விக் கொள்கை, ஒரு புதிய மோசடி” —செந்தூரன்.

இவ்வாறாக உள்ள சூழ்நிலையில் தனியார் பள்ளிக்கூடங்கள், நர்சரிகள் இந்தியாவிலேயே இல்லாத அளவுக்கு தமிழகத்தில் தோன்றியுள்ளன. உ. பி, ம. பி., பீஹார், கோவா போன்ற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளான இந்தி, கொங்கணி கல்விமொழி ஆகியுள்ளன. தமிழக ஆட்சிக் கட்டிலில் 25 ஆண்டுக் காலம் பதவியில் உள்ள திராவிட பாரம்பரியக் கட்சிகள் ஏன் தமிழை ஆட்சி மொழி ஆக்கவில்லை என்பதை இனி படிக்காத பாமரர்கள்கூட கேட்க ஆரம்பிப்பார்கள்.

இந்திய அரசு கல்வித்துறையில் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளில் இருந்து விலகிக்கொண்டு அந்த உரிமைகளைத் தனியார் துறைக்கு கையளியக்கிறது. தனியார், பள்ளிக்கூடங்களில் போடும் தனது ‘முதலை’ மக்கள் பணிக்காகவா செலவிடுவான்? செட்டியார் ஆற்றை சும்மா கட்டி இறைப்பாரா? இவ்விதம் தனியாரிடம் தனது உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்ட பணிகளுக்கான நிதியை அரசு என்ன செய்கிறது?

> “இன்று 50,000 ஆங்கில வழிப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விச் செலவு என்பது அரசாங்கத்துக்கு மிச்சம் தானே! ஒரு பள்ளிக்கு குறைந்த பட்சம் ஐந்து ஆசிரியர்கள் பணிபுரிவதாகக் கொண்டால்கூட மொத்தம் 2,50,000 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணிபுரிகின்றனர். இப்போதுள்ள சம்பள விகிதப்படி, இவ்வாசிரியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 450 கோடி, சம்பளமாக மட்டும் கொடுக்க வேண்டிவரும். கட்டிடப்பராமரிப்பு, மற்றும் நிர்வாகச் செலவு வேறு இருக்கின்றது. இப்படி மிச்சம் ஆகிற பணத்தைக் கொண்டு, ஓட்டுகளைப் பொறுக்குவதற்கு ஏற்ற பல இலவசத் திட்டங்களை ஆளும் கட்சிகள் அறிவித்து வருகின்றன.”
>
> —(பள்ளிக்கூடங்களில் பயிற்று மொழி தமிழா? ஆங்கிலமா?)
>
> —ப. கல்யாணி.

1947க்குப் பின் கல்வித்துறைக்கு என ஒதுக்கப்பட்ட நிதி ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டு வருவதை பார்க்கலாம். 100க்கு 66 பேர் எழுத்தறிவற்றவர்களாக இருக்கும் நாட்டில் தொடக்கக் கல்வியை தனியார் துறையிடம் தாரை வார்ப்பதும், முறைசார்

படிப்பகம்

www.padippakam.com



கல்வியை ஒதுக்கிவிட்டு முறைசாராக்கல்வி(தொலை தூரக் கல்வி)யை ஊக்குவிப்பதேன்?

இவ்வாறுள்ள சூழலில் 'அறிவொளித் திட்டம்' என்ற மாயையை ஏன் தோற்றுவிக்கின்றனர்? உலக நாடுகளுக்கு முன் 'எழுத்தறிவற்றோர்' தொகையை குறைத்துவிட்டதாகப் பம்மாத்து பண்ணுவது ஏன்?

கேரளாவில் 100 சதவீதம் எழுத்தறிவுடையோராக மாற்றிவிட்டோம் என்பதை சோதித்தபோது வெறுமனே கையெழுத்து போட மட்டும் கற்றுக் கொடுத்ததையும், அதையும்கூட அவர்கள் (எழுத்தறிவு பெற்றோர்) மறந்துவிட்டதாகவும் கூறியுள்ளனர். இதையெல்லாம் கண்டிக்க வேண்டிய முற்போக்குகள் 'அறிவொளித் திட்ட' பஜனையில் இணைந்து ஜெயகோஷம் போடுவது ஏன்?

## புத்தக வெளியீட்டுத் துறை:

தமிழ் நாட்டில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை 1000 பிரதிகள் போடுவதை பதிப்பாளர்கள் தாண்டவில்லை. ஆனால் மற்ற பல மாநிலங்களை ஒப்புநோக்கிப் பார்க்கும்போது 50% சராசரியாக படித்தவர் தொகை தமிழகத்தில் இருந்துள்ளதை அறிந்த சிலர் ஏன் அதிக பிரதிகள் வெளியிட்டு குறைந்த செலவில் மக்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று நினைத்தனர். அவர்களில் 'நவயுக பிரசுராலயம்' வெளியிட்ட நூல்கள் இவ்விதம் கொண்டுவரப்பட்டவை. (இதன் நகலைப் பின்னிணைப்பில் காண்க) இதற்கடுத்து சக்தி வை.கோவிந்தன் பாரதியார் கவிதைகள் அனைத்தையும் தொகுத்து 500 பக்கங்களில் அச்சிட்டு ஒன்றரை ரூபாய்க்கு கொடுத்தார். இதுபோல மர்ரே கம்பெனி திரு இராஜம் தமிழிலக்கியங்களையெல்லாம் தொகுத்து, ஒவ்வொரு தொகுப்பும் ஒரு ரூபாய் விலைக்குக் கொடுத்தார். காரைக்குடி செல்வி பதிப்பகம், அ. லெ. நடராஜன், அமுத நிலையம் போன்றவை பதிப்பக நேர்மையுடனும் இலக்கிய ஓர்மையுடனும் இவ்வெளியீடுகளைக் கொண்டு வந்தன.

இவர்கள் காட்டிய நல்ல வழியை வணிக வெளியீடுகள் தங்கள் தொழிலின் பணப் பெருக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். மேலே கண்ட பதிப்பாளர்களுக்கு இல்லாத வசதி வணிக வெளியீட்டாளர்களுக்கு இருந்தது. அது தமிழகம் தழுவிய அளவில் விற்பனையாளர்களுக்கான வலைப் பின்னலைக் (Network) கொண்டிருந்ததுதான்!

'ராணிமுத்து' சிறந்த நாவல்களை 1 ரூபாய்க்குக் கொடுத்தது. அகிலனின் 'பெண்' நாவல் 50,000 பிரதிகள் செலாவணியானது. சாண்டில்யனின் 'நாகதீபம்' ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாயின. 1976 ஜூலை–டிசம்பரில் மட்டும் அவர்கள் வெளியிட்ட நாவல்கள் $1^1/_4$ லட்சம் பிரதிகள் விற்றதாக அவர்கள் அறிக்கை தெரிவிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



ராணிமுத்துவை பின்பற்றி இலங்கையிலுள்ள 'வீரகேசரி' பத்திரிகை செயல்பட்டு பல ஆயிரம் பிரதிகள் தமிழ் நாவல்களை வெளியிட்டு புதிய திருப்பத்தை அங்கு ஏற்படுத்தியது. இதன்பின் 'கண்ணதாசன்' இதழ் 'அர்த்தமுள்ள இந்துமதம்' புத்தகத்தை ரூ.1-50இல் பல ஆயிரம் பிரதிகள் வெளியிட்டது.

தமிழ்ப் புத்தக வெளியீட்டின் இடர் களைந்து அதன் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்காக 1977 ஆம் ஆண்டு நவம்பர் 26, 27, 28 ஆகிய நாட்களில் "வரும் பத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தக வெளியீடு" என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் பல பெரும் பதிப்பாளர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். குறிப்பாக நா. வானமாமலை, வாசகர் வட்டம் லட்சுமி கிருஷ்ணமூர்த்தி போன்றோர் சிறப்பாகத் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். நேஷனல் புக் டிரஸ்ட் சென்னையில் நடத்திய இந்தக் கருத்தரங்கம் முடிவுற்றபின் பல தீர்மானங்களை இயற்றி அரசுக்கு அனுப்பியது. 20 ஆண்டுகளுக்குப் பின் பார்க்கும் போது அவர்கள் வெளியிட்ட பல தீர்மானங்கள் இன்னும் செயல்படுத்தப்படாமலே உள்ளன.

**தீர்மானங்கள்:**

1. பாடப் புத்தகங்களுக்கும் நோட்டுப் புத்தகங்களுக்கும் சலுகை விலையில் காகிதம் கொடுப்பது போல, மற்றப் புத்தகங்களுக்கும் கொடுக்க வேண்டும்.

2. புத்தகங்களை தபாலிலோ, ரயிலிலோ அனுப்புகையில் கட்டண விகிதங்களில் சலுகை அளிக்கப்பட வேண்டும்.

3. பஞ்சாயத்து போர்டு அலுவலகங்களில் நூல்களை வாங்கி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. அவ்வப்போது வரும் நூல்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் மாதமொரு முறையோ அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறையோ வரவேண்டும். எல்லாப் பதிப்பகத்தாரின் கூட்டுறவு முயற்சியினாலும் இது செயல்படுத்தப்பட வேண்டும்.

5. சென்னையிலும் மாவட்ட முக்கிய நகரங்களிலும் எல்லாப் பதிப்பகத்தாரும் கலந்து கொள்ளக்கூடிய ஒரு விற்பனை ஷோ ரூம் அமைப்பதற்கு எல்லாப் பதிப்பகத்தாரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாநகராட்சியையும் நகராட்சி மன்றங்களையும் இதற்கென பேருந்து நிலையம் போன்ற மையமான இடத்தில் சலுகை வாடகையில் இடமளிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

6. பத்திரிகையில் புதிய புத்தகங்களுக்கான மதிப்புரை, சிறந்த விமர்சனங்களைப் பெரிய அளவு வெளியிடக் கோருதல்.

படிப்பகம்

www.padippakam.com



**தற்போதைய நிலை:**

தமிழகத்தில் கேரளாவில் உள்ளது போல எழுத்தாளர்கள் கூட்டுறவுப் பதிப்பகம் இருந்தால் பல குறைபாடுகளை நீக்கலாம். ஆனால் அப்படி ஆரம்பிக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்க பதிப்பக வெளியீடுகள் பல ஆண்டுகளாகத் தூங்கி வழிந்து கொண்டு இருக்கின்றன.

ஒவ்வொரு பதிப்பாளரும் அவர்கள் புத்தகங்களை மட்டுமே விற்பதற்கு முதன்மை கொடுப்பதால், எல்லா பதிப்பாளர்களின் நூல்களையும் தொகுத்து ஒரே விலைப்பட்டியலில் கொண்டுவர முடிவதில்லை. இதுபோலவே ஏற்றுமதிக்கு வசதி வாய்ப்புள்ள பதிப்பாளர் ஒரே விதமான அல்லது வணிக வெளியீடுகளையே வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து, தமிழகத்தில் உள்ள சிறந்த பதிப்பாளர்களின் வெளியீடுகளை வெளிநாட்டு வாசகர்களுக்குக் கிடைக்காமல் செய்து வருகின்றனர்.

எல்லாப் பதிப்பாளர்களின் நூல்களையும் தொகுத்து வைத்து விற்கும் புத்தக விற்பனை நிலையங்கள் 2 மட்டுமே உள்ளன.

1. ஹிக்கின் பாதம்ஸ்: இதில் இவர்களுக்குத் தேவையான நூல்களை மட்டுமே விற்கின்றனர்.

2. N.C.B.H.: ரஷ்யப் புத்தகங்களையும் தங்கள் வெளியீடுகளையும் மட்டுமே விற்பனை செய்துவருகின்றனர் மற்றவர்களின் வெளியீடுகளை விற்பதில்லை. மேலும் மற்ற பதிப்பாளர்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு– இவர்களுக்கு தமிழகத்தின் முக்கிய நகரங்களில் விற்பனை நிலையங்கள் இருந்தும் இந்தநிலை. பத்திரிகைகளில் பெரிய அளவு வந்துகொண்டிருந்த புத்தக விமர்சனங்களை முழுவதுமாக அவை நிறுத்திக்கொண்டுவிட்டன. எடுத்துக்காட்டாக, தினமணி முழுப் பக்கத்தை விட்டுவிட்டு 'வரப்பெற்றோம்' மட்டுமே வெளியிடுகிறது. குமுதம் முழுப்பக்கத்தைக் கால் பக்கமாக்கிவிட்டது. மேலே கண்ட பல பிரச்சினைகளைக் கூட்டுறவு முறையில் தீர்க்கப்பட்டாலொழிய தீர்வு இல்லை.

## நூலகத் துறை:

இந்தியாவில் நூலகத்துறையின் தந்தையாக கருதப்படும் அரங்கநாதன் பிறந்தது தமிழ்நாடுதான். இதுபோல நூலகத்துறைக்கான சட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலில் இயற்றியதும் தமிழகம்தான். இப்படிப்பட்ட தமிழகத்தில்தான் நூலகத்துறைக்கும் – பதிப்பாளர்களுக்கும் தீராத போராட்டம் கடந்த 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது.

தமிழக நூலகத்துறைக்கு ஒவ்வொரு பதிப்பாளரும் ஒருநூலுக்கு ரூ. 25 பணம் கட்டித் தனது நூலுக்கு நூலக ஆணை வேண்டி விண்ணப்பிக்க வேண்டும். நூல் தேர்வு ஆனதும் 500 பிரதிகளை

படிப்பகம்

www.padippakam.com



21 மாவட்டங்களுக்குப் பிரித்து அனுப்பச் சொல்லி நூலக ஆணை வரும். இதில் உள்ள சிக்கல்கள் – கொடுமைகளைக் காண்போம்.

தமிழகத்தில் 2000 நூலகங்கள் இருக்க, நூலகத்துறை 500 புத்தகங்களை மட்டுமே வாங்குகிறது. இந்த 500 புத்தகங்களை நூலகத்துறைக்கு விற்பதால் பதிப்பாளருக்கு அப்புத்தக விலைகூடக் கிடைப்பதில்லை. பதிப்பாளர் ஒரு நூலுக்கு ரூ.20 விலைவைத்தால் நூலகம் ரூ. 13க்கு நூலக ஆணை கொடுக்கும். இந்த 13 ரூபாயிலும் 15 % கழிவு கேட்கிறது. அதையும் கழித்தால் ரூ. 11க்குக் கொடுக்க வேண்டிவரும். 21 மாவட்டங்களுக்கு நூல்களை அனுப்புவதற்கு ஒரு பார்சலுக்கு 50 செலவு பிடிக்கிறது. பார்சல் மற்றும் விற்பனை பில் பதிவஞ்சலில் அனுப்புவதில் ரூ. 11 ஆகிறது. ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டால் நூலகத்துறை பதிப்பாளரின் விலையிலிருந்து 60 %. கழித்துவிடுகிறது. பதிப்பாளருக்கு மீதியுள்ள 40 %. அதன் ஆக்கச் செலவுக்குக்கூட கட்டுப்படியாகவில்லை. இந்த 40 %. ஐக்கூட நூலகத்துறை பதிப்பாளருக்கு அனுப்ப 1½ ஆண்டுகள் ஆகிறது. இதுதான் இன்றைய நூலகத்துறையின் லட்சணம். இக்கொடுமையிலும் பல குளறுபடிகள் நடக்கத்தான் செய்கின்றன.

வெளி மாநிலங்களில் நூலக ஆணை வேண்டி விண்ணப்பிக்கும் போது ரூ. 25 கட்ட வேண்டியதில்லை. பதிப்பாளர் விலைதான் நூலக விலையும். 10 %.க்கு மேல் கழிவு கேட்பதில்லை.

மேலும், இங்கு நூலைத் தேர்வு செய்யும் குழுவுக்குச் சமகால நூற்பழக்கமே இருப்பதில்லை. குழு பத்தாம் பசலித்தனமாகவே நடந்துகொள்வதோடு தேர்வில் பாரபட்சமும் காட்டுகிறது. ஆளும் கட்சிக்குச் சார்பான நூல்களையே வாங்குகின்றனர். (எ–கா) 'கம்பன் கழகம்' கம்பராமாயணம் முழுவதையும் பைபிள் தாளில் போட்டு மலிவு விலையில் கொடுத்ததை வாங்கவில்லை. மாறாக, 'இந்திரா காந்தி அபினந்தன் கிரந்த்' என்ற நூலை ஒரு செட் ரூ. 600 என்ற விலையில் 200 செட் வாங்கினதுமல்லாமல் 15 சதவீதக் கழிவும் வேண்டாமெனக் கூறியது.

நூலகத் தேர்வுக் குழுவினருக்கு நவீன தமிழ் இலக்கியத்தில் கொஞ்சம்கூட பரிச்சயமில்லாமல் இருக்கிறது. மாதிரிப் படிகளை கைவண்டிகளில் கொண்டுவந்து தள்ளும் வணிக வெளியீட்டாளர்களின் வெளியீடுகளில் கணிசமான எண்ணிக்கை தேர்வு செய்யப்படுவதும், பெரும் இன்னல்களை ஏற்றுப் புத்திலக்கியங்களை வெளிக்கொணரும் இலக்கிய ஆர்வலர்களினதும், தன்னுடைய தரமான எழுத்துகளைத் தானே வெளியிடும் ஆசிரியப் பதிப்பாளர்களினதும் ஆன நூல்கள்– முன்னுரிமை கொடுக்கப்படாவிட்டாலும் போகிறது சம உரிமைகூடக் கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

தமிழக முதல்வரும் ஒரு எழுத்தாளர். 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்னும் புதுத்தெளிவோடு இயங்கிவிட மாட்டாரா என்று எல்லோரும் எதிர்பார்ப்பதுபோல் நாமும் 'இந்நூலக இயக்கத்தையும் நேர் செய்துவிட மாட்டாரா' என்று பார்க்கலாமே. ★

படிப்பகம்

www.padippakam.com



பின்னிணைப்பு:

தமிழில் தற்கால அறிவைப் பரப்புவதன் பொருட்டு புஸ்தகங்கள் பிரசுரிப்பது கம்பெனியின் முக்கியமான நோக்கம்.

தற்சமயம் எவ்வளவோ தேவையிருந்தும், கம்பெனி, பிரசுரிக்க உத்தேசித்துள்ளவை போன்ற புஸ்தகங்கள் தமிழில் மிகக் குறைவாயிருக்கின்றன. இந்தத் துறையில் இதற்கு முன் முயற்சி செய்தவர்களின் பிரயாசைகளெல்லாம் புஸ்தங்களுக்கு வைக்கப்பட்ட அடரிமிதமான விலையினாலேயே வெற்றியடையாமல் போய்விட்டது. தமிழ் படிப்பவர்களில் பெரும்பாலோர் அத்தகைய புஸ்தகங்களை வாங்குவதற்கு விலை ஒரு பெரிய தடையாயிருக்கிறது.

தமிழில் நல்ல உயர்தரமான இலக்கிய வளர்ச்சியில் அக்கறையுள்ள எவரும் இந்தப் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு வருந்தாமலிருக்க முடியாது. இன்றை உலகம் நாளுக்குநாள் அறிவில் பெருகி, கருத்துக்களில் விரிவடைந்து வருகிறது. இந்த விரிவை அறிந்து அதற்குத் தகுந்தபடி மனதைப் பண்படுத்தும் புஸ்தகங்களை பொது ஜனங்களுக்கு, அவர்கள் சக்திக்கேற்ற விலையில் பிரசுரித்துக் கொடுக்க வேண்டுமென்பது கம்பெனி ஸ்தாபகர்களின் நோக்கம். அதன் மூலம் அவர்களுக்கு அறிவு விருத்தியும், பொழுதுபோக்கும் கிடைக்க உதவிசெய்ய முடியும். இந்த மாதிரி புஸ்தகங்கள் பொது ஜனங்களுக்கு மிகமிக அவசியமானவை.

கம்பெனியின் மூலதனத்திற்கு ஏற்றபடி ஆரம்பத்தில் மாதாமாதம் எட்டணா விலையில் 200 பக்கங்கள் உள்ள புஸ்தகம் ஒன்று பிரசுரிப்பது சுலப சாத்தியமேயாகும். இத்தகைய புஸ்தகம் ஒன்று 5000 பிரதிகள் விற்பதும் கஷ்டமன்று. இந்தப் பிரசுரமும் வியாபாரமுமே கம்பெனிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500வரை லாபம் கொடுக்குமென்று கருதப்படுகிறது. "மணிக்கொடி" பத்திரிகையின் ஏஜன்ஸி அமைப்பு இந்த மாகாணம் முழுவதும், வெளிநாடுகளிலும் அமைப்பாக வேலை செய்து வருகிறது. அந்த அமைப்பின் உதவியால் வெளியூர்களிலுள்ள பொது ஜனங்களுக்கு விலையில் வித்தியாசமில்லாதபடி இந்த புஸ்தகங்கள் கிடைக்கும்படி செய்வது சுலபமாக்கப்படும். இதனால் நகரங்களிலும், உள்நாட்டுக் கிராமங்களிலும் கம்பெனியால் பிரசுரிக்கப்படும் புஸ்தகங்கள் ஒரே விலையில் விற்பது சௌகரியமாகும்.

இந்த மாதிரிப் பிரசுரமாகும் புஸ்தகம் ஒவ்வொன்றிலும் 5000 பிரதிகள் விற்பது சாத்தியமானதே என்பதைக் கருதி, கம்பெனி ஸ்தாபகர்கள் முதல் வருஷத்திலேயே மூலதனத்திற்கு நூற்றுக்கு ஆறு டிவிடெண்டு கொடுக்க முடியுமென்று நம்புகிறார்கள்.

கம்பெனியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 20,000. கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக ஸ்ரீமான் டி.எஸ்.சொக்கலிங்கம் அமைய ஒப்புக்கொண்டிருப்பது கம்பெனியின் அதிர்ஷ்டமேயாகும்.

—மணிக்கொடி, ஜனவரி 15, 1937, ப. 67.

படிப்பகம்

www.padippakam.com

# வ.ரா.வுக்கு வந்த கடிதங்கள்

## 5. அ. ஸ்ரீநிவாசராகவன் கடிதம்

A. Srinivasa Raghavan, M.A.
Trichinopoly Flying Club.

திருச்சி
1-6-34

ஸ்ரீ. வ. ரா. அவர்களுக்கு,

சில கேள்விகள் கேட்டுத்தானாக வேண்டும். உங்களைப் பய முறுத்த முடியுமா? அதுவும் என்னால் முடியுமா? அப்படி பய முறுத்தும் ஒருவரிடம் 'ஆசை, மோகம், ப்ரியம், மரியாதை, வாஞ்சை, அன்பு' இவை எப்படி இன்னொருவருக்குத் தோன்றும்? எழுதுவதற்கு ஒன்றுமில்லையே, பிறகு எழுதுகிறேன் என்று "மாப்பு" கேட்கும் ஒருவருக்கு சாட்டையா கொடுப்பது?......... ஆனால் ஒரு திருப்தி: 'ஒன்றுமில்லை' என்று நான் எழுதியது உங்கள் கடிதத்திற்குச் சமாச்சாரமும், தலைப்பும் கொடுத்ததே! ஆகவே (இந்த வார்த்தை தொழில் முறையிலே எனக்கு உரிமை) 'ஒன்றுமில்லை' என்ற சங்கர மதம் தவறு; எல்லாம் இருக்கிறது; 'ஒன்றுமில்லை' என்று நினைப்பது மயக்கம்... ஏன், ஸ்ரீவைஷ்ணவ மத ஸித்தாந்தம் போதுமா? நீங்கள் அவிழ்த்த வைஷ்ணவ பரி பாஷைக்கு அருகனாகிவிட்டேன் அல்லவா?

நட்டாற்றிலே ஒருவனைத் தூக்கி எறிந்துவிட்டு எப்படி நீந்து கிறான் என்று பார்ப்பதில் சிலருக்கு ஒரு சந்தோஷம். போன மாதம் சென்னைக் கடற்கரையில் அடிக்கடி நான் சந்தித்த என் நண் பர் ஒருவருக்கு அப்படித்தான். 'பேசவேண்டாம், பேசவேண்டாம்' என்று ஒதுங்கி ஒதுங்கிக் கரையோடு செல்லும் ஒருவனை, திடீ ரென்று ஒரு பேச்சுப் பாணத்தால், அன்றைய தினம் 'மாரீசனை ராமன் தூக்கி எறிந்தானாமே' அந்த மாதிரி ஒரே தூக்காய்த் தூக்கி எறிந்துவிடுவார். கரை வந்து சேர்வதற்குள் அவனுக்குக் கை ஓய்ந்து போகும். ஆனால் என் நண்பருக்கும், தசரதராம னுக்கும் (பெயரிலேயும் ஒற்றுமை இருக்கிறது; சிலேடை எழுதலாம் என்று நாக்கில் ஜலம் ஊறுகிறது) ஒரு வேற்றுமை. மாரீசனைத் தூக்கி எறிந்த பின்பு, அவனைப் பற்றிய கவலையொன்றும் இல்லா மல், உல்லாசமாய் மிதிலைக்குச் சென்று, ஸீதையைக் கல்யாணம் செய்து கொண்டானாம் தசரதராமன். என் நண்பரோ, தானும் ஆற்றிலே குதித்து, யாரைத் தூக்கி எறிந்தாரோ அவனோடு நீந் திக் கொண்டே வருவார். கரைவந்து சேரத் தெரியாதவனானால் கரைக்கும் கொண்டு சேர்த்துவிடுவார். இதில் அவருக்கு ஒரு மோஹம். பேர்வழி யாரென்கிறீர்கள்? ஊரைச் சொல்லிவிட்டேன்; பேரைச் சொல்லலாமா?

படிப்பகம்

www.padippakam.com



எதற்காக இதைச் சொல்ல வந்தேன் என்றால், (இப்பொழுது உங்கள் கடிதம் வந்த பிறகு தெரிகிறது) ஆற்றில் ஒருவனைத் தூக்கியெறிந்து நீந்துகிறானோ என்று பார்ப்பதற்கு பேச்சுப் பாணம் போல் கடித அஸ்திரமும் உபயோகப்படுகிறது என்பதைச் சொல்வதற்காகத்தான். அலக்ஷியமாய் நீங்கள் தமிழில் எழுதிவிடுகிறீர்கள்; உங்கள் கையில், தொழில் தெரிந்த கொல்லன் தோய்த்த வாள் போல், சொன்னபடியெல்லாம் கேட்கிறது இந்தத் தமிழ்: வளைந்து கொடுக்கிறது. பளிச்சென்று மின்னுகிறது: நான் என்ன செய்வது, உங்களுக்கு எப்படி பதில் எழுதுவது?

இந்த அழகிலே, என் ஒத்தாசை வேறு வேண்டும் என்கிறீர்கள். என்னாலான கைங்கர்யம் செய்யத் தயார்; ஆனால் அது 'ஒத்தாசை'யாய் இருக்குமா என்பதுதான் கேள்வி...

'சங்கு' விஷயங்கள் எந்த நிலைமையில் இருக்கின்றன? தி.ஜ.ர. ஸௌக்யமா? அவர் 'ராஜத்தி'யாகப் படுத்தும்பாடு சொல்லத் தரமில்லை. 'ரங்கம்' எது எழுதினாலும் அதிலே ஒரு 'சொள்ளை'யைக் கண்டு பிடிக்கிறார். பாவம், 'ரங்கம்' என்ன செய்வாள்? மனதில் ஆறுதலடைந்து விட்டேனா என்று கேட்கிறீர்கள். 'இல்லை' என்பது என் தீர்மானமான பதில். ஆசை, மோகம், ப்ரியம், மரியாதை, வாஞ்சை' இவ்வளவும் கலந்த ஒன்றைப் பெற்றால் அடைவது ஆறுதல் அல்ல; பூரிப்பு; அதன்பின் இதைத் தாங்க சக்தியுண்டா என்ற சந்தேகம்.

தங்கள் அன்புள்ள,
ஸ்ரீ.ரா.

இன்னும் 2 தினங்களில் திருநெல்வேலி போகிறேன்.
திருநெல்வேலி அட்ரஸ் ஸ்ரீநிவாஸ்,
கோபாலசாமி வடக்கு மாடவீதி,
பாளையங்கோட்டை.

## 6. மேலும் அவர் கடிதம்

A. Srinivasa Raghavan, M.A.

'ஸ்ரீநிவாஸ்'
கோபாலஸ்வாமி வடக்கு மாட வீதி,
பாளையங்கோட்டை.
9-6-34

ஸ்ரீ. வ. ரா. அவர்களுக்கு,

நமஸ்காரம். உங்கள் நீண்ட கடிதம் கிடைத்தது...

படிப்பகம்

www.padippakam.com



முதன் முதலில் 'பாரதியார் வேலை' என்று நீங்கள் குறிப்பிடும் விஷயத்தைப் பற்றி, சிறிது பேசுகிறேன். அது சம்பந்தமாக திருநெல்வேலிக்கு வருவதாக எழுதி இருக்கிறீர்கள். மிகவும் சந்தோஷம். என்னால் முடிந்த உதவி உங்களுடையது; எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். "வெள்ளைக்காரதேசப் பிரசுரங்களுக்கு எந்த வகையிலும் சளைக்காத முறையில் இவைகளை (பாரதி வசன நூல்களை) வெளிக் கொண்டு வருவதற்கான வழிகளில் "நீங்கள் பாடுபடுவீர்கள்" என்று உங்கள் அறிக்கை கூறுகிறது. இதைப் பார்த்ததும் நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. உங்கள் பதிப்பில் விமர்சனக் கட்டுரைகள் ஒன்றிரண்டு இருந்தால் மிக அழகாய் இருக்கும்; அவசியமும்கூட. உயர்ந்த இலக்கியம் என்பது அற்புதமான ஒரு சிருஷ்டி, அழகிய மலரைப் போல, நிலவைப் போல, மின்னலைப் போல. இதை எவ்வாறு அனுபவித்து ஆனந்தமடைவது என்பதை விமர்சன மூலமாய்ச் சிறிதாவது விளக்காவிட்டால் அதன் சக்தியில் ஒரு பகுதி, சிறியதொரு பகுதியையே, ஜனங்கள் உணர்வார்கள்...... இவ்வளவு போதும், கண்ணாரத் தெருவிலே ஊசி விற்பானேன்?

'கட்சிவாதம் தேவையில்லை' என்று மூன்று பக்கங்கள் கொண்ட கடிதத்தில் $2^1/_4$ பக்கம் வாரத்திலே செலவழித்த பிறகு சொல்கிறீர்கள். ஆனால் இந்த $2^1/_4$ பக்கத்தில் அடங்கியிருக்கும் வார்த்தைகள் உங்களுக்குத் தமிழ்த்தாயிடம் உள்ள அளவு கடந்த பத்தியினால் ஏற்பட்டவை என்பதை அறிகிறேன். ஆகவே, எவ்வளவு தூரம் இந்த மாதிரியான வார்த்தைகள் நீங்கள் சொன்னபோதிலும் நான் கேட்கத் தயார் என்றாலும், ஒன்று மட்டும் சொல்லித்தான் ஆகவேண்டும். ஜீவசக்தி கக்கும் அதிர்ந்த குரலில், பளிச்சென்னும் வார்த்தைகளில் நான் அதைச் சொல்ல முடியாவிட்டாலும், சொல்லித்தானாக வேண்டும். தமிழ் மொழியிடம் எனது முறையிலே நானும் அன்பு கொண்டவன். ஆகவே இந்த வகையில் உங்கள் சகோதரன். இங்கிலீஷிலேயே "பிராணனை விடுவதில்" பெருமையடித்துக் கொள்பவனல்ல; பிராணனை விடுபவனுமல்ல. தமிழில் நான் எழுதக் கூசுவது எனக்கு இங்கிலீஷின் மேல் உள்ள அர்த்தமில்லா மோகத்தினால் அல்ல. என் மனதில் எழும் எண்ணங்களை, சிந்தனை எழுப்பும் ஆகாசக் கோட்டைகளை தமிழ் மொழி மூலமாய் என்னால் தெளிவாகச் சொல்ல முடியவில்லையே என்ற ஓயாப் பெருங்கவலையும், நான் எழுதும் தமிழ், தமிழ்ப் பாஷையின் நயங்களையும், அதன் இயற்கையான ஸ்வரங்களையும் விட்டு, வெறும் ஓசையாய், அபஸ்வரக் களஞ்சியமாய் முடிந்துவிடுவதால் ஏற்படும் வேதனையும்தான் தமிழில் நான் எழுதாமல் இருப்பதற்குக் காரணம். "பாடப் பாட ராகம்" என்பது உங்களின் தைரி

www.padippakam.com



யமான பதில்; ஒப்புக்கொள்கிறேன். உடைந்த குரலில் தட்டுத் தடு மாறி, கமகமில்லாமல் அநுஸ்வரங்களைத் தொடாமல், தொடவும் முடியாமல், பாட முயல்பவன் ஒருவனுக்கு பயமும், ஸங்கோஜமும் தானே இயற்கையான உணர்ச்சிகள்! அதுவும் அவன் சிறிது 'கேள்வி ஞானம்' உடையவனாயிருந்து விட்டானோ, அவனுடைய சஞ்சலம் எல்லையற்றது.

எனது பாக்ய வசத்தால் இலக்கியத்தைப் பற்றியவரையில் இந்தக் கேள்வி ஞானத்தை ஒரு சிறிது பெற்றிருக்கிறேன். இதை நான் அடைந்தது எனது ஆங்கிலப் பயிற்சியினால்தான். தமிழை நீங்கள் சொல்வது போல் 'வெருட்டியடிப்பது' இங்கிலீஷ் பாஷை அல்ல. இங்கிலீஷ் பாஷையையும், அதன் உயர்ந்த இலக்கியத்தையும் அதில் சிருஷ்டியாகியுள்ள உன்னதமான கவிதையையும் உள்ளபடி அறிந்த எந்தத் தமிழனும், அறிந்த உடனே தமிழ்த் தாயிடம் முன்னிலும் பதின் மடங்கு அதிகமான பக்தியைச் செலுத்துவான்.

"சொல்லவும் கூடுவதில்லை –
சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை"

என்று ஏங்கிய பாரதியாரின் வார்த்தைகளை

"சொல்லவும் கூசுவதில்லை—
சொல்லா வறுமை தமிழ்மொழிக்கில்லை"

என்று மாற்றவும் முற்படுவான். சிறந்த இலக்கியம் படைத்து, லக்ஷக் கணக்கான மனிதர்களால் பேசப்பட்டுவரும் தமிழ் போன்ற ஜீவமொழியை, வேறெந்த மொழியும் வெருட்ட இயலாது. தமிழ் மொழி வெருட்டப்பட்டால், அதை வெருட்ட முற்படுவது இங்கிலீஷல்ல; தமிழனின் அடிமை மனப்பாங்கு. இங்கிலீஷிடம் எனக்கு ஆழ்ந்த அன்புண்டு: இங்கிலீஷ் இலக்கியத்தின் விரிவையும் சோபையையும் கண்டு நான் பிரமிப்பதுண்டு; ஆனால் மேலே குறித்துள்ள அடிமை மனப்பாங்கை நான் இன்னும் கொள்ளவில்லை... ஆம், நாளையதினம் திருநெல்வேலியிலே தமிழர் மகாநாடு கூடுகிறது. ஆனால் அதன் முதல் நாளைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவோ, அவற்றைக் காணவோ என்னால் முடியாது. ஏனென்றால் நாளை காலை, முக்கியமான, அவசரமான ஒரு காரியத்தை முன்னிட்டு, குற்றாலம் போகிறேன். மகாநாட்டின் இரண்டாம் நாளைய நிகழ்ச்சிகளைக் காணத் திரும்பி வருவதாக உத்தேசம். திரும்பியவுடன், மகாநாட்டைப் பற்றி எழுத விஷயம் ஏதாவதிருந்தால் உடனே எழுதுகிறேன். ஒன்று மாத்திரம் அந்த மகாநாட்டைப் பற்றி நான் இப்போது சொல்லக்கூடும்; மகாநாட்டு அறிக்கை சிலவற்றிலும், அழைப்பிலும் தனித்தமிழ் என்ற சொல் அதிகமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பது எனக்கு சிறிது கலக்கத்தை உண்டு பண்

படிப்பகம்

www.padippakam.com



ணுகிறது. ஏன் என்று சொல்வது தேவையில்லை என்று நினைக்கிறேன்.

தசரதராமனுக்கும் உங்களுக்கும் நான் வேடிக்கையாகப் புனைந்துள்ள Comparison உங்களுக்கு வருத்தம் உண்டாக்கிவிட்டது என்கிறீர்கள். செய்தது என்னவோ வேடிக்கையாகத்தான் என்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால் கூனியின் முதுகை களிமண் உருண்டை பாணத்தால் நிமிர்த்த முற்பட்டிருக்கமாட்டான். நான் எழுதியது அபசாரம் என்று நான் நினைக்கவில்லை. அபசாரமானால், தசரதராமன் மன்னித்துவிடுவான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. 'ஏழை யேதலன் கீழ்மகனென்னாது இரங்கி மற்றவர்க் கின்னருள் சுரந்து, பின்பு காகாசுரனுக்கும் கருணையளித்த வள்ளல் ராமபிரான் என் வேடிக்கை வார்த்தைகளை வேடிக்கையாகவே கொள்வான்! ஆனால் உங்களுக்கு வருத்தம் ஏற்பட்டதில் எனக்கிருக்கும் வருத்தம் சொல்லிமுடியாது. நான் எழுதியது Serious comparison அல்ல; 'Canto' என்று மட்டும் மறுபடி தெரிவித்துக் கொள்கிறேன்... "ஆறுதல் ஏற்பட்டதா?" என்ற உங்கள் கேள்வி என் மைத்துனியின் மறைவால் ஏற்பட்ட மனநெகிழ்ச்சியைப் பற்றியது என்று அப்பொழுதே தெரிந்து கொண்டேன். வேண்டுமென்றே "கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல பதில்" என்று எழுதினேன். அந்த விஷயத்தைப் பற்றி எழுத என்னால் முடியவில்லை. என் தோல்வியை மறைக்கவும், அந்த விஷயத்தை ஒருவாறு உங்களுக்குக் கடிதம் எழுதும்போதாவது மறக்கவும் நான் செய்த அற்பச் சூழ்ச்சியே நீங்கள் குறிப்பிடும் "கிணறு வெட்ட கிளம்பிய பூதத்"தின் தாய்... 'சங்கு' மறுபடி வாரம் மும்முறை வெளிவரும் போலிருக்கிறது. வெறும் அரசியல் பத்திரிகையாய்த்தானிருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அதன் புதிய உருவத்தில், இலக்கியத்திற்கும், கலைகளுக்கும் இடமிராது என்பது என் எண்ணம். அது தவறா?

உங்கள் அன்புள்ள,
ஸ்ரீ. ரா.

தி. ஜ. ர.வை "விஜாரித்ததாகச்" சொல்லவும். அவர் ஒரு கடிதம் எழுதப்படாதா?

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மொழி வளர்ச்சி

—திருவாளர் டி.என். சிவஞானம் பிள்ளை அவர்களின் அரிய சொற்பொழிவு

**''திருச்சியில் கூடிய தமிழ்ப் பண்டிதர் மகா நாட்டில் வளர்ச்சிமுறை அமைச்சர் திரு டி.என். சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவு'' என்னும் குறிப்புடன் 'திராவிடன்' இதழில் வெளியான நீதிக் கட்சி அமைச்சரின் பேச்சினை 'குடிஅரசு' இதழ் மறு வெளியீடாக 10–5–1925, 17–5–1925 ஆகிய நாட்களில் வெளியிட்டது. —மூலத்தின் நகல் கிடைக்க உதவியவர் திரு எஸ்.வி. ராஜதுரை.—**

## அவையடக்கம்

செந்தமிழைப் போற்றி வளர்க்கும் பண்டிதர்கள் கூடும் இம் மகாநாட்டில் தலைமை வகிக்கும் பெருமையை எனக்கு மனம் உவந்து அளித்த உங்களுக்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். முதல் முதலாய், சில மாதங்களுக்கு முன்னர் திரு மாணிக்க நாயக்கர் அவர்கள் என்னை இப் பெரும் பாரத்தை ஏற்குமாறு விரும்பியபோது நான் மிகவும் மலைத்தேன். உள்ள நாள் முழுவதும் தமிழுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் பண்டிதர்களுக்கு ஏதேனும் நூதனமாய் சொல்லவல்ல பாண்டித்தியமும் எனக்கில்லை; நூல் ஆராய்ச்சியும் விசேஷமாய்க் கிடையாது; கல்வி இலாகாவின் தற்கால இயக்கங்களிலும் ஈடுபட்டவன் அல்லன். இவ்வாறு இருக்க பொதுவில் கல்வி விஷயமாகவோ, சிறப்பாய் தமிழ்மொழி வளர்ச்சியின் வகையாகவோ நான் ஏதேனும் சொல்லத் துணிந்தால் என் கருத்துகள் எல்லோருக்கும் பொருந்துமா என்ற ஐயப்பாடும் உண்டு. இவை போன்ற பல காரணங்கள் பற்றி, என்னை நானே நன்கறிந்தவனாய், இம்மகாநாட்டில் தலைமை வகிக்க எவ்விதத்திலும் அருகன் அல்லன் என்ற எண்ணங்கொண்டு, உங்கள் வேண்டுகோளை மறுத்துவிடுவதென்று எண்ணினேன். எனினும் வேறு சில காரணங்களைக் கொண்டு முடிவில் இசைந்தேன். சாதாரணமாக ஏதேனும் களியாட்டத்தில் ஈடுபட்டிருப்பவர் கண்களுக்குத் தோன்றாத சில குறைகள் வெளியே நின்று வேடிக்கை பார்க்கிறவர் கண்களுக்குப் புலப்படும் என்பார்கள். விளையாட்டுக்குள் ளதே வினைக்குமாகும். அது பற்றி தமிழ் நூல் ஆராய்ச்சியும் விசேஷ சாஸ்திர ஞானமும் எனக்கு இல்லாத போதிலும் வேடிக்கை பார்க்கிறவனுக்குத் தோன்றும் விதத்தில் என் பொது அறிவுக்குட்பட்ட சில விஷயங்களை மட்டுமே சொல்லந் துணிந்தேன். நான் சொல்லத் துணிந்தவை சிலர் கொள்கைக்குப் பொருந்தியும், சிலர்

படிப்பகம்

www.padippakam.com



கொள்கைக்குப் பொருந்தாமலும் இருக்கலாம். எனினும் அவரவருக்குத் தோன்றும் கருத்துகளை வெளிப்படுத்த ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையைப் பாராட்டியே என் எண்ணங்களை வெளியிடுகிறேன்.

## தாய் மொழி காத்தல்

தத்தம் தாய்மொழி காத்தலே ஒவ்வொரு தேசாபிமானிக்கும் பாஷாபிமானிக்கும் ஏற்பட்ட புராதனமான கடமையாகும். அக்கடமையைச் சரிவரச் செலுத்தும் வண்ணமே குடியரசு நாடுகளிலும், முடியரசு நாடுகளிலும் சுதந்திரம் வாய்ந்த கல்விமான்கள் கூடிப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வருகிறார்கள். அவைகளில் சில அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்டும் சில உட்படாமலும் நடக்கின்றன. எனினும் அரசாங்க பாஷையை மேன்மைப் படுத்தி அதை முன்னேறச் செய்வதே அவைகளின் பொது நோக்கமாகும். பூரண சுதந்தரம் அற்று வேற்றரசர் வகைப்பட்ட நாடுகளிலும் அரசாங்க பாஷையே மேன்மைப்பட்டு வருவது வெளிப்படை. அரசாங்க காரியங்களுக்கு அனுகூலமாய் உள்ள பாஷையைத்தான் அரசாங்கத்தாரும் ஆதரிக்கக்கூடும். அரசாங்கத்தில் உத்தியோகப் பற்று உள்ளவர்களும், அதை எதிர்பார்க்கிறவர்களும் அவ்வரசாங்க பாஷையையே ஆதரிக்க ஏற்படும். ஆதலால் அரசாங்கத்துடன் ஐக்கியப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கும் உத்தியோகஸ்தர்களும் ஆசிரியர்களும் அரசாங்க பாஷையை மேன்மைப்படுத்துவது இயற்கையே ஆகும். ஆனால் தம் பிழைப்புக்கு ஆதாரமாய் உள்ள அரசாங்க பாஷையை ஆதரிப்பவர்கள், தம் தாய்ப் பாஷையை அனாதரவு செய்வதே இயற்கைக்கு மாறாகத் தோன்றுகிறது. இவர்களே மாதா வயிறெரிய மகேசுர பூசை செய்தவனின் மனப்பான்மை உடையவர்களாக இருக்கிறார்கள். தாய்ப் பாஷையென்று சொல்லுமிடத்து ஒருவன் எந்தப் பாஷை பேசும் தாய் தந்தையருக்குப் பிறந்து, எந்தப் பாஷையில் உள்ள சொற்களால் தாய் தந்தையரை அழைக்கக் கற்று, எந்தப் பாஷையை சாதாரணமாகப் பேசப் பழகி, எந்தப் பாஷையில் பயின்று வருகிறானோ அந்தப் பாஷையையே குறிக்கும். தமிழ்மகன் ஒருவன் தன் புத்தி தீட்சண்யத்தாலும் பயிற்சியின் தேர்ச்சியாலும் சமஸ்கிருதம், லத்தீன், கிரீக் முதலிய பாஷைகளைக் கசடறக் கற்று, அவ்வகைப் பாஷைகளில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் போதுமான பாண்டித்தியம் வாய்க்கப் பெறினும் தமிழே அவனுக்குத் தாய்ப் பாஷையாகும். அது போன்றே, வெவ்வேறு பாஷைகளுக்கு உரியவர்களும், சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தில் நம் நாடு புகுந்து, நம்முடன் உட்கார்ந்து உறவாடி, நம் பாஷையைப்

படிப்பகம்

www.padippakam.com



பல்லாண்டுகளாகப் பரம்பரைப் பாத்தியதையாய்ப் பயின்று வருகிறவர்கள் தமிழ் மக்களேயாவர். தமிழ்நாட்டைத் தம் வாசஸ்தலமாகக் கொண்டு தமிழையே பழகிவரும் ஆரியரும் தமிழ் மக்களே! அவ்விதமே கேரளத்தையும், கர்நாடகத்தையும், ஆந்திரத்தையும் உறைவிடமாய்க் கொண்டவர்களும் அந்தந்த தேசங்களில் நிலவும் பாஷைக்கே உரியவர்கள் ஆவர். எந்தெந்த பாஷையில் ஒவ்வொரு வகுப்பாரும் தம் பெற்றோரிடமும், மனைவி மக்களுடனும் சிரித்து சல்லாபிக்கிறார்களோ, அந்தப் பாஷை தமக்கு வாழ்க்கையில் இன்பம் அளிக்க இன்றியமையாததாய் இருக்கும் காரணம் பற்றியேனும் அந்தப் பாஷையைப் பெரிதும் பாராட்டி, மேம்படச் செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

## தமிழின் தற்கால நிலை

இருந்தும் நம் சென்னை சர்வகலா நிலையத்தின் நிகழ்ச்சிகளில் எத்தனை அநீதிகள் காண்கிறோம். பிறநாட்டாருக்கு நம் நாட்டு பாஷையிலுள்ள அபிமானம்கூட நம் நாட்டு வாசிகளுக்கு இல்லாமல் போகிறது. ஆசிரியர் கார்லி முதலியவர்களுக்குத் தென்னாட்டு மொழிகளில் உள்ள அனுதாபம் தென்னாட்டிலே பிறந்து வளர்ந்த நம் ஆரிய சகோதரர்களுக்கு இல்லாமற் போயிற்று. அரசாங்கத்தாரைக் குறை சொல்லவும் இடமில்லை. மொழி வளர்ச்சிக்கும் கல்வி பயிற்சிக்கும் வேண்டிய சட்ட திட்டங்கள் ஏற்படுத்திக்கொள்ள அகடமிக் கவுன்சில் ஒன்று நியமித்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் திராவிட மக்கள் மிகைபட இல்லாமல் இருக்கலாம். அவ்விதம் இருப்பினும் திராவிடப் பாஷையே பயிலும் ஆரியர்களுக்கு தம் தாய்ப்பாஷையிடத்து நன்றி கெட்டுப்போனது துக்ககரமானது. ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தின கதைபோல், இந்த நாட்டிற்கே உரித்தான பாஷைகளைக் கற்பிக்க பெரும் கணக்காயர் ஏற்படுத்தப்பட வேணுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அது மாத்திரம் அல்ல. சுதேச பாஷா விருத்தியே நாடெங்கும் முழக்கம். தாய்மொழி வளர்த்தலே தேசாபிமானிகளின் முக்கிய நோக்கம். தாய்மொழிப் பயிற்சியே தேச சுதந்தரத்துக்குத் திறவுகோல். சுதந்திரவாதிகள் என்றும் தேசாபிமானிகள் என்றும் பறையறைந்து கொள்கிறவர்களே தத்தம் இயக்கங்களுக்கு இன்றியமையாத் துணையாய் நிற்கும், தாய்ப் பாஷைகளைக் கட்டாயப் பாடம் ஆக்க வேண்டுமென்று ஒரு துரைமகன் கொண்டு வந்த ஒரு தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். தாய்ப் பாஷையையோ அல்லது சமஸ்கிருதத்தையோ கட்டாயப் பாடம் ஆக்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். சிறு பிராயத்திலேயே வடமொழியைக் கட்டாயப் பாடமாய் எடுத்துக் கொள்ளும் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



மாணவனுக்குத் தன் தாய்மொழியில் எவ்வளவு ஞானம் இருக்கும் என்பதை இலகுவில் ஊகிக்கலாம். பேச்சு வழக்கிலுள்ள கிராமிய பாஷை தெரியும். கீழ்த்தர வகுப்புகளில் படித்த தமிழ்மொழி நெடுங்கணக்கும், பிழையறப் படித்த சில வார்த்தைகளும் பதப்பிர யோகங்களும் தெரியும். இதை வைத்துக்கொண்டு தன் பிற்காலத்தில் அவன் தமிழ்மொழியின் மூலமாய் எவ்விதந்தான் தேசத் தொண்டு புரிவானோ தெரியாது. இவன் போன்றவர்களே பாமரரின் அஞ்ஞான இருளைப் போக்கப் பாடுபட வேண்டியவர்கள். இவர்களே சம்பாஷனை மூலமாயும் பிரசங்கங்கள் மூலமாயும் புத்தகங்கள் மூலமாயும் தாய்மொழி மாத்திரம் நாடோடிப் பழக்கத்தில் தெரிந்திருக்கும் பலரையும் முன்னேற்ற முன்வர வேண்டியவர்கள். அப்பெரும் பாரத்தை வகித்து, தேசக்கைங்கரியம் செய்யப் போதுமான பாஷா ஞானமும், சொல்வன்மையும் இல்லாமல் எவ்விதந்தான் நாட்டுக்காக உழைப்பார்களோ தெரியவில்லை. இதை உணர்ந்தாவது உண்மைத் தேசாபிமானம் உள்ளவர்கள் தேசத் தொண்டில் ஈடுபட வேண்டியவர்களுக்கு வடமொழியை விடத் தென்மொழியே இன்றியமையாதிருத்தலையறிந்து, தாய்மொழியை ஒவ்வொரு மாணவனும் கட்டாயப் பாடமாய்ப் படிக்க வேணுமென்று தீர்மானிப்பார்களாக. நமது கொள்கை ஒன்றாயும் நமது செய்கை வேறாயும் இருப்பது நமக்கே வெட்கக்கேடு. தமிழ் மொழி வளர்க்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் பொறுப்பு வாய்ந்தவர்கள் தமிழ் மொழியை ஆதரிக்கத் தவறின் தமிழ் மக்கள் அவர்களோடு ஒத்துழையாமை அனுஷ்டிக்க நேரிடும்.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

மைசூர் இராஜ்யம் சென்னைப் பல்கலைக் கழகத்தாருடைய ஆதரவில் இருந்த காலமும் உண்டு. அக்காலத்தில் பல்கலைக் கழகத்தார் கன்னடத்தைப் பாராமுகம் செய்ததின் நிமித்தம் தமக்கென்று ஒரு சர்வகலா நிலையம் ஏற்படுத்திக் கொண்டு தம் தாய் மொழியைப் போற்றி வருவது நன்றாகத் தெரிந்த விஷயம். ஆந்திர தேசத்தாரும் தற்காலம் தமக்கு வேறாய் ஒரு பல்கலைக் கழகம் ஸ்தாபிக்க, வேண்டும் முயற்சிகள் எடுத்து வருவதையும் நாம் அறிவோம். கேரள தேசத்திலும் இதைப் போன்ற இயக்கம் நடந்து வருகிறது. கேரள தேசத்தாருக்கும் ஆந்திர தேசத்தாருக்கும் தம் தாய் பாஷையிலும் தம் தாய் பாஷையின் மேம்பாட்டிலும் தம் தேசக்கலையிலும், நாகரிகத்திலும் உள்ள அபிமானத்திலும் ஊக்கத்திலும் ஒரு பகுதியேனும் தமிழ் நாட்டிலுள்ள நமக்கு இல்லையென்பதை மறைக்கவோ மறுக்கவோ நம்மால் முடியாது. நமது பெருமைக் குறைவு நமக்கு இப்பொழுதாவது புலப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



கூடிய சீக்கிரத்தில் கட்டாயம் கேரளத்திலும் ஆந்திரத்திலும் பல் கலைக் கழகங்கள் ஸ்தாபனமாகும். ஆகவே கன்னடத்திற்கு மைசூரிலும், தெலுங்குக்கு ஆந்திரத்திலும் தனித்தனியே பல்கலைக் கழகங்கள் ஏற்படும்போது தமிழின் ஆதரவுக்கென்று சென்னைப் பல்கலைக் கழகமே எஞ்சி நிற்கும். அப்போதும் சென்னைப் பல் கலைக் கழகத்தார் தமிழை அனாதரவு செய்து கொண்டு போவார் களானால், தமிழ் மக்களாகிய நாம் நமக்கென்றும் நம் பாஷைக் கென்றும் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தாய் முடியும். ஏற்கனவே திருச்சியிலும் மதுரையிலும் முறையே ஒரு பல்கலைக் கழக ஸ்தாபனத்துக்கு வேண்டிய முயற்சிகள் நடந்து வருவதைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் கவனிக்க கடவர்.

இத்துடன், இதுவரையும் அவர்கள் தமிழுக்கு ஓர வஞ்சகமாய் செய்து வந்திருக்கும் அநீதிகளைத் திருத்த முயல்வார்களாக. தமிழ்மொழியில் உயர்தரப் பயிற்சிக்குப் பிரதிகூலமாகவே இது வரையிலும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வடமொழிக்கு காட் டியிருக்கும் ஆதரவு தமிழுக்கும் பெற உரிமை உண்டே; வட மொழி போன்றே தமிழும் உயர் தனிச் செம்மொழியாயிற்றே; தமிழில் ஆனர்ஸ் பரீட்சை ஏற்பட்டு இத்தனை வருஷக் காலமாயும் ஒருவரேனும் அப்பரிட்சைக்குச் சென்று தேறியிருக்கிறாரா? மருந் துக்காவது அபூர்வமாய் ஒரு மாணாக்கன் உண்டா? சமஸ்கிருதத் தில் பி. ஏ. பரீட்சைக்கோ ஆனர்ஸ் பரீட்சைக்கோ போகிறவன் பிறிதொரு பாஷையையும் சேர்த்துக் கட்டாயப் பாடமாய்ப் படிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்க, தமிழ்ப் படித்துப் பரீட்சைக்குப் போகிறவன் மாத்திரம் சமஸ்கிருதத்தையும் உப பாஷையாகப் படிக்க வேண்டும் என்று ஏற்பட்டிருப்பதில் என்ன புண்ணியமோ தெரியவில்லை. சமஸ்கிருதப் பரீட்சைக்குப் போகிற வன் ஏதேனும் ஒரு துறையில் இறங்கி அந்தத் துறையில் மாத்தி ரம் பரீட்சை கொடுத்து யம். ஏ. பரீட்சை மாத்திரமல்ல, சிரோன் மணி பரீட்சையும் பண்டிதமணி பரீட்சைகளும் கூடக் கொடுக்க லாம் என்று ஏற்பட்டிருப்பதுபோல, தமிழ் கற்கும் மாணவனும் அவ்விதம் தமிழ் நூல்களில் உள்ள சைவ சித்தாந்தம், இலக்கியம், இலக்கணம், மருத்துவம் முதலிய வெவ்வேறு துறைகளிலும் எதை யேனும் ஒன்றைச் செவ்வையாய்க் கற்று பரீட்சை கொடுத்துப் பட்டம் பெறலாம் என்ற ஏற்பாடு இல்லாதது ஏனோ? அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் என்னும் வாக்கு உண்மை யாய் இருப்பின் நாம் எத்தனையோ முறை பல மகாநாடுகளிலும் கூடித் தீர்மானித்து, கொய்யோ முறையோ வென்று நம் குறைபாடு களைச் சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கு முறையிட்டும் அவர்கள் நம் குறைகளை நீக்காததும் ஏனோ? கொடாத கண்

படிப்பகம்

www.padippakam.com



டரை விடாத கண்டராய் நாம் வற்புறுத்துவோமானால் நம் வேண்டுகோளுக்கு இசைவார்கள் என்று எண்ணுகிறேன். இசையாமல் போவார்களானால் முன்னையவிட அதிக ஊக்கம் எடுத்து நம் நலத்தை, நம் பாஷையை ஆதரிக்க வேண்டி நமக்கென்று ஒரு பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கவேண்டிய முயற்சி செய்யக் கடவோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார் நம் பாஷையிடத்துக் காட்டிவரும் ஊக்கக் குறைவுக்குச் சில ஆண்டுகளாக அவர்கள் தமிழ் அகராதி ஒன்று தொகுத்து வந்திருப்பதே போதிய சான்றாகும்.

## தன்கையே தனக்குதவி

இது தவிர, சென்னைச் சர்வகலா சங்கத்தார் வேறு விஷயங்களிலும் தமிழிடத்துப் பாராமுகமாய் இருந்துவருகிறார்கள். நம் முறையீடுகளை அவர்கள் இனிமேலும் நிராகரிந்து வருவார்களானால் நம் தாய்மொழியை நாமே பேண வேண்டும். பழையன கழிதலாய், புதியன புகுதலாய்க், காலக்கிரமத்தில் அவ்வப்போது தோன்றி மறைந்தவை நீங்கக் காலங்கண்ட காவியங்களின் மொத்தத் தொகை பூர்ணமாய் இன்னும் வரையறுக்கப்படவில்லை. காலஞ்சென்ற திரு. செல்வக்கேசவராய முதலியார் தாம் எழுதிய "தமிழ்" என்னும் வியாசத்தின் இறுதியில் தமிழ் நூல் ஜாப்தா ஒன்று சேர்த்துள்ளார். அதில் காணப்படாத பிற நூல்களும் இருக்கலாம். இதுவரையும் அச்சிடப்பட்டுள்ள காவியங்கள் சிலவேயாகும். இன்னும் ஏட்டுப் பிரதியில் உள்ள நூல்கள் பலவுள; அவைகளில் தள்ளத் தக்கவைகளைத் தள்ளி, கொள்ளத் தக்கவைகளைக் கொண்டு அச்சுப் பிரதிகள் ஆக்க வேண்டும். அச்சிடுவது கஷ்ட சாத்தியம் என்று பலர் சொல்லலாம். அச்சிடக் கால தாமதம் ஏற்படுவதாய் இருந்தாலும்கூட நாம் இப்பொழுதே ஆங்காங்கு சேமித்து வைத்திருக்கும் ஏடுகளைக் கடுதாசியில் எடுத்து எழுதிப் பத்திரம் பண்ணவேண்டும். கையில் எடுத்துப் பழகும் போதே ஒடிந்து போகும் ஏடுகள் பல இருக்கின்றன. இன்னும் காலம் கடந்து போனால் அவை எந்நிலை அடையுமோ தெரியாது. சில காலத்துக்கு முன் மதுரை சங்கத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த ஏடுகள் அநேகம் நெருப்புவாய்ப்பட்டு நீறாய்ப் போனது எவ்வளவு பரிதாபமான காரியம்! இதுவரையும் சித்தர் நூல்கள் சிலவே வந்திருக்கின்றன. வெளிவராத பல நூல்கள் ஏட்டுப் பிரதிகளாய் மதுரையில் சிலரிடம் குவிந்திருப்பதாய் அறிகிறோம். தஞ்சாவூர் சரஸ்வதி மாலிலும் தமிழ் ஏடுகள் சில உண்டு; காஞ்சி நாட்டில் சில புராதன குடும்பங்களில் ஏட்டுப் பிரதிகளாய் பல நூல்கள் இருப்பதாயும் கேள்வி. தமிழ் ஆராய்சி செய்யப்புகும் முன் இதுவரையும் வெளிவராத நூல்களை வெளியிடல் வேண்டும். பண்டைய நூல்

படிப்பகம்

www.padippakam.com



கள் வெளிவருந்தோறும் தமிழ் மொழியின் பழமையையும் சிறப்பையும் நிலை நிறுத்த ஏதுவாய் உள்ள பல உண்மைகள் ஆராய்ச்சி செய்வோருக்குத் தோன்றும். எகிப்து தேசத்தில் சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்துப் பாறைகளிலும் ஸ்தம்பங்களிலும் வெட்டப்பட்ட ஒருவிதப் பாஷையையும், இதர பிரதேசங்களில் காணப்பட்ட ஓர்வகை எழுத்துகளையும் கடுதாசியில் எடுத்தெழுதி ஆராய்ந்ததின் பயனால் அவைகளில் மறைந்து கிடந்த பொருள் எவ்விதம் வெளியாயிற்றோ அவ்விதமே நம் ஏடுகளுக்கும் காகிதப் பிரதிகளாய் அச்சிட்டால் அமைந்திருக்கும் உண்மைகளும் வெளியாகும். "தொல்காப்பி"யத்தை மேற்கோளாய்க் கொண்டு திரு மாணிக்க நாயகர் அவர்கள் எவ்விதம் தமிழ் எழுத்தின் ஒலி விசேஷத்தை வெளிப்படுத்தினார்களோ, அவ்விதமே தற்போது ஏட்டுப் பிரதிகளாய் இருக்கும் நூல்களில் நின்றும் அரிய விஷயங்கள் வெளிவர ஏதுவாய் இருக்கும். ஆகவே இவ்வித முயற்சியை நோக்கமாய்க் கொண்டு பண்டிதர்கள் கூடி ஆங்காங்கு ஆராய்ச்சிக் கழகங்கள் ஸ்தாபிக்க வேண்டும். கழகங்களின் முயற்சிகளை அப்போதைக்கப்போது பத்திரிகை மூலமாய் வெளியிட வேண்டும். தற்காலம் எவரெவர் என்னென்ன வேலை செய்து வருகிறார்கள் என்று அறிய முடியவில்லை.

## மதிப்புரையின் முக்கியம்

அத்துடன் நூதனமாய் வெளிவரும் நூல்களையும் ஆராய்ந்து, தள்ளத் தக்கவைகளைத் தள்ளி, கொள்ளத்தக்கவைகளை கொண்டு அவைகளுக்கு மதிப்புரைகள், எழுதி அப்பத்திரிகையின் மூலமாய், பொழுது போக்காய்ப் புத்தகங்களைப் பார்க்க விரும்பும் பலருக்கும் இன்னின்ன புத்தகங்களை தோஷமின்றிப் படிக்கலாம் என்றும் விளம்பரம் செய்ய வேண்டும். தற்காலம் ஏராளமாய் வந்து கொண்டிருக்கும் நவீன கட்டுரைகளைப் பார்த்தவர்களுக்கு இவ்வித ஏற்பாட்டின் இன்றியமையாமை தோன்றும். சினிமாப் படங்களைப் பரிசோதிக்கும் போர்டு போலவே நாவல்களைப் பரிசோதிக்கும் ஒரு போர்டு வேண்டும். சில வருஷங்களுக்கு முன் பண்டிதர்களும் பாமரரும் சிறுவரும் சிறுமியரும் படிக்கத்தக்க வசனப் புத்தகங்கள் இல்லையே என்று சிந்தித்தோம். இப்போதோ ஆபாசம் நிறைந்த கதைப் புத்தகங்கள் மலிந்து போயினவேயென்று விசனிக்கிறோம். திரு. செல்வ கேசவராய முதலியார் 1917-ம் வருஷத்தில் வெளியிட்ட 'வசனம்' என்னும் வியாசத்தில் 'கல்விமான்கள் பொழுது போக்காகப் படிக்கத்தக்க வசன நூல்கள் இன்னின்னவென எடுத்துச் சொல்வது நமக்கு குணம் தருவதாகும். சிறுவர் சிறுமிகளும், கூலியாள் வேலையாட்களும் படிக்கலான புத்தகங்கள்

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமானால் ஏதேனும் கிடைக்குமா எனப் புத்தகக் கடைகள் தோறும் சென்று கேட்டறிதல் வேண்டும்' என்று கூறியுள்ளார். சென்ற 18 வருஷக் காலத்துக்குள் வெளிவந்துள்ள வசன நூல்கள் மூவாயிரத்துக்கு மேலாகும். இவை மூவாயிரத்திலும் முப்பதே னும் தோஷங்கள் அற்றவையாய் ஆண்களும் பெண்களும் படிக்கக் கூடிய புத்தகங்கள் பொருக்கியெடுக்க கிடைக்குமென்பது சந்தேக மாகிவிட்டது.

ஆனால் இவை போன்ற கற்பனைக் கதைகளைப் பொது ஜனங் கள் ஆதரித்ததின் காரணத்தினால்தான் இவை எண்ணிறந்தன வாய்ப் பெருகிப் போயினவென்பது உண்மை. படிப்பவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவே எழுத்தாசிரியர்களும் இவ்விதப் புத்தகங் கள் எழுதினார்கள் எனலாம்.

## எழுத்தாசிரியர் பொறுப்பு

ஆனால் பொது ஜனங்கள் விருப்பங்களை நல்ல வழிகளில் திருப்பி விடுவதே எழுத்தாசிரியர்களின் கடமையாகும். எழுத்தா சிரியர்கள் ஜனங்களின் போதகாசிரியர்களும் ஆவது பற்றி அவர் களுக்குக் கணக்கற்ற பொறுப்புகள் உண்டு. நம்மைச் சுற்றி வசிக்கும் மனிதரின் இயக்கங்களில் நமக்கு இயற்கையால் ஏற்படும் பற்றினால்தான் நம் அனுபவத்தை அவருக்கு வெளியிடுகிறோம். **(இந்த இடத்தில் சில வரிகள் சிதைந்துள்ளன.)** மனிதரின் இயற்கை யைச் செம்மையாக்கி, அறிவை விளக்கி, ஆசாபாசங்களைச் சுத்தி கரித்து, இதயத்தை நல்லுணர்ச்சிகளுக்கும் நற்சிந்தனைகளுக்கும் உறைவிடமாக்கி, மனிதரை எவ்விதத்தும் இகத்தில் பாவமற்ற வாழ்க் கைக்கும் பரத்தில் மோட்ச சாம்ராஜ்யத்துக்கும் பாத்திரராக்கி விடு வதே எழுத்தாசிரியரின் கடமையாகும். இத்தகைய அரும்பெரும் கடமையை உற்றுணர்ந்து செவ்வனே செலுத்திய கிரந்த கர்த்தாக் களைக் கைவிரல்களில் எண்ணிவிடலாம்.

வசன நூல்கள் இயற்றப்பட்டுப் பலரிடையிலும் பரவிவரும் காலத்தில் தோஷங்கள் நிறைந்த புத்தகங்கள் மலிந்து வருமானால் அவைகளைப் படிப்பவர்களும், குளிக்கப் போனவன் சேற்றைப் பூசிக்கொண்டதைப்போல் ஆவார்கள். ஆதியில் வசன நூல் எழுத ஆரம்பித்தவர்கள் பலரும் படித்துப் பயன்பெறுமாறு நல்ல நோக்கத் துடனேயே எழுதினார்கள். முதல் முதல் வசனநடையில் கதை இயற்றியவர் 'பெஸ்கி' என்னும் பாதிரியார். அவர் செய்த "அவி வேக பரிபூரண குரு" கதையில் ஹாஸ்ய ரஸம் நிறைந்திருந்தும் வெறும் மனம் கூசாது படிக்கக் கூடியது. பின்னர் 19ஆம் நூற் றாண்டின் முற்பகுதியில் தாண்டவராய முதலியார் தொகுத்த "கதாமஞ்சரி"யும், மொழி பெயர்த்த "பஞ்ச தந்திர"க் கதையும்

படிப்பகம்

www.padippakam.com



இதோபதேசத்தையே முன்னோக்காய்க் கொண்டவை. 19வது நூற்றாண்டின் பிற்பகுதியில் வசன வழிகாட்டியாகிய ஸ்ரீ ஆறுமுக நாவலர் செய்த "பால பாடங்களும்" "பெரிய புராண வசன"மும் மக்களுக்கு நல்லறிவு புகட்டவே ஏற்பட்டவை.

### கற்பனைக் கதைகள்

1879-ல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை 'பிரதாப முதலியார் சரித்திரத்'தை வெளியிட்டார்.

இதுவே தமிழில் முதல் நவீன கட்டுக்கதை யெனப்படும். சமுதாய ஆசாரங்களைத் தழுவி, அவையில் நின்றும் சிறிதேனும் விலகாமல், நடந்ததாயும் நடக்கத்தக்கதாயும் உள்ள நிகழ்ச்சிகளை கைக்கொண்டு, இன்னும் படிக்கலாம், பின்னும் படிக்கலாம்; என்று தோன்ற இந்தக் கற்பிதக் கதையை எழுதி முடித்தார். பண்டிதருக்கும் பாமரருக்கும் இன்பம் அளிக்கத்தக்கது. பிரபஞ்ச வாழ்க்கையை முந்நூற்றுச் சில்லரைப் பக்கங்கள் அடங்கிய ஒரு புத்தகத்தில் அமைத்துள்ளார். சிறுவரும் படித்துக் களிக்கலாம். பெரியவரும் படித்து அதில் அடங்கியிருக்கும் பல ஆழ்ந்த கருத்துக்களை சிந்திக்கலாம்; பெண்கள் படிக்கலாம்; ஆண்கள் படிக்கலாம்; குழந்தைகள் படிக்கலாம். பெற்றவர் படிக்கலாம். இதற்கு நிகரான கற்பனைக் கதை ஒன்று இதுவரையும் கண்டதில்லை. இவர் "சுகுணசுந்தரி" என்ற வேறொரு நவீனம் எழுதியிருப்பினும், இந்நூல் பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு இரண்டாவதாகவே சொல்லக் கூடும்.

இவருக்குப்பின் இராஜமய்யரால் எழுதப்பட்ட "கமலாம்பாள் சரித்திரமும்" சமுதாய ஆசாரங்களைத் தழுவியே எழுதப்பட்டுள்ளது. இதிலும் ஒரு குடும்ப வரலாறும், இல்லற வாழ்க்கையில் தோன்றும் இன்பங்களும் துன்பங்களும் காணலாம். முத்துசாமி அய்யர் என்னும் கதாநாயகர் தன் இல்லற வாழ்க்கையில் அடைந்த நற்பயனையும் காலக்கேட்டின் பலனாக அவருக்குண்டான லௌகீக விரக்தியும் மெய்ஞானமும் படிக்குந்தோறும் ஒவ்வொருவருக்கும் நல்லறிவு புகட்டுகிறது. தவிர பிராமணத் தமிழ் என்று சொல்லப்படும் மொழி திரிபின் வியாபகத்தை இந்நூலில் முற்றிலும் காணலாம்.

ஏறக்குறைய அதே காலத்து குருமலை சுந்தரம் பிள்ளையால் எழுதப்பட்ட "பொற்றொடி"யும் உண்மை நிகழ்ச்சியை ஒட்டி நிற்கிறது. அவர் காலத்து நடந்த ஒரு யதார்த்த சம்பவத்தையே அவர் கற்பனாலங்காரமாய் எழுதிச் சமுதாயச் சீர்குலைவைக் கண்டித்தார் என்றும், சில கட்சியார் அதனால் மான நஷ்டிக்காக அவர் மேல் வழக்குத் தொடுத்து அவரைத் தொந்தரவு செய்தார்கள் என்றும் கேட்கிறோம். பணம் பற்றி மணமா? குணம் பற்றி மணமா

படிப்பகம்

www.padippakam.com



என்னும் விஷயத்தை ஆராய்ந்து முடிவில் குணம் பற்றியே மணம் என்று நிலைநிறுத்தியிருக்கிறார்.

இவருக்குப் பின் தோன்றிய எழுத்தாசிரியர்கள் எண்ணிறந்தவர். அவர்கள் எழுதியிருக்கும் கற்பனைக் கதைகளும் ஆயிரக் கணக்காகும். அவைகளை ஆராயப் புகின் விரியும். ஆதலால் சுருக்கத்தில் சொல்லுமிடத்து பெருங்குளம் மாதவய்யா, இரங்கோன் பொன்னுசுவாமி பிள்ளை முதலிய சிலர் எழுதின கற்பனைக் கதைகளையே தமிழ்நாட்டு இயல்பையும், நடையுடை பாவனைகளையும் தழுவி உள்ளனவாய்ச் சொல்லலாம். சமுதாயச் சீர்திருத்தத்திற்கு கற்பனைக் கதையை இன்றியமையாத கருவிஎன்று நன்குணர்ந்தவர்கள் இவர்களே ஆவர். இவர் போன்ற தெலுங்கில் முதல் நாவலரான "ராஜசேகர சரித்திர"த்தை எழுதின வீரேசலிங்கம் பந்துலுவும், மலையாளத்தில் முதல் நாவலரான "இந்து லேகா"வை எழுதின சந்து மேனனும் கற்பனைக் கதைகளின் மூலமாகவே சமுதாயத்தைச் சீர்திருத்த முயன்றார்கள். இவர்கள் எல்லோரும் தம் வாழ்க்கை அனுபவங்களை குருகத் திரட்டி கதையாய் அமைத்துள்ளார். இவர்கள் இயற்றிய நூல்களே என்றும் நின்று உதவும் ஆற்றல் வாய்ந்தவை.

இவை ஒழிய இதர நாவல்கள் எல்லாம் காலக்கிரமத்தில் அழிந்துபடும் என்பது திண்ணம். இப்போதொன்றிரண்டு வருஷங்களாய் கதை படிப்போருக்கும் ஊக்கம் குறைந்து வருகிறது. கதைகள் எழுதுவோரையும் அதிகம் காணோம். இதுவே தக்க சமயம். நீங்களே வேண்டிய ஏற்பாடு செய்யத்தக்க வல்லவர்கள். இதுவரையும் வெளிவந்துள்ள கற்பனைகளை ஆராய்ந்து அவை ஒவ்வொன்றின் மதிப்பையும் அளந்து தள்ளத் தக்கவைகளைத் தள்ளி கொள்ளத் தக்கவைகளைக் கொள்ள வேண்டும். இனிமேலும் வல்லின இடையின நகர பேதம் அறியாத அறிவிலிகளுக்கு நல்லஅனுபவம் இல்லாத, வேலையற்று வீண் கதைகள் எழுதுவோரை தலையெடுக்கவொட்டாது தடுக்க வேண்டும்.

### பண்டிதர்களுக்கு வேண்டுகோள்

உங்களிடம் எனக்கு இன்னும் ஒரு வேண்டுகோள் இருக்கிறது. மாணவர்களுக்குத் தமிழ் அபிமானம் தற்சமயம் குறைந்து போய் விட்டது என்பதற்கு ஐயமில்லை. இதற்கு தமிழ்ப் பண்டிதர்களே காரணம் என்று சிலர் சொல்லுகிறார்கள். அவ்வித அவதூறுக்கு இடமில்லாமல் தமிழில் தேர்ச்சி பெற விரும்பும் சிறுவர்களை உங்களால் இயன்றவரை ஊக்கப்படுத்த வேண்டும். எப். ஏ., பி.ஏ. பரீட்சைக்குத் தமிழை விசேஷ பாடமாய் எடுத்தும், பரீட்சை கொடுக்கும் மாணவர்க்கு எவர்க்கேனும் முதல் வகுப்பில் தேறிய

படிப்பகம்

www.padippakam.com



தரகப் பட்டம் கிடைத்திருக்கிறதா என்பது சந்தேகம். அவ்விதம் தேறினவர் இருப்பினும் அவர் மிகக் குறைந்தவரேயாவர். அவர்க்கும் தமிழில் விசேஷப் பற்றும் ஞானமும் இருந்ததினாலேயே வேறு பாடம் எடுக்காது தமிழைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். விசேஷ அக்கறையுடனேயே தமிழைப் படித்து வருகிறார்கள். இருந்தாலும் அவர்கள் முதல் வகுப்பில் தேற முடியாதிருப்பின் அது அவர்களுடைய போதகாசிரியர்களுக்கும் பெருங் கணக்காயர்களுக்குமே குறைவு. பரீட்சையில் எவ்வளவு சிறப்பாய் விடை எழுதினாலும் பண்டிதர்கள் அவர்களுக்கு முதல் வகுப்புக்கு வேண்டிய அம்சங்கள் அளிக்க மனம் கொள்கிறார்களில்லை என்று கேள்விப் படுகிறோம். இதில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்பதை நீங்களே அறிவீர்கள். முதல் தரத்தில் தேறதக்க விதத்தில் மாணக்கர்களைப் பயிற்றுவிக்காவிட்டால் பண்டிதர்களுக்கே பெருங் குறைவு. இதை நீங்கள் நன்கு உணர வேண்டும்.

இன்னும் ஒன்று. மாணவர்களுக்கு இளம் பிராயத்தில் தானே, தன் யூகமாய் ஏதேனும் செய்யுள் இயற்றவோ, வசன காவியங்கள் எழுதவோ உணர்ச்சி ஏற்படுவது இயல்பு. அவ்விதம் ஏற்பட்டு அவர்கள் ஏதாவது இயற்றி, அவர்களுக்கு ஆசிரியர்களாகிய உங்களிடத்தில் கொண்டு வந்து காட்டினால், குற்றங் குறைவுகளைப் பெரிதாய்ப் பாராட்டாது சிறப்பைக் கொண்டாடி அவர்களுக்கு ஊக்கம் ஊட்டக் கடவீர்கள். அவ் இளம் பயிர்கள் முளையில் கருகினால் முற்றும் கருகிவிடுவார்கள். மிகவும் ரோஷக்காரர்கள். இளம் பிராயத்தில் அவர்களுக்குத் தோன்றும் ஆவல்களை ஒழித்து விடாதீர்கள். அவர்கள் மனக் கோட்டைகளை இடித்து விடாதீர்கள். கற்பனா சக்தியும் கவிதா சக்தியும் இளம் வயதிலேயே தலை காட்டும். அதைப் போற்றிக் காப்பாற்றுவது உங்கள் கடமை. பிறர் எழுதிய நூல்களைக் கற்று நெட்டுருச்செய்து உலகம் ஒப்ப உயர்தரப் பட்டங்கள் பெறுகிறவனைவிட, தானாய், தன் யூகமாய் சுயமாய் தன் அனுபவத்துக்குத் தோன்றும் கருத்துகள் அமைந்து, சொல்வன்மையுடன் ஒரு செய்யுள் இயற்றுகிறவனே சிறந்த புண்ணியவான். அவ்விதம் மெய்யுணர்வும், தீர்க்க தரிசன வாய்ந்தவர் மூலமாகவே சமுதாயம் சிறக்க வேண்டும்; நாடு முன்னேற வேண்டும்; அவர்களே அஞ்ஞான இருள் நிறைந்த இந்தப் ப்ரபஞ்ச சாகரத்தில் கரை காணாது தத்தளிப்பவருக்கு ஒளி காட்டும் தீபஸ்தம்பம் போன்றவர்கள். அவர்கள் ஒளியை மழுக்கி விடாதீர்கள். இதுவே என் வேண்டுகோள். நீங்களும் என் வேண்டுகோளுக்கு இசைந்து, உங்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கும் சிறுவரும் சிறுமியரும் தேவகா சின்னங்கள் எனக் கருதி, அவர்களுடைய தெய்வீக குணங்களை வளர்பிறைச் சந்திரன்போல் மேன்மேலும் வளர்க்குமாறு உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ●

படிப்பகம்

www.padippakam.com

### சுப. வீர பாண்டியன், பெ. மணியரசன் கைது

# கருத்துரிமை மீதான தாக்குதல்

—இன்குலாப்

19-11-96 அன்று பாட்டாளி மக்கள் கட்சி ஈழத்தமிழர் பாது காப்பு மாநாடு ஒன்றை நடத்தியது. அதில் கலந்து கொண்டு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாய்ப் பேசிய தோழர் சுப. வீரபாண்டியனும் பெ. மணியரசனும் தமிழக அரசால் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு இப்போது விடுதலை செய்யப்பட்டிருக் கிறார்கள்.

ஈழத் தமிழர்களுக்கும், ஈழத்தமிழ்ப் போராளிகளுக்கும் ஆதர வாகப் பேசுவதே குற்றம் என்று பார்ப்பனியச் சிந்தனை வட்டங்கள் ஒரு கருத்தைப் பரப்பி வருகின்றன. ராவ் மாறி கௌடா வந்தா லும் இன்று ஆதிக்கத்தில் இருப்பது பார்ப்பனியமே என்பதைத் தான் தமிழகத்தில் நிகழ்ந்த இக்கைதுகள் மெய்ப்பிக்கின்றன. எந்த வகையிலும் பெயர் சுட்டுவதற்குத் தகுதியற்ற சோ போன்ற வர்கள்தாம் ஆதிக்கத்திலிருக்கும் பார்ப்பனியத்துக்குத் தமிழகத் தின் முகவர்களாக (ஏஜண்டுகளாக) இருக்கிறார்கள். புலிகள் ஆதரவு என்பதனால் மட்டும் தோழர்கள் கைது செய்யப்பட வில்லை. சோவை எதிர்க்கிறார் என்பதாலும் கைது செய்யப்படு கிறார்கள். பெரியாரின் தன்மான மரபினர் என்று பீற்றிக் கொள்ளுபவர்கள்தாம் தமிழக ஆட்சிக் கட்டிலில் இருக்கிறார்கள். ஆட்டுவிக்கும் (பூ) நூல் சோ போன்றவர்களின் கையிலிருக்கிறது.

இந்திய ஆதிக்கத்தையும், அதன் மூலம் பார்ப்பனிய நலன்க ளையும் பேணுவதில் குறியாய் இருக்கும் 'ரா' (RAW) என்ற உளவு நிறுவனம் புலிகள் மீது ஆதாரமற்ற பழிகளைப் பரப்பி வருகிறது. அதற்கு துக்ளக், இந்து, தினமலர் போன்ற பார்ப்பனிய நிறுவனங் கள் ஊது குழல்களாகப் பயன்படுகின்றன. ஈழத் தமிழர்களுக்குக் கேடயமாக இருந்து போராடிவரும் புலிகளை நியாயமான வரலாற் றுத் தேவையினால் ஆதரிக்கும் தமிழ் உணர்வாளர்களைக் கொச்சைப்படுத்தும் வேலையை இப்பத்திரிகைகள் செய்கின்றன.

பா. ம. க. மாநாட்டில் சுப. வீரபாண்டியனும், பெ. மணியரச னும் இன்னும் பல தமிழ் உணர்வாளர்களும் பேசிய பேச்சின் சில பகுதிகளை, இந்த உளவு நிறுவனம் (RAW), துக்ளக் போன்ற பத் திரிகைகளுக்கு வழங்கி வெளியிடச் செய்கிறது. துக்ளக்கும் வெளி யிடுவதுடன் இவ்வாறு பேசுவோரைக் கைது செய்யவேண்டும் என்ற கருத்தை 'மக்கள்' கருத்தாக உருவாக்குகிறது. தனது ஆட்சியைத்

படிப்பகம்

www.padippakam.com



தவிர வேறு எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாத தமிழக அரசு, இந்தப் பூச்சாண்டிகளுக்கு மருண்டு கைதுகள் செய்து, தன்னைக் காத்துக்கொண்டுவிட்டதாக நினைத்துக் கொள்கிறது.

தி. மு. க. அரசுக்கு இந்தப் பிரச்சினையின் மீது முக்கியமான அக்கறை இருக்குமேயானல், இதுபோன்ற காய் நகர்த்தும் பணிகளைக் கைவிட்டுவிட வேண்டும். இந்திய அரசை, தமிழக மக்களின் நியாயமான உணர்வுகளைப் புரிந்து கொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும். அதற்கு முதற்கட்ட நடவடிக்கை புலிகள் மீதுள்ள தடையை நீக்ககக் கோருவதே. ஸ்ரீலங்கா அரசே தடை செய்யாத தமிழீழ விடுதலைப் புலிகளை இந்திய அரசு தடை செய்ததும், அதற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்ததும், இந்தப் பிரச்சினை மீது கொண்டுள்ள உண்மையான ஈடுபாட்டுக்கு அடையாளமாகாது. அல்லது இதுபோன்ற கைது மிரட்டல்களால் உண்மையின் குரல் ஒடுங்கியும் விடாது.

இப்படிப்பட்ட கைது நடவடிக்கை, கருத்துரிமை மீது தொடுக்கப்பட்ட அப்பட்டமான தாக்குதல். இதை உலக மனித உரிமை அமைப்புகள் கவனித்துக் கொண்டு இருக்கின்றன. ●

# காந்தியாரின் ஸ்ரீமத் பகவத் கீதை

**அண்மையில் நற்சிந்தனையாளர் மா.அர்த்தனாரி அவர்களைச் சந்தித்தபோது, அவர் சேகரிப்பில் கே. சந்தானத்தால் தமிழாக்கம் செய்யப்பட்ட காந்தியாரின் 'ஸ்ரீமத் பகவத் கீதை நூலைக் கண்டேன். பிரித்ததும், நூலின் கட்டுத்தாள்களில் அதைப் படித்ததன் எதிர்வினையை 27-8-91 நாளிட்டுக் கீழ்க் கண்டவாறு எழுதி வைத்திருந்தார்: —ஆர்.**

"

காந்தியாருடைய கீதைக்குள்ளே நாம் சென்று பார்த்தவரை உயிர் என்றால் என்ன, உடல் என்றால் என்ன, ஆன்மா என்றால் என்ன என்பதற்கு விளக்கம் அறவே இல்லாததோடு, மேலும் மேலும் குழப்புவதற்கு ஏராளமான செய்திகள் இருக்கின்றன.

இறைவன்- அல்லதுபகவான்- அல்லது ஏதோ ஒன்று- அல்லது ஏதோ ஒரு அதீதமான சக்தி- உண்டாக்குவது உடலையா? உயி

படிப்பகம்

www.padippakam.com



ரையா? அல்லது பெரும் குழப்பத்திலிருந்து முகிழ்த்தெழுகிற ஆன்மாவையா? உண்டாக்குவதா? தானே உண்டாவதா? பரிணாம வளர்ச்சியா? அல்லது படைப்பின் தொடர்ச்சியா? என்பதை காந்தி யாராலும் நமக்குப் புரிந்து கொள்ளும் அளவிற்குக் காட்டமுடிய வில்லை.

குழந்தைகளுக்கு மிட்டாய்களைக் கொடுத்து நகைகளைப் பிடுங்குகிற நடைமுறை மாதிரியில் காந்தியாரின் கீதையின் ஆய்வு நூல் முழுவதும் காணப்படுகின்றன.

சின்ன சின்ன ஆசைகளை—அதுவும் உயிர் வாழ்வதற்கும் நல்லது கெட்டதைப் பேசுவதற்கும் மனிதர்களிடம் இயல்பாக உண்டாகும் ஆசைகளை விட்டுவிட்டால், என்றென்றைக்கும் ஆண்டவனோடு ஆனந்த மயமாக இருக்கலாம் என்கின்ற பேராசையைப் பக்கத்திற்குப் பக்கம் வரிக்கு வரி தூண்டிக்கொண்டே இருப்பது தான் கீதை என்று நினைக்கத் தூண்டுகிறது.

பேராசையைப் பூர்த்தி செய்து கொள்ள சின்ன சின்ன ஆசையைத் துறந்து விடு என்பதை காந்தியாரும் சொல்லத் தவறவில்லை.

மனிதர்கள் உண்பதால் மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டிருக்க முடிகிறது என்கின்ற நிலை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் வேலை செய்ய வேண்டிய அவசியமே உண்டாகி இருக்காது. இந்த உலகத்தில் யாரும் வேலை செய்யவில்லை என்றால் கீதையில் கர்ம காண்டமே உண்டாகி இருக்காது. கர்ம வினையே இல்லை என்றால் கீதையே தோன்றி இருக்காது. அதைப் பற்றி நினைக்கக்கூட ஆள் இருக்காது.

வேலை செய்கிறவர்களை அதன் பலனை அடைய முடியாமல் தடுப்பதற்குண்டானதுதானே கீதையில் கர்ம காண்டம்— கர்ம வினை என்பதெல்லாம்.

கீதையை காந்தியார் எடுத்துக் கொண்டதின் மூலம் தன் பொன்னான நல்ல காலத்தை வீணடித்தது மட்டுமல்லாமல், தன்னை மனமாற நேசிக்கிற பொது நல ஊழியர்களின் நேரங்களையும் சுய முயற்சிகளையும் வீணடித்துவிட்டார். இது இன்றைக்கு நமது நாட்டில் எத்தகைய கேடுகளை உண்டாக்கி— அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது என்பதை நினைக்கச் சங்கடமாக இருக்கிறது.

காந்தியாரைச் சுட்டுக் கொன்றவர்களுக்கும் உதவுவது நமது நாட்டு மக்களை நான்கு வர்ணங்களாகப் பிரித்து நாசமாக்கிய கீதைதானே!

சாகாவரம் பெற்றதாகச் சொல்லப்படும் மேனாட்டான் ஒருவன் என்னைச் சாகடி என்று கடவுளிடம் கெஞ்சிய காட்சியும், 'சாகா

படிப்பகம்

www.padippakam.com



வரம் தா ஈஸ்வரா' என்று காந்தியார் போன்றவர்களெல்லாம் கேட்கிற காட்சியும் காந்தியாரின் கீதையைப் படிக்கும் போது நமது நெஞ்சில் நிழலாடுகின்றன.

கீதையும் காந்தியாரும் உண்டான இந்த மண்ணில்தான் இன்றைக்கு ஆசை உப்பி வீங்கி வெடிக்கும் நிலைக்கு வந்திருப்பதை நினைக்க வேதனையாக இருக்கிறது. கீதையை நெஞ்சிலே வைத்திருக்கும் பார்ப்பனர்கள் தூங்குகிறவர்கள் விழித்துக் கொள்ளுகிற வரையிலும் கயிறு திரிப்பது என்கின்ற முடிவிற்கு வந்து முடிந்த மட்டும் கயிறு திரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

1. கீதையில் நான் — நான் என்பது வியாசரா? வியாசரால் உண்டாக்கப்பட்ட கிருஷ்ணனா?

2. கீதையைப் படித்து புரிந்து கொண்ட மனிதனுக்கு நான் என்கிற அகங்காரம் வருமா? அடங்குமா?

3. எல்லாம் நானே - அதுவும் நானே — இதுவும் நானே — எதுவும் நானே என்று அத்வைத பாவனையில் சொல்லும் கிருஷ்ணன் அடிக்கடி அவர் சொன்னார், இவர் சொன்னார், கேள் அர்ஜுனா என்று சொல்லுவது, தனக்கப்பால் எதுவுமே இல்லை என்று சொன்னதைப் பொய்யாக்கவில்லையா?

4. குடி — சூத்தி — கொள்ளை - கொலை — விபச்சாரம் — கற்பழித்தல் திருடுதல் தீ வைத்தல் போன்ற காரியங்களை எதற்காகப் படைத்தார் என்பதை பகவான் கீதையில் எங்கேயும் விளக்கவில்லை.

5. வேண்டாம் என்றால், தன்னுள் இருக்கும் பிரபஞ்சத்தை ஒரு நொடியில் இயங்காமல் செய்துவிடும் சக்தியை வைத்துக் கொண்டிருக்கும் பகவான், எதற்காக வர்ண பேதங்கள் நான்கையும் படைத்து, அவன் அப்படிச் செய்ய வேண்டும், இவன் இப்படிச் செய்ய வேண்டும் என்று ஓயாமல் மூக்கைச் சிந்திக் கொண்டிருக்க வேண்டும்? இவை எல்லாம் பகவானையும் மீறி என்னென்னமோ நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டவில்லையா?

**— மா. அர்த்தனாரி**

"

**காந்தியார் முன்னுரையிலிருந்து:—**

"கீதையை முதன் முதலாக 1888-'89ஆம் வருஷத்தில் நான் படித்தபொழுதே அது ஒரு சரித்திர நூல் அல்ல என்றும் மனிதனுடைய உள்ளத்தில் இடைவிடாமல் நடக்கும் அறப்போர் அதில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது என்றும் எனக்குப் பட்டது... கிருஷ்ண பகவான் கற்பனை நாயகன்.

படிப்பகம்

www.padippakam.com



24ஆம் பக்கத் தொடர்ச்சி—

தாக இருக்கும். மேலும், ஒருவனுக்கு மத அடிப்படைவாதம் ஒரு மனோபாவமா அல்லது மந்தைக் கோஷமா என்பது முக்கியக் கேள்வியாகிறது. மனோபாவத்துக்குக் குரலெடுத்துக் கத்துவது அற்பமான – குவியம் கலைக்கும் விஷயமாகிவிடும். அப்படி அல்லாமல் வேறென்ன புதுக் கருதுகோளில் மையம் கொண்டுவிட்டார்– அவ்வமைப்புகளின் சித்தாந்தங்களை இன்னும் நவீனப்படுத்தி உள்வாங்கிக்கொண்டதைத் தவிர? இவரைப் போலவே மார்க்சிய எழுத்தாளர்கள் சிலரும் தங்கள் சுதந்திரம் காக்க கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து வெளியேறியதுண்டு. மற்றபடி அவர்கள் மார்க்சியப் பார்வையுள்ளவர்களாகவே, மார்க்சியத்தை வளர்த்தெடுத்து இந்திய சமூகக் கட்டமைப்புக்குள் தகவமைத்துக் கொள்கிறவர்களாகவே பெரும்பாலும் இருக்கிறார்கள். உண்மையில் பொதுவுடமைக் கட்சிகள் தமிழகத்திற்குச் செய்ததைவிட மார்க்சிய எழுத்தாளர்கள் தமிழ் இலக்கியத்திற்குச் செய்ததுதான் பளிச்சென்று புலப்படுகிறது.

ஜெயமோகன் முற்போக்கு எழுத்தாளர்களைப் பற்றிச் சொல்லும் போது, "முற்போக்கு விஷயங்கள் அசட்டுத்தனமாயிருந்தாலும் அந்த அசட்டுத்தனத்திலும் உண்மையைச் சொல்றாங்கனு நெனச்சேன்," என்கிறார். முற்போக்கு விஷயங்கள் யாருக்கு அசட்டுத்தனமாயிருக்கும்? அதை மனங்கொள்ள மறுக்கிற அடிப்படைவாதியின் கலாச்சாரத்திற்கு இதனினும் அழுத்தமாய் நிறம் எங்கு தேட?

"இலக்கியத்தில் கோஷம் போடுறது தப்புங்கறதை சொல்றதுல எனக்கு தயக்கம் கிடையாது," என்கிறார். உண்பதும் புணர்வதுமான நிகழ்வுகள் கோஷங்களற்ற இலக்கியங்களாகலாம். ஆனால் உண்பதற்கும் புணர்வதற்கும் மறுக்கப்பட்டவனின் போராட்டங்கள் கோஷங்களோடுதான் நிகழ்கின்றன. ஒரு சமத்துவ சமுதாயத்தில் கோஷங்களற்ற இலக்கியங்கள், மனப்படிமங்களின் கடைவிரித்தலுக்கான 'தன்னுலகு' இலக்கியங்கள் உருவாகலாம். பசித்த மானுடம் கோஷமற்றுச் சாகவேண்டும் என்பதுதான் மத அடிப்படைவாதத்தில் சொர்க்கம் செல்வதற்கான நிபந்தனை.

இலக்கியம் பற்றிய ஜெயமோகனின் பல கோட்பாடுகளில் "இலக்கியம் தன்னளவில் முழுமை கொண்ட மெய்காண்

படிப்பகம்

www.padippakam.com



முறை'' என்பது இடது சாரிகளுக்கான அறிவுரை. அதாவது இலக்கியம் சுய மைதுனம் மாதிரி தன்னளவில் சுகம் காண் முறையாக ஜெயமோகனுக்கு ஆகலாம். இடதுசாரிகளுக்கு, வேறெந்த இயல்சாரிகளுக்கும் இருவர் பகிர்ந்து கொள்ளும் கலவி இன்பமாகலாம். மேலும், இந்த மெய், முழுமை, சத்தியம், ஒழுக்கம் என்பதெல்லாம் என்ன? அடிப்படைவாதிகள் அடிக்கடி மிரட்டலோடு பயன்படுத்தும் சொற்கள்—வெற்றுச் சொற்கள். தன்னளவில் பொருளற்றவை. சார்நிலைப் பொருள் மட்டுமே கொண்டவை. திரௌபதிக்கு ஐவரோடு நிற்பதே ஒழுக்கம்; குந்திக்கு கர்ணனை நிராகரிப்பதே ஒழுக்கம்; பசித்தவனுக்கு சோற்றுப் பருக்கையே சத்தியம். ஜெயமோகனுக்கும் அப்படித்தான். ஆன்மிகமும் ஒரு சார்புதான்.

சார்பற்றவனாகவும் அரசியல் அற்றவனாகவும் ஒருவன் இருக்கக்கூடும் எனில் அவனுக்குப் பெயர்தான் பொறுக்கி — அழிவின் சின்னம்.

"எனக்கு இன்குலாப் எழுதின ஒரு வரிகூட கவிதைன்னு தோனுனது இல்ல,'' என்கிறார் ஜெயமோகன். வெகுகாலமாக இதை மட்டும் மாற்றாமல் சொல்லிவருகிறார். 'எனக்கு ஜெயமோகனின் இருப்பு ஒரு பாழ்' என்று ஒருவன் சொன்னால் அவர் அதை எப்படி ஒதுக்கிவிடலாமோ, அப்படியே இன்குலாபும் ஒதுக்கிவிட்டார் என்றே படுகிறது. ஒருவன் என்னவாக இருக்கிறானோ அன்னவனாகவும், எதனால் பாதிக்கப்படுகிறானோ அதன் பாதிப்பாகவும்தான் வெளிப்படுவான். இன்குலாப் அப்படித்தான் வெளிப்படுகிறார். வேறாய் வெளிப்படல் என்பது வெறும் கற்பிதம்தான்.

பார்ப்பன எதிர்ப்பின்
தன்மானம் உணரப்
பறையனாய் இருந்து பார்.

இன்குலாபின் இந்த வரிகள் ஜெயமோகனின் அழகியலை மீட்டி என்ன ஆகப்போகிறது? ஜெயமோகனுக்கு கவிதை அவசியத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாகும்போது, இன்குலாபுக்கு அவசியம் இல்லையெனில் கவிதையும் அப்பாற்பட்டதுதான். கூடுதலாக இன்குலாப் பற்றி, "நான் இலக்கியத்தை எப்படி நினைக்கிறேனோ அவரும் அப்படித்தான் நினைக்கிறாரு'', என்கிறார். அப்படியானால் படைக்கும் போதுமட்டும் அவர் ஒவ்வாமைக்குத் தாவிவிடுகிறார் என்றாகிறது. இது

படிப்பகம்

www.padippakam.com



அபத்தம். அவர் இலக்கியத்தை எப்படி நினைக்கிறாரோ அப்படித்தான் படைக்கிறார். அதை அவர் ஒருநாளும் ஒரு அடிப்படைவாதியின் அழகியல் கண்ணோட்டத்தில், இரவெல்லாம் உறவல்லாத ஒருத்தியோடு வேசையாடிவிட்டு — விடிகாலை தன் மனைவி தொட்டுக் கும்பிட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளக் காலைக் காட்டும் ஒழுக்கவாதியின் பார்வையில் பார்த்ததில்லை. இது ஜெயமோகன் அவர் மீது அறிந்தே சுமத்தும் அவதூறு. ஆனால் ஜெயமோகன் இதைத்தான் விமர்சனம் என்ற பெயரில், மானுடச் சமநிலை விழையும் பலரையும் தன் அகந்தையால் உரைத்துப் பார்க்கிறார்.

இந்தியப் பாரம்பரியம், கலாச்சாரம், சமூகக் கட்டுமானம், ஒழுக்கம் சார்ந்த மதிப்பீடுகள் பற்றியெல்லாம் ஒரு புனிதப் படிமத்தைத் தன் ஆழ்மனத்தில் பொதிந்து கொண்டுள்ள ஜெயமோகன் எழுத்தில் மட்டும் மரபிகந்த இறக்குமதிக் கோட்பாடுகளுக்கே முலாம் பூசிப் பார்க்கிறார். ஒரு வேளை உலகத்தையே ஊடுருவி, அதன் போக்கில் உடைப்பு உண்டாக்கித் தன் ஒழுக்க மதிப்பீடுகளை நிலைநாட்டும் அடிப்படை வாதத்தின் ஒரு உத்தியாயிருக்கலாம். இந்த மண்ணுக்கே உரியதான கதை சொல்லி மரபு பற்றி அவருக்கு மரியாதையான புரிதல் இல்லை. இந்தக் கதை சொல்லி மரபு ஒப்பீட்டில் கருப்பின் மக்களின் கதை சொல்லி மரபுக்கு இணையானது. இந்த மரபைத்தான் ராஜநாராயணன் கையாள்கிறார். கதை சொல்லி மரபின் ஊடகம் எப்போதும் மக்கள் மொழிதான். Magical Realism என்று பெயர் வைக்கும் முன்பே அது இந்தியக் கதை மரபில் ஆழ வேர் ஊன்றியது. அதில் ஆழ் மனம் வெளிப்படாது என்பது ஜெயமோகனின் கண்டுபிடிப்பாயிருக்கலாம். அது ஆழ் மனத்தின் உள் மனத்தையும் போகிற போக்கில் புதுப்புதுப் படிமங்களில் உதிர்த்துவிட்டுப் போகும். ஒருவேளை அதில் ‘ஆன்மிகம்’ என்னும் அலங்காரம் புனைவுறாமல் இருக்கலாம். ஆனால் உயிர்த்திருக்கும்.

இதில் ஜெயமோகனுக்குள்ள வில்லங்கம் என்னவெனில்: ‘மக்கள் மொழி என்பது வெறும் தொடர்பு மொழிதான். இலக்கிய மொழி அல்ல. இலக்கிய மொழி என்பது மேல் தட்டு மொழி. மனத்தயாரிப்புக்கான மொழி. ஆன்மிகப் பூச்சில் மனிதர்களைப் படி நிலைப்படுத்தும் மதத் தாயரிப்பு

படிப்பகம்

www.padippakam.com



மொழி. பாவ புண்ணியங்களை, வரம் சாபங்களை, சொர்க்கம் நரகங்களை, பைசாசம் தெய்விகங்களை உள்வாங்கிக் கரந்து கொள்ளும் மொழி.' ஆகவே, "எழுத்துன்றது மக்களுக்கானது கிடையாது. சுத்தமா மனத்தயாரிப்பே இல்லாதவுங்ககிட்ட எழுத்து ஒன்னுமே செய்யறதில்ல. தமிழ்ச் சமூகத்தில் மொத்தமே பத்தாயிரம் பேருக்குத்தான் எழுதப்படுது" என்று ஜெயமோகன் நிறுவுகிறார். அதாவது 'இந்தப் பத்தாயிரம் — ஒன்றிரண்டு கூடக் குறைய — எப்போதும் நிரந்தரம். அந்த வட்டத்துக்குள் பொதுமைச் சமூக மக்கள் வர முடியாது. மதம் அனுமதிக்காது. 'எல்லாருக்கும் கல்வி. எல்லாரும் சமம்' என்பது ஒரு கற்பனா லோகத்தின் அரசியல் கோஷம்தான். வரப்போவதில்லை. வரவிடப்போவதில்லை. இப்படியான மனத் தயாரிப்புக்குத்தான் Spiritual காயகல்பமாக இலக்கியம் தயாரிக்கப்படுகிறது' என்பது ஜெயமோகனின் ஆணித்தரமான வாதம்.

ஜெயமோகன் தன்னளவில் முழுமையுற்று நமக்கு வெளிப்படுவது இப்படித்தான். அடிப்படைவாதத்தின் நவீனத்துவ வெளிப்பாடு.

ஜெயமோகன் தன் தொடக்க கால எழுத்து பற்றி ஒரு விவரம் தருகிறார். ஒருமுறை பிரபல பத்திரிகையில் அவர் எழுதிய ஒரு மோசமான செண்ட்டிமெண்ட் அம்சம் கொண்ட கதையைப் பாராட்டி ஐம்பது கடிதங்கள் வந்ததாம். "எனக்குத் தெரியும் அது ஒரு மோசமான சில்லியான விஷயம்னு" என்கிறார். இப்படித் தெரிந்தே, பணத்துக்காக ('சினிமா பார்க்க ஐம்பது ரூபா தேவைப்பட்டா கதை எழுதித் தருவேன்.') கதைகள் எழுதியவர்தான். கூலியைக் கொஞ்சம் கூட்டிக் கொடுத்துவிட்டால் தன் வர்க்கப் போராட்டத்தை மறந்து கலைந்து போகிற தொழிலாளியை 'லும்பன் பாட்டாளி' என்கிறார் எங்கெல்ஸ்.

ஜெயமோகனும் அதுபோல ஒரு லும்பன் படைப்பாளிதான். லும்பன் படைப்பாளியாய் இருந்து, இன்று முதிர்ந்து, படைப்புலகின் அடிப்படைக் கட்டுமானமாக (Establishment) மாறியிருக்கிறார்.

★

லும்பன் என்ற சொல் ஜெயமோகன் மீட்டெடுத்ததுதான்.

படிப்பகம்

www.padippakam.com



தினமணியில் அவர் எழுதிய 'மூன்றாவது புதுவெள்ளம்' கட்டுரையில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

அந்தச் சொல்லும் அதன் பின்னுள்ள அரசியலும் பற்றிய ஆய்வில் ஜெயமோகன் அப்பட்டமாகவே வெளிப்படுகிறார்.

Lumpen எனும் சொல்லுக்கு கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் 'உதிரி' என்று கொஞ்சம் கண்ணியமாகப் பொருள் சொல்கிறார்கள். ஜெயகாந்தன் போன்றவர்கள் தயக்கமில்லாமல் 'பொறுக்கி' என அழைக்கிறார்டுள். ஜெயமோகன் 'கடைப் பட்டோர்' என்று தூய்மைப்படுத்துகிறார்.

மலத்தைப் பார்ப்பனர் வீடுகளில் 'நெருப்பு' என்று கரந் தழைப்பார்க. அடித்தட்டு மக்கள் 'பீ' என்று போட்டுடைப் பார்கள். யார் என்ன பெயர் சொன்னாலும் அது கழிவுதான். சுவடின்றித் துடைத்தெறிய வேண்டிய கழிவு. அது போலத் தான் லும்பன் என்ற சொல்லுக்கு என்ன பொருள் சொன் ன்ாலும் அதை ஒரு ஈனச் சொல்லாகத்தான் ஜெயமோகன் பயன்படுத்துகிறார்.

அவர் தன் கட்டுரையைக் கொஞ்சம் தர்க்க ஒட்டையான புனை கதையோடு தொடங்கி, "வரலாறு காணாத ஊழலை வேரோடு சாய்த்த புதிய ஜனநாயக எழுச்சியை எண்ணி நண்பர்கள் உற்சாகம் கொள்ளும்போது என்னால் விலகி நிற் கவே முடிகிறது. தோளில் கடும் வலி" என்று முடிக்கிறார். அவருடைய அகந்தை நண்பர்களிடையேயும் தனக்கொரு மெய்காண் குணம் உண்டு என்றும், வேலைக்குதவாத தன் கையாலாகாத்தனத்தை அழுக்கில் கலவாத ஒழுக்கம் என்றும் உயர்த்திக் காட்டிக்கொள்ளவே பயன்படுகிறது. அவர் காண் கின்ற மெய் 'ஊழல் போய் ஊழல்தானே வந்துள்ளது' என் னும் பழைய கணக்கு.

தமிழக அரசியல் நீரோட்டத்தில் 1960களிலிருந்து மூன்று வெள்ளங்கள் புகுந்து அதன் நிறத்தை மாற்றியுள்ளனவாம். முதல் வெள்ளம் தி.மு.க. அரசதிகாரத்தைப் பற்றியபோது; இரண்டாவது எம்.ஜி.ஆர். பற்றியபோது; மூன்றாவது ரஜினி காந்த் ரசிகர் வெள்ளம் இந்த மூன்றும் லும்பன்கள் வெள் ளம்- அதாவது கடைப்பட்டோர் வெள்ளம். முதல் அலையின் உச்சம் கருணாநிதி. இரண்டாம் அலையின் உச்சம் ஜெய லலிதா. —இது ஜெயமோகனின் பகுப்பாய்வு.

படிப்பகம்

www.padippakam.com



லும்பன்கள் பற்றி அவர் தரும் வரைவிலக்கணம்: 'அவர்கள் அதிகம் படிக்காதவர்கள்; ஜனநாயக நடவடிக்கைகளில் நம்பிக்கையில்லாதவர்கள்; பொருளாதார ரீதியாக மிகச்சாதாரணர்கள்; எவ்வித விசேஷத் திறமையும் இல்லாதவர்கள்; பொருளீட்டலில் தோல்வி கண்டவர்கள்; தங்கள் இயலாமை காரணமாகப் புறக்கணிக்கப்பட்டவர்கள்.' இவை முதற்கட்ட கடைப்பட்டோர் பற்றிய சித்திரம். இன்று அந்த முதற்கட்ட "கடைப்பட்டோர் முதிர்ந்து சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானமாக (Establishment) மாறிவிட்டிருக்கிறார்கள். அவர்களே இன்றைய உயர்குடிகள்" என்னும் அவரது விளக்கத்தோடு சித்திரம் முற்றுப் பெறுகிறது. இந்தச் சித்திரத்தின் பரிணாம உச்சமாகத்தான் கருணாநிதி சுட்டப்படுகிறார். (உண்மையில் முதற்கட்ட கடைப்பட்டோரின் செய்விவரம் அனைத்தும் கருணாநிதியின் பன்மை வடிவமாகப் புரிபடும் விதத்திலேயே தருகிறார் என்பதை ஒரு சில சொற்களைக் கட்டுடைத்தே எளிதில் கண்டுகொள்ளலாம்.)

"முதல் கட்டத்திலும் இரண்டாவது கட்டத்திலும் நடுத்தெருவிலிருந்து விஸ்வரூபம் கொண்டெழுந்த பல நூறு கோடீஸ்வரர்களால் தமிழக அரசியல் களம் நிரம்பியுள்ளது", என்னும் வாக்கியம் குறிப்பிட்டுச் சொல்லியே ஆக வேண்டிய உண்மையாக அவருக்குப் பட்டிருக்கிறது. லும்பன்களை ஆளவிட்டால் வேறென்ன நடக்கும் என்று இடித்துக் காட்டுவதற்கான வாக்கியம்.

தமிழக அரசியல் லஞ்ச லாவண்யத்தால் முற்றாகச் சீரழிந்துவிட்டது வெட்கித் தலை குனியும்படியான உண்மை. ஆனால் ஜெயமோகன் சொல்ல வருவது அதுமட்டும் அல்ல. அல்லது அதுவல்ல. காரணம் இந்தியா இதைவிடப் பல நூறு மடங்கு சிதைந்து சீரழிந்து கிடக்கிறது. சீரழித்தவர்கள் எல்லாரும் லும்பன்கள் அல்ல. ரொம்ப ரொம்ப உயர்ந்தவர்கள்! ஆளவும் ஆட்டுவிக்கவும் பிறந்தவர்கள்! படித்தவர்கள்! பணக்காரர்கள்! ஜனநாயகத்தின்பால் நம்பிக்கை மிக்கவர்கள்!

ஜெயமோகன் உள்ளத்தில் இக்கட்டுரை கருக்கொள்ளும்போதே "ஆட்சியதிகாரத்தைப் பிடித்த பிறகு, ஊழல் புரிவதில் லும்பன்களென்ன சீமான்களென்ன. எல்லார்க்கும் ஒரே பன்றிக் குட்டைதான்" என்னும் உண்மை உரைத்திருக்க வேண்டும். அப்படியும் இதை எழுதினார் எனில் அவர்

படிப்பகம்

www.padippakam.com



கவலை லஞ்சம் பற்றியதல்ல. அரசதிகார நியமம் சீர்குலைந்தது பற்றிய ஆற்றாமைதான்.

எழுபதுகளில் தமிழ் நாட்டின் லஞ்சச் சீரழிவைப் பற்றி அவர் ஆய்வு செய்திருந்தால் அது தமிழர்களின் அன்றைய இதய வெளிப்பாட்டைப் படம் பிடித்ததாயிருக்கும். அல்லது ரஜினி ரசிகர்களின் இன்றைய திடீர் அரசியல் பிரவேசம் பற்றித் தனியே ஆய்வு செய்திருந்தால் அது ஒரு சமூகச் சுரணையுள்ளவனின் கவலையாகக் கணிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவர் செய்ததென்ன?

ரஜினி அலை என்பதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு திராவிட இயக்கத்தையும் தமிழகத்தில் அதன் வரலாற்றுத் தாக்கத்தையும் 'லும்பன் அரசியலாக'க் கொச்சைப்படுத்துகிற கேவலத்தைக் கூசாமல் செய்கிறார்.

அதுதான் அவர் அடையாளம். ஒழுக்கப் போர்வையில் பல்லிளிக்கிற மனுவாதம். மத அடிப்படைவாதம்.

'ஆட்சி என்பது படித்த, பணக்கார ஆதிக்க சக்திகளின் வேலை' என்பது அவர் சித்தாந்தம். பஞ்சைப் பராரிகளும் படிக்காத பாமரர்களும் ஆட்சியதிகாரத்தை வசப்படுத்திவிட்டார்கள் என்பது அவர் ஆற்றிக்கொள்ள முடியாத புண்.—உண்மையில் அவர் நம்புவதுபோல் 67இல் ஆட்சியைப் பிடித்தவர்கள் படிக்காதவர்களோ, ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றவர்களோ அல்லர். நடுவீதியிலிருந்து விஸ்வரூபம் எடுத்துவந்த அநாமதேயங்களும் அல்லர். ஒரு வரலாற்றுப் புரட்சிக்குத் திட்டமிடக்கூடிய மூளையுள்ளவர்கள்தாம். ஆனால் 'வீர'மில்லாதவர்கள். ஜெயமோகனின் 'அப்பன்மார்களை'க் கேள்வி கேட்டதைத் தவிர வேறெந்தத் தகுதிக் குறைவும் அற்றவர்கள். பொதுக்கோட்பாடாக இப்படிப் பல அவதூறுகளைக் கட்டுரை முழுதும் விதைத்துப் போகிறார் அவர்.

"ஆட்சி செய்யும் பொறுப்பை அதுக்குண்டானவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மற்றவர்கள் அவரவர்களுக்குண்டான கடமைகளைச் செய்துவர வேண்டும்" என்று அண்மையில் காலமான காஞ்சிப் பெரியவர் 'அருளி'ப் போந்தார். அதுதான் அவர் சாஸ்திரத்துக்குப் பொருந்திவரக் கூடியது.

1967இல் தி.மு.க. வெற்றி பெற்றதும் 'ஆசீர்வாதமும் ஆலோசனையும்' பெறச்சென்ற கருணாநிதியிடம் 'மூதறிஞர்'

படிப்பகம்

www.padippakam.com



ராஜாஜி வெகு கரிசனத்தோடு, "உங்களுக்கெல்லாம் அனுபவம் போறாது. ஆட்சி அமைக்கிற பொறுப்பை சித்த காலம் என்னண்ட விடுங்கோ. பிறகு நீங்க ஏத்துக்கலாம்" என்று சொன்னவர்தான். கொக்கின் ஒற்றைக்கால் தவமிது.

ஜெயமோகனுக்கும் இதுதான் கருத்து. இலக்கியம் எப்படி மனத்தயாரிப்பு உள்ளவர்களுக்கு மட்டுமோ, அப்படியே ஆட்சியதிகாரமும் அதற்கென்ற தயாரிப்போடு பிறந்தவர்களுக்குத் தான். இது முறியடிக்கப்பட்ட வேகமும் மீண்டும் தலையெடுக்க முடியாத அவலமும் ஆற்றிக்கொள்ள மாட்டாததாய்த் தான் இன்றும் புலம்ப வைக்கிறது.

நடுவீதி நாராயணர்கள் கோடீஸ்வரர்களானது அருவறுப்பான விஷயமாகப் படுகிறது ஜெயமோகனுக்கு. நமக்கும் தான். எல்லாருக்கும்தான். ஆனால் உலகத்திலுள்ள எல்லா கோடீஸ்வரர்களும் ஒரு கட்டத்தில் இப்படி ஆனவர்கள்தான். இந்தக் கோடீஸ்வரர்கள் ஊழலால் மட்டுமே அப்படி ஆக முடியும். மற்றவழிகள்தாம் அடைக்கப்பட்டுவிட்டனவே. லும்பன்கள் என்று ஜெயமோகானால் குறிக்கப்படுகிறவர்கள் ஒன்றும் திறமையற்றவர்களோ இயலாதவர்களோ அல்லர். அதிகார வர்க்கத்தால் உரிமை மறுக்கப்பட்டவர்களும் புறக்கணிக்கப் பட்டவர்களுமே. அவர்கள் கைக்கு அதிகாரம் வந்ததும் இன்றுவரை இறங்காமல்தானே இருக்கிறார்கள் மக்களின் வாக்குகளோடு.

அனைத்துக்கும் மேலாக, தி.மு.க. வின் அரசியல் வெற்றி காங்கிரசார் வளர்த்துவிட்டிருந்த உயர் குடித்தனத்திற்கு எதிரான அலை என்பது ஏமாற்றுத்தனமான எளிமைப்படுத்தல்.

முதலில் Sensitive ஆகவும் நுட்பமாகவும் விமர்சிக்க கற்றதாகச் சொல்லும் ஜெயமோகன் அந்தந்தக் கட்சியின் பெயரைச் சொல்லி விமர்சிக்கலாம் அவர் கௌரவத்திற்குப் பங்கம் வந்து விடாது. பெரியாரின் திராவிடர் கழகம் எப்போதும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டதில்லை. அவரை விட்டுப் பிரிந்த கட்சிகள் பெரியாரை அப்படியே பின்பற்றியதும் இல்லை. 'திராவிட' என்னும் சொல்லாலும் சில மிச்ச சொச்சங்களாலும் கட்சிவழிப் பெருமை பேசுவதாலுமே பெரியாருடன் அவைகளுக்கான உறவு. சிறையில் ஸ்லோகம் சொல்லி, மந்திரம் ஜெபித்து மனதை உறுதிப்படுத்திக்கொண்டேன் என்று சொல்லும் 'புரட்சித் தலைவி'க்கும் பெரியாருக்

படிப்பகம்

www.padippakam.com



கும் என்ன சம்பந்தம்? எனினும்கூட ஊழல் கறைகளில் அந்தக் கட்சிகள் தங்கள் கைகளை அழுக்குப்படுத்திக்கொண்டாலும், அவற்றின் செருப்புகளுக்குக் கீழேதான் மத அடிப்படைவாதம் இன்னும் காயம்பட வேண்டியிருக்கிறது.

காந்தியாரும், காங்கிரசும் இந்து மத ஏஜெண்டுகள் என்பதும், காங்கிரஸ் பார்ப்பனர்களின்– மதவாதிகளின் கூடாரம் என்பதும், விடுதலைப் போர் இந்துமத விடுதலைக்குத்தான் என்பதும் மெல்ல மெல்லத் தெளிவுப்படத் தொடங்கிய 1920 களிலிருந்தே அவற்றுக் கெதிரான போர் சென்னை மாகாணத்தில் தொடங்கிவிட்டது. தமிழர்களின் சுயமரியாதையை மீட்டெடுக்கும் போர் அது. 1922 தொடங்கி பெரியார் தம் மக்களின் சுயமரியாதை - சமதர்மத்தை மீட்டெடுக்கக் கட்டியெழுப்பிய வரலாறு ஜெயமோகன் போன்றவர்களால் அத்தனை எளிதாக இருட்டடிப்புச் செய்துவிட முடியாது.

ஒட்டுமொத்த தமிழர்களின் சூத்திரப் பட்டத்தை ஒழிக்க பெரியார் நடத்திய போரை மலையாளிகள் அங்கீகரித்ததில்லை. அங்கே நாயர் பெண்களை நம்பூதிரிகள் கட்டிக் கொள்வதும் சூத்திர இழிவு உணரப் படாததும் ஒரு காரணமாயிருக்கலாம். அந்த உறவின் காரணமாகவே சமஸ்கிருதம் போற்றப்பட்டதும் இன்னொரு காரணம். மனிதனுக்கான, தமிழனுக்கான, பெண்களுக்கான எல்லா இழிவுகளையும் முன் வைத்துப் பெரியார் நடத்திய போர் உலகின் வேறெந்தத் தனிமனிதனும் சாதிக்க முடியாத செயல். இந்த நூற்றாண்டின் வரலாற்று நாயகன் என்பது அவர் இங்கே பிறந்ததாலும் பார்ப்பனர் எதிர்ப்பாளர் என்பதாலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடிப்பதை யாராலும் தடுத்துவிட முடியவில்லை. இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பெரியாரின் சேவை அடித்தளம் போட்டுக் கொடுத்தது. ராஜாஜி 1937இல் இந்தியைத் திணித்ததும் 2000 தொடக்கப் பள்ளிகளை மூடி அடித்தட்டு மக்களுக்கான கல்வியை மறுத்ததும், 1952இல் கொண்டு வந்த குலக்கல்வித் திட்டமும், மீண்டும் 1967இல் வெடித்த இந்தி எதிர்ப்புப் போரும் உந்து விசைகளாயின. தமிழக காங்கிரசில் பார்ப்பன ஆதிக்கம் மட்டுப்பட்டாலும் அகில இந்திய அளவில் காங்கிரசுக்குள் இருந்த இந்தி ஆதிக்கம் தி.

படிப்பகம்

www.padippakam.com



மு.க.வின் வளர்சியைத் துரிதப்படுத்தியது. இந்திய அரசியல் சட்டத்தின் முதல் திருத்தமே இட ஒதுக்கீடு சம்பந்தமாகப் பெரியாரின் முயற்சியால்தான் நிறைவேறியது.

அனைத்துக்கும் மேலாக தி. மு. க. ஊட்டிய தமிழுணர்வும் தமிழ் முழக்கமும் இன்றுவரை அதன் இருப்புக்கும் இய்க்கத்துக்கும் காரணமாகிறது.

இப்படி நீண்ட போராட்டத்தின் பலனாக ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த ஒரு கட்சியை, ரஜினி ரசிகர்களின் திடீர் அலையோடு ஒப்பிடுவதும் லும்பன்களின் அர்சென்று இழிவுபடுத்துவதும் ஜெயமோகன் அறிந்தே செய்கிற இழிவு.

கழகங்களின் அதிகாரப் பற்றலைக் கொச்சைப்படுத்தும் வேகத்தில் தன் கருத்துக்கு உரம் சேர்ப்பதாக எண்ணிப் பொதுவுடைமைக் கட்சிகளைப் புகழ்கிறார். தனக்கு ஒவ்வாததான கழகங்களை இகழுகின்ற மனக் கூனல். ஆனால் உண்மை வேறு விதமாய் இருக்கிறது. 'சித்தாந்தக் கட்டமைப்பு, நடைமுறை ஒழுக்கம், நெறிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கிய பொதுவுடமைக் கட்சிகள்' 19 2க்குப் பின்னிருந்தே கழகங்களுடன் தொடர்ந்து தேர்தல் கூட்டு வைத்துக்கொண்டே வருகின்றன. எந்தச் சித்தாந்தியையும் தேர்தலும் தேர்தல் கூட்டும் வெறும் வாக்குப் பொறுக்கிகளாக, அதிகாரத் தரகர்களாகச் சுருக்கிவிடும் என்பதற்குக் கழகங்களோ, பொதுவுடைமைக் கட்சிகளோ விதிவிலக்கில்லை.

கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற அந்தக் காலத்தை ஜெயமோகன் இப்படிச் சொல்கிறார்: "அரசியலின் ஓர் அம்சம் ஊழல் என்பது ஒரு வாய்பாடு. அரசியலே ஊழல் என்று நிரூபித்தார்கள் இவர்கள்."

நாம் இதை வழிமொழியத்தான் வேண்டும். எழுபதுகளில் எங்கும் இப்படித்தான் பேச்சு. கமிஷன் போடப்பட்டது. சில முறைகேடுகள் சுட்டப்பட்டன. எந்த நிரூபணமோ, தண்டனையோ இல்லை. எனினும், தமிழ்நாடு ஒரு புதிய கலாச்சாரத்தை - ஊழல் கலாச்சாரத்தை அன்றாட வாழ்க்கையாக்கிக் கொண்டது என்பதாகப் பலரும் நம்ப வைக்கப் பட்டார்கள்; நம்பினார்கள். 'சோ' ராமசாமி அதைத் திறம்படச் செய்தார். கூவத்தின் நாற்றத்தை தி.மு க. அரசின் மீது முழுமையாக ஏற்றினார்— இன்று ஈழப் புலிகளுக்கு எதி

படிப்பகம்

www.padippakam.com



ராக என்னும் பெயரில் ஈழத் தமிழர்களையே இந்த அரசும் மக்களும் புறக்கணிக்கத் துணியும் அளவுக்கு: அரசு மீண்டுமொரு முறை தன் பதவியைப் பறிகொடுத்துவிடாமல் இருக்கவும், மக்கள் தங்கள் ஆய்வறிவின்மைக்கு அஞ்சலி செலுத்தவும்– புறக்கணிக்கத் துணியும் அளவுக்கு 'சோ' ஒரு 'பொதுக் கருத்தை' ஊதிக் காட்டுகிறாரே அதைப்போல அன்றும் செய்தார். மற்ற பத்திரிகைகளும் செய்தன; செய்கின்றன. இன்றைய Judicial Activism போல அன்று 'சாமானியன் அரசு' மீது Media Activism வேலை செய்தது. ஆனால் அதே அளவு ஜெயலலிதா அரசு ஊழல் பற்றி எழுதப்பட்டதா என்பது ஆய்வுக்குரியது. ஆட்சி கவிழ்ந்த பின்னால் குப்பையைக் கிளறிக் கொட்டுகிறார்கள். 35 ஆயிரம் கோடி பங்கு பத்திர ஊழலில் சிக்கிய இந்நாட்டு வங்கிகள், அயல்நாட்டு வங்கிகள், ரிசர்வ் வங்கி, அதன் தலைவர் ரங்கராஜன்– அனைத்தும் பேசப்படாமல், தண்டிக்கப்படாமல், தொகை வசூலிக்கப்படாமல் மிகுந்த ராஜதந்திர கம்பீரத்தோடு ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டனவே! நீதிமன்றச் செயல் முடுக்கம்கூட அங்கு முடங்கிவிட்டது. நடப்பதும் நடக்காததும் ஒரு நாடகம்போல்தான். ஆக, ஊழலின் நம்பகத்தன்மையையும் பரிமாணங்களையும் ஊடகங்களும் தங்கள் தேவைக்கேற்ப நிர்ணயிக்கின்றன.

கலைஞரின் கட்–அவுட் கலாச்சாரம், போஸ்டர் கலாச்சாரம், மலர்க் கிரீடம் கலாச்சாரம் யாவும் பல நூறு மடங்கு பெருகி இந்தியத் தேசிய கலாச்சாரமாகிவிட்டன. இன்று அவரே அவைகளை விட்டுவிட அல்லது குறைத்துக்கொள்ளச் சொல்லி அன்புக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்!

இன்றைக்கு இந்திய அரசியல் களம் சிவசேனை புகுந்த மைதானம் மாதிரி உருக்குலைந்து கிடக்கும்போது, கலைஞரின் ஆட்சி 70களிலிருந்தே சில எளிய சூத்திரங்களோடு, புதிர்த்தன்மை இல்லாமல் நடந்து கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதிலிருந்து எதிலும் ஒரு சமச்சீர்மை பேணப் படுகிறது. ஆட்சியில் தொடர்ந்து மத நல்லிணக்கம் காக்கப் படுகிறது. சாதி இணக்கம், குழு நல்லிணக்கம், சிறுபான்மையினர் நலம், பூசலற்ற அமைச்சரவை எனப் பலவும் ஒப்பீட்டளவில் சரியாகவே பராமரிக்கப்படுகின்றன. நடந்த சில அசம்பாவிதங்கள் கடலில் சிறு மழை போல.

படிப்பகம்

www.padippakam.com



கலைஞர் தன் ஆட்சிக்காலத்தில் மதுக்கடைகளைத் திறந்தது, காவிரிநீர் சிக்கலை 70களில் தீர்க்கக் கிடைத்த தருணங்களைத் தவறவிட்டது, தமிழ் மக்களை ஜனநாயக மரபுக்கு மன ரீதியாக முன்னெடுத்துச் செல்லாமல் மலர்க்கிரீடம்- வீர வாள் என்று முடியாட்சிப் பெருமைகளில் மூழ்க வைத்திருப்பது போன்ற இன நலன் பாதிக்கும் பிழைகளைச் செய்தவர்தான். கடைசி இரு பிழைகளை இப்போதுகூட சரிசெய்து விடலாம். முதல் பிழை வரலாற்றுப் பிழையாகவே நிற்கும்.

இவர் தமிழைச் சொல்லி ஆட்சியைப் பிடித்தவர். தமிழ் இன்னும் தொங்கலில்தான். 1925இல் நீதிக்கட்சி அமைச்சர் சென்னை பல்கலைக் கழகம் பார்ப்பன ஆதிக்கத்தால் தமிழைப் புறக்கணித்த கதையைச் சொல்லி தமிழுக்காகப் புதிய பல்கலைக் கழகம் தொடங்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கிறார். (இவ்விதழில் வந்துள்ள ‘தமிழ் மொழி வளர்ச்சி’ பார்க்க.) 997இல் அதே தமிழுக்காகவே குரல் கொடுக்கும் அவலம். தமிழ்நாட்டில் பார்ப்பன ஆதிக்கம் அரசியல் தளத்தில் ஒடுக்கப்பட்டுவிட்டாலும் கருத்தியல் தளத்தில் இன்னும் அறைகூவலொடுதான் நிற்கிறது. தமிழில் பெயர்ப் பலகை வைப்பதைத் தமிழிலேயே கிண்டல் செய்யும் பார்ப்பனர்கள்.

---

**ஜெயமோகனுக்கு ஒரு சொல்**

கடைப்பட்டோர் வெள்ளத்தின் முதல் அலை உச்சமான கருணாநிதி தலைமையில் திருமணம் செய்து, இரண்டாவது உச்சமான ஜெயலலிதாவால் பேணப்பட்டவருடைய இதழ்தான் ‘புதிய பார்வை’. ஜெயமோகனின் கணிப்பில் நடுவீதியிலிருந்து விஸ்வரூபம் கொண்டெழுந்த சில நூறு கோடீஸ்வரர்களில் அவரும் ஒருவர். அவர் இதழில்தான் ஜெயமோகனின் நேர்காணல்! யாரோடு அமர்வது யார் பரிசைப் பெறுவது என்பதில் கற்பு காக்கும் ஜெயமோகன் ஏச்சுக்காளாக்கிய இதழ் கற்பை என்ன செய்தார்?

---

“எனக்கு ‘தமிழ் வேண்டும்’ என்று சொல்லும் தமிழ்க்குடிமகனும் வேண்டும்; ‘ஆங்கிலம் வேண்டும்’ என்று சொல்லும் பழனிவேல்ராஜனும்” வேண்டும் என்று கண்ணாமூச்சி அரசி

படிப்பகம்

Kavithaasaran, Nov. to Jan. '97, Regd.No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90

www.padippakam.com



யல் நடத்தும் கலைஞர். இதுவரை எம்.ஜி.ஆர். தமிழுக்குச் செய்த அளவுகூட இவர் செய்யவில்லை. எம்.ஜி.ஆர். க்கு அடையாளச் சிக்கல் இருந்தது. செய்ய வேண்டியதாயிற்று. இவருக்கு அதுவும் இல்லை. ஒருவர் எந்தக் கோரிக்கைக்காகப் போராடினாரோ, அவரே ஆட்சியைப் பிடித்ததும் அந்தக் கோரிக்கையைக் குழிதோண்டிப் புதைத்ததற்கு உலக வரலாற்றில் பல சான்றுகளைத் தொகுக்கமுடியும். தமிழைப் பொறுத்தவரை கலைஞரின் நிலையும் அதுதானா?

ஒற்றை வரியில், "இனி எல்லாம் தமிழ்தான்; ஒரு மொழிப் பாடமாக யாரும் எந்த மொழியையும் கற்றுக் கொள்ளலாம்" என்று விதி செய்ய, நடைமுறைப்படுத்த, ஜனநாயக முறைப்படி எல்லா வழியும் பலமும் இருந்தும் இவர் யாருடைய அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறார்?

இத்தனை எதிர்பார்ப்போடு நாம் காத்திருக்க இந்தக் கணத்தில் இந்த மனிதர் மட்டும்தான் இருக்கிறார் என்பது நம் நல்ல காலமா? கேடு காலமா?

கலைஞர் கருணாநிதியின் மேல் நமக்கு ஜெயமோகனுக்குள்ளதைவிட நூறு மடங்கு கேள்விகளும், விமர்சனங்களும், கண்டனங்களும் உண்டு. அதே சமயம் கோரிக்கைகளும்; வேறு வழியில்லாததால் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் உண்டு.

ஆனால் ஜெயமோகனுக்கு விமர்சனங்கள் மட்டுமே உண்டு- கருணாநிதியை நிராகரிப்பதற்கான விமர்சனம். அவருடைய அடையாளம் அவருக்கு வழங்கிய சுதந்திரம். ●

Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras-19 and Published at 580, T.H. Road, Madras-2 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்